80—பக்கங்கள்.

ஓம் பரப்பிரம்மணே நம :

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும், ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
 திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-8.	சென்னை ஸ்ரீமுகஸு பங்குனிமீ 1உ	இதழ் 96.
Vol. 8.	1934-ம்ஸு மார்ச்மீ 15உ	No. 96.

ஆனந்த  தர்சனம்

"பிறவித் துயரற ஞானத்துள் நின்று" விளங்குதற்குப் பகவத் பக்தியே சாதனம். பகவத்கீதையில் யோகம். ஞானம், கர்மம் முதலிய பல விஷயங்களைப்பற்றி அர்ச்சுனனுக்கு கண்ணன் சொல்லி வரும்போது, பகவான் மாயையில் அகப்படாதவர்கள் கிடையாதென்றும், மாயையை வென்றாலன்றி ஈசுவர தரிசனம் செய்வது ஸாத்தியமன்றென்றும் கூறிய காலையில், அர்ச்சுனன், "பின் எப்படித்தான் மாயை விலகும்?" என, அதற்குப் பகவான் ஈசுவர பக்தியினால்தான் மாயையாகிற வலையை யறுக்கலா மென்றனர். ஆதலின், யோகம், ஞானம் முதலிய ஸகல மார்க்கங்களும் பக்தி யென்பதில்லையானால் பயன்படமாட்டா. ஆதலின், குடும்பிக்கும், சன்னியாசிக்கும், போகிக்கும், யோகிக்கும், எழைக்கும். தனாட்டியனுக்கும, ஸகல லோகங்களிலுமுள்ள ஸகல ஜீவராசிகளுக்கும் பகவத் பக்தியைத் தவிர வேறு சுலபமான மார்க்கமொன்றுமில்லை. எவனொருவன் ஈசுவர பக்தியைக் கொள்ளுகிறானோ அவனுக்குப் பரமபதம் நிச்சயம். ஈசுவர பக்தி யில்லாமல் எந்தக் காரியமும் நிறைவேறமாட்டா. எந்த குலத்திற் பிறந்தாலும் பக்தி செய்கிறவனிடமே பகவானுக்குப் பிரீதி.

ஃ

"எனக்கு இனிக் கதியேன் சொல்லாய்? என்னையாளுடைய கோவே" முன்காலத்தில் மார்க்கண்டேயர் தாம் வேதாந்த சாஸ்திரங்களைக் கற்றுவிட்ட

இன்ப நுகர்ச்சிக்காகப் பெறும் துன்ப நுகர்ச்சிகள் எவ்வளவு?

தாயும், இனி நமக்கு வேண்டியதொன்றுமில்லை யென்றும் நினைத்து மக மேருவின் சிகரத்தில் உட்கார்ந்து கொண்டார். உடனே ஒரு பிரமாதமான பிரளய முண்டாய் எங்கும் ஜலக்காடா யிருந்தது. அதில் ஆலிலைமேல் சிறு குழந்தையொன்று பள்ளிகொண்டிருப்பதைக் கண்டு மாயையினால் அதை இன்னதென்று தெரிந்துகொள்ளாமல், 'ஐயோ! ஓர் குழந்தை தத்தளிக்கிறதே! அதைக் காப்பாற்றாவிடில் இன்னும் ஒரு நிமிஷத்துக்குள் முழுகிப் போகுமே என்று இரக்கங்கொண்டு குழந்தையினண்டை வந்து சேர்ந்தார். குழந்தை ஓர் மூச்சை உள்ளே இழுத்தது, மார்க்கண்டேயரும் அந்த மூச்சு வழியாகக் குழந்தையின் உள்ளே போய்விட்டார். உடனே அங்கே பூலோகத்தைக் கண்டார். ஜலப் பிரளயத்திற்குத் தப்பிப் பிழைத்ததாக மகிழ்ந்தார். மறுநிமிஷம் அந்தக் குழந்தை கொட்டாவிவிட, மார்க்கண்டேயர் வாய் வழியாக வெளியே வந்து சமுத்திரத்தில் விழுந்தார். கரைகாணாது தத்தளித்தார். நீந்தினார். மறுபடியும் குழந்தையைக் கண்டார். உள்ளேசென்றார். இம் மாதிரி எழுதடவை உள்ளே சென்று வெளியே வந்து தத்தளித்து ஒன்றும் தோன்றாமல் வஸிஷ்டர் முதலிய மகரிஷிகளைக்கண்டு, "நீங்கள் எழு பிரளயத்துக்கும் எங்கே யிருந்தீர்கள்?—எப்படித் தப்பித்துக்கொண்டீர்கள்?" என, அவர்கள் "மார்க்கண்டேயரே! உமக்கு சித்தம் பேதித்ததா? என்ன?—பிரளயமாவது—தப்பிக்கிறதாவது" என்றார்கள். உடனே மார்க்கண்டேயருக்கு ஞானமுண்டாகி, தான் வேதாந்த சாஸ்திரங்களை யறிந்தும் பிரயோஜனமில்லை; இன்னும் பகவான் மாயையிலிருந்தும் விடுபடவில்லை யென்று சாக்ஷாத் ஸ்ரீ வாசுதேவனைப் பிரார்த்தித்துப் பக்தி செய்தார். உடனே மாயையினின்றும் விடுபட்டார். ஆதலின், பகவத் பக்தி செய்யாதவர்கள் மகரிஷியாயினும் உபயோகமில்லை ஈசுவர பக்தி யொன்றைத் தவிர வேறு எந்த வகையாலும் மாயை வெல்லுதலரிது.

ஃ

"ஆலினிலைப் பாலகனாய் அன்று உலகமுண்டவனே" என்றவாறு, பகவான் பிரளய காலத்தில் எப்படி விளங்குகிறார்? ஓர் ஆலிலைமேல் குழந்தை யுருவாய்ப் பள்ளிகொண்டு தம்முடைய காலின் கட்டை விரலை வாயில் வைத்துக்கொண்டு ருசி பார்க்கிறார். (இது குழந்தைகளின் சுபாவம்.) இதற்குக் காரணமென்னவெனில், பிரளய காலத்தில் ஸகல அண்ட சராசரங்களும் ஸர்வ ஜீவகோடிகளும் பகவானது திருவயிற்றிலிருக்கின்றன. அவைகளை ஸம்ரக்ஷிக்கும்பொருட்டு பகவான் தம்முடைய கட்டை விரலிலுள்ள அமிர்தத்தை உள்ளே செலுத்துகிறார். இன்னும் ஓர் காரணமுண்டு. அடியார்களும் பக்தர்களும் பகவத் சரணாரவிந்தங்களிலிருந்து ஒழுகும் அமிர்தத்தை மனதினால் பானம் பண்ணுவது சகஜமாதலின், பரமபதி

நமது உறவினரிற் சிலர் நமது வீட்டுக்குத் திடீர் என்று வருகிறார்கள். எதற்காக வந்தீர்களென்றால் அவர்கள் பதில் சொல்வதில்லை. ஏதோ ஜலமோ, காபியோ அருந்திச் சென்றுவிடுகிறார்கள். அவர்களின் சங்கதிகள் அவ்வளவு மூடமந்திரமாக இருக்கின்றன. சிலரது வீட்டுச் சங்கதிகளோ அந்த வீட்டுக்காரியாகிய கலக நாரியால் தெருமுற்றும் பறையடிக்கப் படுகின்றன.

தம்முடைய காற்கட்டை விரலிலுள்ள அமிர்தம் அவ்வளவு சுவையா யிருக்கிறதா பார்ப்போம் என்று அதை ருசி பார்க்கிறாராம்.

ஃ

"எப்படி வைத்தாலும் நன்றே நின்கருணை" என்று இறைவனையே யாவற்றுக்கும் தஞ்சமாக நம்பிவிடுவதே பரம சுகம். வருவன எல்லாம்— வருக என்று தைரியமாக இருக்கப்பெறின், ஈசன் அருள்பற்றிய உதவி தானாக வருதலைப் பார்ப்போம். அவரையே சரணமாக அடைந்து, அவரையே நம்பி உலக கஷ்டங்களுடன் போர் புரிகிறவர்களுக்கு அவர் உதவி எப்போதும் எதிரே நிற்பதாகும். ஸத்குணவந்தனொருவன் நீடிய துயரத்திற்கு உட்பட்டு மிக்க விசாரத்துடன் வருந்தும் காலத்தில் கடவுளின் அடைக்கலமே தனக்கு உற்ற துணையென்று தெளிவாய் அறிவான். மாறி மாறிக் கொண்டிருக்கும் இவ்வுலகத்தின்கண் நீடிய சாந்தமும், சமாதானமும் இல்லையெனவும் நன்கு தெரிந்துகொள்வான்.

ஃ

"ஒன்று போக மற்றொன்று" ஒரு சோதனை, ஒரு துன்பம் வந்து தணிய, மற்றொன்று அதன் ஸ்தானத்திற்கு வருகிறது. ஒன்றில் திருப்தி பெற்று மகிழும்போது, அந்த நிமிஷமே அந்த சந்தோஷத்தைக் குறைப்பதற்கு மற்றொரு ஸம்பவம் தோன்றிக்கொள்கிறது. தன்னுள்ளே குறைகள் கொண்டு அதிருப்தியோடும் வருந்துபவர்கள் ஏழையிலும் உண்டு; தனவானிலுமுண்டு. தமது கவலைகள் அனைத்தையும் பகவானிடத்தில் ஒப்புவித்து விடுதலே சாந்தமடைவதற்கு வழி.

ஃ

"தெரியேன் பாலகனாய்ப் பல தீமைகள் செய்துவிட்டேன்" என்றபடி, ஒரு தீய சிந்தை முதலிலே மனதில் படும். பின்பு அது விஸ்தரிக்கும். பின்பு மனம் அதை நினைத்து நினைத்துத் தீய பாவத்தைச் சித்திரிக்கும். பின்பு அதில் ருசி தோன்றி ஆவல் எழும். பின்பு அந்தத் தீய ஆவலின் வசமாகிவிடும். இவ்வண்ணம் மெல்ல மெல்ல அது பலப்பட்டு நம்மைத் துன்மார்க்கத்திற்கு அடிமைப்படுத்திவிடுகிறது. நம்முடைய மனோபாவத்திற்குத் தக்கபடி பிறர் குற்றங்களையும் குணங்களையும் கிரகிக்கிறோம். அவ்விதமே நமது தகாத செயல்களையும், அஞ்ஞான கிருத்தியங்களையும் நமது தாழ்ந்த மனோபாவத்தால் கண்டிக்காதிருந்து விடுகிறோம். தீயவற்றில் நமக்கு உண்டான பற்றுதலினால் அதைச் சீர்தூக்கிப் பார்க்கும் யோக்கியதை நம்மிலே குன்றிவிடுகிறது. இதிலிருந்தும் நாம் பகவானை மறந்து பாவ மூட்டையின் சுமையைப் பெருக்கிக் கொள்கிறோம். தன்னை அடியார்க்கு அடியனாகவும், எல்லோருக்கும் அடிமையாகவும், அல்ப வஸ்துவாகவும் கருதாதவனுக்கு உபசாந்தம் நீடித்துநிற்காது. அவன் பகவத் பக்தியைச்செய்ய முடியாது. பகவானுக்கும், அவர் படைத்த உலகுக்கும் கைங்கரியம் செய்யவே இங்குபிறந்தது; மற்றபடி அரசு ஆள்வதற்கன்று. உழைக்கவும் வருந்தவும்

"ஆலகசாலி" என்பது திரு. வெ. ப. சு. அவர்களின் மொழிபெயர்ப்பில் சில மாறுதல்கள் கொண்டதாகும்.

சரீரம் எடுத்ததன்றி சோம்பித் திரியவும் பயனற்ற சொற்களைச் சொல்லவும் அன்ரும்.

ஃ

"இனிது இனிது ஏகாந்தம் இனிது" ஏகாந்த வாழ்வில்தான் ஈசனின் அருளுக்கு ஏற்றதானவற்றைச் செய்ய இயலும். தனித்த இடத்தில் நிற்பதிலே,தனது பாவங்களை வாய்விட்டுக் கூறி நன்றாக அனுதாபப்படவும், கடவுளிடத்து அன்புகொண்டு உருகவும் கூடுமானதாகும். ஞான வழியின் இரகசியங்கள் ஏகாந்த வாழ்வில்தான் சிறிது சிறிதாகப் புலனாகி மனம் தூய்மை பெற்று பகவானின் பாதபத்மங்களையடைய வழி தோற்றுவிக்கும். எவ்வளவுக்கு மனம் உலகப் பற்றுதல்களினின்றும் விலகி ஏகாந்தத்தை ஆசிக்கின்றதோ அவ்வளவுக்கு பகவானின் பக்கலில் சீக்கிரம் நெருங்கிச் சேரலாம். ஆகவே, மனோசிந்தனையை முற்றிலும் பகவானிடத்தில் செலுத்தக்கடவோம். இதுவரையில் தவறி நடந்ததற்கும், செய்யாதுபோன நற்கருமங்கட்கும் நெஞ்சிலே அனுதாபமுடையோராகிப் பகவானைச் சரணமடைவோமாக. ஓம் தத்ஸத்.

நேசித்தலும் திட்டுதலும்.

பெண்கள் ஒருவருக்கொருவர் நேசித்துக் கொள்வதில் வெகு தீவிரமுடையவர்கள். சதா ஒரு பெண்ணை இன்னொரு பெண் சுற்றியபடியே நிற்பாள். இந்த வீட்டு இராஜாம்பாளும் அந்தவீட்டு அமிர்தம்மாளும்ஆற்றங்கரைக்குப் போவது முதல் அடுப்பு ஊதும் வரையில் ஒருவருக்கொருவர் வெகு துணையாக இருப்பார்கள். சிற்சில சங்கதிகளில் பிணக்கு நேர்ந்தால் இந்த அம்பாள் அந்த அம்பாளை 'எங்கள் வயிறு எரியுதே' என்று நன்றாகப் பேசி விடுவாள். அதைக்கேட்ட அந்த அம்பாளுக்கு நெஞ்சிலே அப்பேச்சுகள் சுருக்கென்று தைத்துக் கனத்த கோபமாகிவிடும். அதோடு ஒருவர் வீட்டுக்கு ஒருவர் போகாமல் நின்று விடுவர். பிறகு சில நாள் கழிந்து மறுபடியும் கூடிக்கொள்வர். மறுபடியும் ஒரு சண்டை வந்து "உன் மூஞ்சியைப் பாரு, விஸ்வாசம் கெட்ட நாயே"-என்று திட்டுகள் ஆரம்பமாகும். உடனே கோபத்தால் பிரிந்து விடுவர். நேசிப்பதும் வெகு சீக்கிரமே; திட்டுவதும் சண்டை பிடிப்பதும் வெகு துரிதத்திலேதான். பிறகு கூடிக் கொள்வதும் அரை நிமிஷத்தில்!

எவ்வளவோ பெரிய மனிதர்கள் வெகு பிரபலமாய் வாழ்ந்த தெருவில் இன்று நாயும் பூனையும் திரிகின்றன. தெருவின்பேரைப் புகழுடன் கூற ஒரு மனிதரையும் அங்கு காணோம்.

"அமிர்த குணபோதினி"யின்

ஒன்பதாவது ஆண்டு.

நமது அன்பிற்கினிய நேயர்கட்கு ஓர் சந்தோஷச் செய்தி! அடுத்த சித்திரை மாதத்திலிருந்தும் நமது "அமிர்த குணபோதினி" ஒன்பதாம் வயதுக்கு உயர்ந்து விடுகின்றாள். இடையிலே உண்டான ஒரு சோதனையின் பயனாய் 64-பக்கங்களில் வெளியான "அமிர்தினி" இப்பொழுது முன்போலவே 80-பக்கங்களுடனும் ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசிக்கின்றாள். இனி என்றும் 80-பக்கங்களுடனேயே வெளி வருவாள். ஒன்பதாம் ஆண்டில் விசேஷித்த சித்திரப் படங்களுடனும் உயர்நலஞ்சார்ந்த விஷயங்களுடனும் பரிமளிப்பாள். அனுபவஞான "அமிர்த குணபோதினி" மாந்தரின் மனத்திருளை நீக்கி மகிழ்விப்பதில் மகா சிரேஷ்டமான தென்பதை யாரே அறியாதார்? ஒன்பதாம் வருடத்தில் இன்னும் விசேஷித்த வனப்புடன் உன்னதம் தரும். என்றென்றைக்கும் நமது அன்பர்கள் "அமிர்த குணபோதினி"யின் சந்தாதாரர்களாகவே ஜ்வலித்து அமிர்த டானிக்கை மாதந்தோறும் சுவைத்து இன்புறக் கோருகிறோம்.

ஃ

ஒன்பதாம் வருட சந்தாவை மணியாடர் மூலமாகவே செலுத்துமாறு வேண்டிக்கொண்டு எதிர்பார்க்கின்றோம். ஏப்ரல் மாதம் 2-ம் தேதிக்குள்ளாக நமக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டுகிறோம். இந்தத் தேதிக்குள் புதுவருட சந்தாவைச் செலுத்துபவர்களுக்கு, நாம் சித்திரைமாத ஸஞ்சிகையை வழக்கம் போல் தபாலில் அனுப்பி விடுகிறோம். மேற்கண்டபடி 2-4-1934-க்குள் மணியாடரில் அனுப்பாதவர்களுக்கு ஒன்பதாம் வருடத்தின் முதலாவதான சித்திரைமாத ஸஞ்சிகையைப் புது வருட சந்தாவுக்கு வி. பி. யில் அனுப்பி வைக்கின்றோம். அன்பர்கள் உடனே

வெகு சமத்காரமாய்த் தங்களின் தவறுகளையும், நன்றி மறந்த இழிவுகளையும் மறைத்துச் சிலர் கடிதம் விஸ்தாரமாய் வரைந்து தாங்கள் நிரபராதிகளென்று காட்ட விரும்புகிறார்கள். அவர்களிடத்து மனம் மாறி வெறுப்பு கொண்டவர்கள் அக்கடிதத்தை ஒரு யுக்திவாதமான கடிதமாகவே பாவித்து, அக்கடிதத்தின் விஷயங்களை உண்மையெனக் கொள்ளாத முடிவுக்கு வருகிறார்கள். கடிதத்தால் ஏமாறுவதே யில்லை.

வி. பி.யை ஏற்றுக்கொண்டு புது சந்தாவைச் செலுத்தி நமது முயற்சிகளுக்கு ஊக்கமூட்டிக் கௌரவிக்க வேண்டுகிறோம்.

ஃ

வெளிநாடுகளிலுள்ள கையொப்ப நேயர்கள் இந்தப் பங்குனி மாத ஸஞ்சிகையைப் பெற்றதும் ஒன்பதாம் ஆண்டின் புது வருட சந்தாவை அனுப்பிவைப்பது உத்தமமாகும். அவ்விதம் அனுப்பினால்தான் அவர்களுக்கும் பத்திரிகை தாமதமின்றிக் கிடைக்க ஏதுவாகும். அவர்களின் புது வருட சந்தா நமக்கு வந்து சேர்ந்த பின்னரே சித்திரைமாத ஸஞ்சிகையை அனுப்பப்படும். புது வருட சந்தாவைக் குறித்த காலத்தில் செலுத்தாமல், சித்திரை மாத ஸஞ்சிகை இன்னும் வரவில்லையே யென்று வியாகூலப் படுவதாகில் அது அன்னோரின் தவறுதலேயாகும். ஆதலின், இப்பத்திரிகையைப் பெற்றதும் அனுப்புமாறு மற்றொரு முறையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம். வெளி நாடுகளுக்கு வி. பி. இல்லை. 9-4-1934-க்குள்ளாக நமக்குச் சேரும்படி புது வருட சந்தாவை அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

ஃ

☞ எல்லா மணியாடர்களும், சந்தாத் தொகைகளும்-'மானேஜர்" "அமிர்த குணபோதினி" ஆபீஸ் 158-A. பிராட்வே சென்னை. என்று விலாஸமிட்டு அனுப்பப்படவேண்டும். ஆ! ஒன்பதாம் வருடத்திய "அமிர்த குணபோதினி" எவ்வளவோ உன்னதமாய் மேன்மை கொண்டிலங்கும். அதனை ஆர்வத்துடனும் பெற்று ஆனந்திக்கும் நல்ல அதிர்ஷ்டம் நமது அன்பர்களுக்கு இருக்க வேண்டுமென்று மனஸ்பூர்வமாய் விரும்புகிறோம். தாங்கள் வீட்டிலில்லாத நேரங்களில் வி. பி. வந்தால், தொகையைச் செலுத்தி வி. பி. யைப் பெற்றுக்கோள்ளுமாறு வீட்டினரிடம் முன்பே தெரிவித்துவிட்டுச் செல்லுதல் நலமாகும். புது வருடம் நமது அன்பர்கள் அனைவருக்கும் விசேஷித்த நன்மையையும், பூரண வெற்றியையும் நல்குமாறு பரம கருணாநிதியாகிய பகவானைப் பிரார்த்திக்கின்றோம். யாவும் அவன் அருள்.

எஸ். ஜீ. இராமாநுஜலு நாயுடு,

பத்திராசியர்.

ஒரு பிரபல நாவலாசிரியரின் வாக்கு:—"நான் அந்த நாவலை இதுவரை எதுமே எழுதவில்லை. எனினும், விரைவில் பூர்த்தி செய்துவிடுவேன். கதை மனதில் ஆதிமுதல் அந்தம்வரையில் பூர்த்தியாகிவிட்டதால்தான் இவ்வளவு தைரியமாகச் சொல்வது. யோசிக்கவேண்டிய பாகமெல்லாம் முடிந்துவிட்டன. இனி எழுதுவதொன்றே பாக்கி."

அமிர்தகுணபோதினி

ஸ்ரீமுகஸு பங்குனிமீ 1௳

உழைப்பாளரை அவமதித்து உழைப்பை மட்டும் விரும்புதல் சரியா?

ஆராய்ச்சியாளருக்கு அதிசயமாகப் புலனுகும் ஒரு விஷயம்,—அதனையே வழக்கமாகக் கொண்டிருப்போருக்கு,—சாதாரணத்தன்மையதாகவே தோன்றும். எத்தகைய தீயதும் பழகிப்போய்விடுவதில், அதிலுள்ள குற்றங் குறைகள் அவ்வளவாக மனதில் தைப்பதில்லை. உழைப்பாளரை மிக்க ஈனமாகவும் தாழ்வாகவும் அவமதித்துவிட்டு, அன்னோர் அதிநுட்பத்துடனும் ஸமத்காரமாகவும் செய்யும் உழைப்பை (தொழிலை) மட்டும் ஆவலுடன் விரும்பி ஏற்றுக்கொள்ளக் காண்கின்றோம். இது ஜனஸமூகம் செய்யும் பெருந் தவறுகளுள் ஒன்றும். ஒரு நற்குடும்பத்தில் மருகியும் ஒரு உழைப்பாளிபோன்றவளேயாவள். அவளால்தான் சந்ததி பெருகித் தழைத்தோங்க வேண்டும். ஆனால், மாமியோ தனது மருகியை மிக்க கேவலமாகவும், கொடுமையாகவும் நடத்திப் பகைத்து வெறுக்கின்றாள். மருகியால் செய்யப்படும் சம்சார உழைப்பை மட்டும் பூர்ணமாகப் பெற்றுக்கொண்டு, அவளை மாத்திரம் அலக்ஷியம் செய்வதேனோ? ஆடவர் தமக்கு வாழ்க்கைத் துணைவியாய் வந்த நாயகியின் அன்புள்ள பணிவிடைகளான உழைப்பை மட்டும் அத்தியாவசியமானதாக விரும்பி ஏற்று, அதன்பின் உழைப்பாளியான அந்நல்லாளை ஈனமாகவும் மிருகத்தினுங் கேடாகவும் நோக்குவதும், கொடூரமாக நடத்துவதும் வியப்பன்றோ? உழைப்பாளியான குடும்பத் தலைவர் அனைவரையும் ஆதரித்து ஸம்ரக்ஷணை செய்துவர, அவரது உழைப்பில் மகிழ்ந்து குந்திப் புசித்துக் கொண்டுள்ள வீட்டினர், அவ்வுழைப்பாளியை மட்டும் பேதமாகவும், தங்களை அவ்வளவாகக் கவனிக்கவில்லையென்றும் பல குறைகள் கூறிப் பகைத்து விசுவாசமில்லாமற் போவதென்னே?

ஃ

நாவிதனின் க்ஷவர உழைப்பை (தொழிலை) மிக மிக விரும்பி ஏற்பதும், பின்னர் அந்த உழைப்பாளியை அதிக இழிவாகவும்

அற்பமாகவும் தாழ்த்துவதும் வெகு விநோதமே. அந்த நாவிதனே வைத்திய பண்டிதராகில், அவரிடம் வைத்தியம் செய்துகொண்டு அவரது உழைப்பை ஏற்றவாறே, மற்றொரு புறத்தில் அந்த உழைப்பாளியைத் தாழ்த்திப் பேசுதலும் இல்லாமலில்லை. வண்ணார்களின் சலவைத் தொழிலின் உழைப்பை ஏற்றுத் தங்களை அலங்கரித்துக்கொண்டு, அந்த உழைப்பாளியை மட்டும் தாழ்த்தி அவமதிக்கின்றனர். தன்னைத் தாங்கும் பாதரக்ஷை வழி நடுவிலே அறுபடில், பதிலுக்குப் பதில் தான் அதனைத் தூக்கிச் செல்லும்படி நேரும் சமயமும் உண்டு. அப்பொழுது மாத்திரம் சக்கிலிய உழைப்பாளியைத் தேடி எவ்வளவு தூரமாயினும் சென்று, அவனிடம் பாதரக்ஷையைச் செப்பனிடுதலான அவனது உழைப்பை விருப்பமாய் ஏற்று, அந்த அவசரம் தீர்ந்ததுமே அந்த உழைப்பாளியை இழிவாகக் கருதுவதும் நாளைக்கும் நடப்பதே. கொல்லத்துக்காரன், கல்தச்சன், வாட்காரன், தச்சன், ஓட்டுக்காரன் முதலிய உழைப்பாளரை (தொழிலாளிகளை)க் கொண்டு சிறந்த வீட்டைக் கட்டிக்கொள்வதில் அவர்களின் உழைப்பை ஆவலுடன் கோருவர். ஆனால், அதே சமயம் அவர்களை அன்றாட வயிற்றுப் பிழைப்புக் கூலிகளாக என்னும் ஈன வழக்கமும் இருந்து வருகிறது. உழைப்பை மட்டும் இரு கையேந்திப் பெற்றுக்கொண்டு, அவ்விதம் உழைக்கு உழைப்பாளியை மட்டும் கீழோனாக அவமதிப்பது சரியாமோ? உழைப்பாளிகளான தொழிலாளர்களைக்கொண்டு அவர்களது தொழில்களின் (உழைப்பின்) மூலமாகவே கனத்த லாபம் தேடிப் பூரித்து, பின்னர் அந்த உழைப்பாளிகளைத் துரும்பாக மதித்துத் தங்களுக்குள் அடங்கிச் சம்பளம், கூலி பெற்றுப் பிழைக்கும் அடிமைகளாகவும், சிறு பூச்சிகளாகவும் இழிவுபடுத்துவது தக்கதோ? உழைப்பு வேறு, உழைப்பாளர் வேறா? ஒன்றைமட்டும் விரும்பி உயர்த்துவதும், மற்றொன்றைப் பழித்து அற்பமாகத் தாழ்த்துவதும் சுயநலத்தாலா? அல்லது சுயநலக் கேட்டினாலா? உழைப்பாளரைத் தாழ்த்துவது உழைப்பைத் தாழ்த்தும் தர்ம விரோதமான செய்கையாகாதோ? உழைப்பாளரின் உயர்வினை உரைக்கவுங் கூடுமோ?

ஃ

உழைப்பாளர் ஒரு தொழிலைச் செய்கையில் அது எவ்வளவு வருத்தமுளதாயினும் அஞ்சுவதில்லை; எவ்வளவு முயற்சி வேண்டுவதாயினும் தளருவதில்லை; எவ்வளவு இடுக்கண் நேர்ந்தாலும் பின்வாங்குவதில்லை. உலகமாந்தருடைய நல்ல வாழ்க்கையை மேன்மேலும் விருத்தி செய்வதில் எப்பொழுதும் புதிய முயற்சியுடையவர்

இன்னும் ஏதாவது கிடைக்குமானால் அதையும் பெற்றுக்கொள்ளச் சமயம் இதுதான் என்று சிலர் நினைப்பதிலே லாபம் அடைதலுமுண்டு. உள்ளதும் இழந்து ஏமாறுதலும் உண்டு.

களாகி, நாள்தோறும் அதிகாலையிலேயே ஆரவாரத்தோடு அருணோதயமாகிய பொற்கதவைக் கைகளால் இடித்துத் தள்ளிக்கொண்டு போய், எப்போது விடியப்போகிறது, விடியப்போகிறது என்று காத்திருந்து, வேலைக்கு ஆரம்பித்து, தலைமுறை தலைமுறையாக நாள் தோறும் நவநவமான மகோபகாரங்களைச் செய்துகொண்டே வருகின்ற லோகோபகாரிகளாவர்.

ஃ

உழைப்பாளர் காட்டை அழித்து, சதுப்பு நிலத்தைச் சீர்படுத்தி, பார்க்கப் பயங்கரமான வெட்டவெளியைக் கண்ணுக்கு இனிப்பாகத் தளிர்க்கச் செய்கின்றனர். ஏர் உழுது, நிலத்தைக் கொழுமையாக்கி, விதைத்து பயிர் செய்து, அறுப்பறுத்து, அரிசியாக்கி, மாவரைத்துப் பண்டங்களாக்கி உயிர்களுக்கு உணவு தந்து காக்கின்றார்கள். மேலும், அன்னோர் புல்லுத் தரைகளைப் பாதுகாத்து, தண்ணீரிறைத்து, நிலத்தைப் பண்படுத்திப் பயிர் செய்து இவ்வுலகத்திலுள்ள கோடானுகோடி ஜனங்களையும் போஷிக்கின்றார்கள்.

ஃ

உழைப்பாளர் செங்கல் அறுத்து, சுரங்கத்திலிருந்து கல் வெட்டி எடுத்து, கற்பலகைகள் பிளந்து, கம்பங்கள் சித்திரித்து, அற்பமான குடிசை மாத்திரமேயன்றிச் சிங்காரமான அரண்மனைகளையும், பலவகைப் பெரிய மாடமாளிகைகளையும் உண்டாக்குகின்றார்கள்.

ஃ

உழைப்பாளர் அநேக உலைக்களங்களுக்கும், பல்லாயிரம் வீடுகளுக்கும் உபயோகமாகும்படி ஆழக்குழி தோண்டிப் பூமியின் கீழ்ப் புதைந்து கிடக்கும் நிலக்கரிகளை வெளிப்படுத்துகின்றனர். பூமியின் கீழ் அமிதமாய்க் கிடக்கும் நல்ல பாறைகளைப் பரிசோதித்து, பொன் வெள்ளி செம்பு ஈயம் முதலிய தாதுக்களை வெட்டியெடுக்கின்றனர். இரும்பை உருக்கிப் பெரிய ஸ்தம்பம் முதல் சிறிய ஊசியீறாகவும், கனமான நங்கூரம் முதல் இலேசான கம்பியீறாகவும், நீராவியந்திரத்தை இயக்கும் சக்கரம் முதல் மெல்லிய வளையமீறாகவும் உள்ள பற்பலவித சாமான்களையும் செய்கின்றனர்.

ஃ

உழைப்பாளர் காட்டிலுள்ள மரத்தை வெட்டி, துண்டு மரங்களாக உருவாக்கிக் கப்பல் செய்து, அகாதமான சமுத்திரத்தின் வழியாய் அலைகளை லக்ஷியம் பண்ணாமலும் பெருங்காற்றுக்குப் பயப்

"புலிக்காட்டிலே புகுந்த மான்போல், என் கணவன் வீட்டிலே நான் புகுந்தேன்."

படாமலும் வெளித் தேசங்களுக்குக் கொண்டுபோய், அந்தந்த தேசத்து விளைவுகளை இத்தேசத்துக்குக் கொண்டுவந்து வர்த்தகத்தை நன்ருய்த் தழைத்துச் செழித்தோங்கும்படி புரிகின்றனர்.

ஃ

உழைப்பாளர் தரையிலும் தண்ணீரிலும் உண்டாகின்ற மிகவும் அற்பமான குப்பை கோதுகளினின்று ரஸாயன சாஸ்திர விதிகளின்படி வாசனையுள்ள திராவகங்களையும், ஆரோக்கியமான மருந்துகளையும் இன்னும் இவைபோன்ற மேலான பதார்த்தங்களையும் தேர்ந்தெடுக்கின்றனர்.

ஃ

உழைப்பாளர் எவ்வகை வருத்தங்களையும் பொருட்படுத்தாமல், பெரிய பிரவாகமாக ஓடும் நதிகள் மேல் பாலம் போட்டு, சதுப்பு வெளிகளின்மேல் உறுதியான மார்க்கங்கள் உண்டுபண்ணி, ஆழமான கானுறுகளின்மேல் அந்தரத்தில் தொங்குவதுபோலப் பாலங்கள்கட்டி, கெட்டியான மலைகளைத் துளைத்து இருண்ட குழாய் வழிகளை அமைக்கின்ருர்கள்.

ஃ

உழைப்பாளர் மெல்லியதாய் இரும்புக் கம்பிகள் இழுத்து அக்கம்பியை ஒரு நகரத்திலிருந்து மற்ருெரு நகரத்திற்கும், ஒரு தேசத்திலிருந்து மற்ருெரு தேசத்துக்கும், மலைகளின் வழியாகவும் கடலின் கீழாகவும் கட்டித் தந்திச் செய்திகள் தெரிய அமைக்கின்ருர்கள்.

ஃ

உழைப்பாளர் புத்திமான்களிடத்தினின்று உதிக்கிற விஷயங்களையும், சாஸ்திர பாரங்கதருடைய கொள்கைகளையும், பெரியோர்களுடைய புத்திமதிகளையும் நன்கு கிரகித்து நூல்வடிவமாக வரைந்து அவை எந்நாளும் ஜீவித்திருக்கும்படி செய்கின்ருர்கள்.

ஃ

உழைப்பாளர் மிகப் பிரபலனுன ஜாலவித்தைக்காரனைப் போன்றவர்கள். அன்னேர் நிர்மானுஷியமான பாலைவனத்துள் புகுந்து, தங்களுடைய உழைப்பு என்னும் மந்திரக்கோலை அசைப்பார்களாயின், உடனே அங்குள்ள சுத்த சூன்னியமான பள்ளத்தாக்குகளில் பல தானியங்களும் செழித்துப் பயிராகத் தொடங்கி விடுகின்றன. வெறுங் கல்மலைகளிலெல்லாம் பசுமையான மரங்க

"யாது காரணம் பற்றியோ உன்னிடம் அப்படிக் கேட்கவேண்டுமென ஓர் எண்ணம் என் உள்ளத்தில் எழுந்தது. இதனல் நல்வாழ்வு உண்டாகுமென்பதே என் நம்பிக்கை."

ளடர்ந்த சோலைகள் உண்டாகிவிடுகின்றன; உலைக்களம் முதலிய கைத்தொழிற்சாலைகள் ஏற்பட்டுவிடுகின்றன. கடைசியில் அங்கே ஒரு புதிய நகரத்தையே உற்பத்தியாக்கிவிடுகின்றனர். அதில் வர்த்தகசாலைகளும், சகல சாஸ்திரசாலைகளும், விலாஸ மண்டபங்களும், சமயசித்தாந்தங்கள் ஓங்கி வளருகிற திவ்வியாலயங்களும், கோபுரம் முதலாகிய மேலான கட்டடங்களும் ஆகாயமளாவித் தோன்றுமாறு செய்துவிடுகின்றனர்.

ஃ

உழைப்பாளர் தமது பர்த்தாவின் ஈருலக வாழ்க்கையிலும் சம்பந்தப்பட்டுத் தாய்க்குப் பின் தாரமாக நின்று, மக்களைப் பெற்று சந்ததி விர்த்திசெய்து குலம் விளங்கும் தீபமாக ஜ்வலிக்கின்றனர். உழைப்பாளர் குடும்பத்தலைவன் என்ற நிலையில் உழைக்கும் உழைப்பு கொஞ்சமோ?

ஃ

இவ்வனமாக, அளவற்ற பெருங் காரியங்களை நிறைவேற்றிச் சாதிப்பவர்கள் உழைப்பாளரல்லவோ? உழைப்பாளரின்றி எதுதான் முடியும்? இத்தகைய பரோபகாரிகளான உழைப்பாளர்களை அவர்களின் எளிய நிலைமையைக் கருதி அவமதிப்பது பொருந்துமோ? உழைப்பாளிகளில்லாத இடத்தில் ஒருவர் பெரிய பணமுட்டையுடனிருந்தாலும் பயனென்ன? அவர் நினைத்த காரியம் ஆகிவிடுமோ? உழைப்பாளர்களால்தான் உலகம் உயிருள்ளதாய்ச் செழித்து ஓங்கி நிற்கின்றது.

ஃ

பொதுவாக, மனிதர்களுக்குள்ளே உயர்வு தாழ்வு உண்டாவது அவர்களுக்கு இயற்கையிலேயே தோன்றப் பெறுகிற வேவ்வேறளவான குணங்களாலும் யோக்கியதைகளாலுந்தான். சிலர் வலிமையுடையவர்கள்; சிலர் வலிமையற்றவர்கள்; சிலர் உயர்குலம்; சிலர் தாழ்ந்த குலம்; சிலர் மிகத் தெளிவான நுட்ப புத்தியுடையவர்கள்; சிலர் தாமஸ குணமும் மந்த புத்தியுமுடையவர்கள்; சிலர் உள்ளம் உடம்பு ஆகிய இரண்டும் நோயற்றுச் செழித்து எல்லா நற்குணங்களும் நிறையப்பெற்றிருப்பவர்கள்; சிலர் பிணிகளால் நலிந்து உள்ளம் உடம்பு இரண்டும் பலவீனப்பட்டிருப்பவர்கள்; சிலர் பிறருக்கு உட்பட்டுத் தங்களின் உழைப்பினால் ஜீவிக்க வேண்டிய

பிறர் விரும்பிக்கேட்ட ஒன்றை முதலில் இல்லையென்று கூறிப் பிறகு, தருவதிலே, அதைப்பெற்ற சந்தோஷத்தைக் காட்டிலும், “வைத்துக்கொண்டே இல்லையென்றானவ்லவா” என்று எண்ணமிடுவதிலேதான் அதைப் பெற்றவனுக்குச் சிந்தை அதிகம் செல்லுமாம்.

உழைப்பாளர்களாயுள்ளவர்கள்; சிலர் அதிர்ஷ்ட சம்பன்னர்களாய்ச் சுகவாழ்வில் விளங்கிப் பணியாட்களுடனுள்ளவர்கள். இத்தன்மையதான உயர்வு தாழ்வு கொண்டவர்களாகவே நாம் இவ்வுலகில் வந்து பிறக்கிறோம். அன்றியும், சிலர் நாணயமும், பொறுமையும், தயாளத்துவமும், மனவுறுதியுமுள்ளவர்கள்; சிலர் சோம்பல், பொய், புரட்டு முதலிய தீக்குணங்களுள்ளவர்கள். அவர்கட்குத் தீயவழி தவிர மற்றெதிலும் விடாமுயற்சி கிடையாது. இந்த வேறுபாடுகளெல்லாம் இயற்கையான துஷ்ட சுபாவம், கெட்ட படிப்பு, அல்லது அறியாமை இவைகளால் உண்டாவனவாம்.

ஃ

இதற்குத் திருஷ்டாந்தம்:—இயற்கையில் சமமான நிலையிலுள்ள இருவர் உலக வியாபாரத்தில் பிரவேசிக்கின்றனர். ஒருவன் கல்வி கற்றவனாயும், மற்றொருவன் கல்லாதவனாயுமிருந்தால், அவர்களுடைய நிலைமை சீக்கிரமே பேதப்பட்டுப் போகும். மற்றவர்களெல்லாரும் மூடர்களா யிருக்க, ஒருவனுக்கு விசேஷமான கல்வியறிவு மாத்திரம் இருக்குமாயின் அவனே மற்றவர்களை அடக்கி ஆளும் திறமுடையவனாகிறான். யோசிக்குமளவில், விடாமுயற்சி யென்னும் நற்குணமே மனிதர்க்குள் விசேஷமாய் உயர்வு தாழ்வை உண்டாக்குவதற்குக் காரணமா யிருக்கின்றது. அனைவரும் இன்று இரவு ஒரே காலத்தில் படுத்தாலும் சிலர் விடியநேரத்திலேயே எழுகின்றனர்; மற்றவர்கள் காலைப்பொழுதைத் தூக்கத்தில் கழிக்கின்றனர். ஆதலால், நாளை நடுப்பகல் வேளைக்குள் அவர்கள் தத்தம் வேலையிலே முன்னும் பின்னுமாய்ப் பேதப்பட்டு விடுவார்கள். சுபாவத்திலேயே அமைகின்ற இவ்வகைப்பட்ட காரியங்களே தேசமெங்கும் ஏற்பட்டிருக்கின்ற மேல் வகுப்பு-கீழ்வகுப்பு, உயர்ந்த பதவி-தாழ்ந்த பதவி, உழைப்பாளி-முதலாளி என்னும் பேதங்களுக்கு ஆதிகாரணமாம். நாகரீகம் பெறாத மிருகத்தன்மையானவர்களிலேகூடப் புத்தியிற் சிறந்த சிலர் மற்றவர்களைப் பார்க்கிலும் உயர்வு பெற்று அவர்களை அடக்கி ஆள்வது சாதாரண ஸம்பவம்.

ஃ

மேற்கூறியவாறு உயர்வு தாழ்வு அவரவரது சுபாவத்திற்கேற்றபடியும், அதிர்ஷ்டத்துக்குத் தக்க வண்ணமும் உண்டாயினும், தம்மிலும் தாழ்ந்திருப்போரையும், தங்களின் கைக்கீழ் உழைத்து ஜீவித்து வருவோரையும் கௌரவ ஸ்தானத்தில் வைத்து மதிப்புடன் நடத்துவதில்தான் அதிக பெருமையும் கம்பீரமும் மேன்மையும்

இதுகாறும் கொண்டிராத அன்பை அதிகமாகக் காண்பித்துக்கொண்டு நெருங்கிச் சேரும்படியும் ஒருகாலம் எப்படியோ வந்து விடுகிறது.

இருக்கின்றது. உழைப்பாளியினது உழைப்பை விரும்புவதுபோலவே அந்த உழைப்பாளியையும் ஒருவித சிலாக்கியனக்குள்ளவர்களாகக் கருதி உயர்த்துவதிலே, அன்பும் சகோதரத்துவமும் மிகுத்தோங்கி பரஸ்பர ஐக்கியமும், அந்த ஐக்கியத்தால் தேச முழுமைக்குமே நன்மையும் க்ஷேமமும் உண்டாகும். அத்துடன் நம் மனத்தில் சாந்தமும், கருணையும், பிறரது நலத்தில் சிரத்தைகொள்வதான பரோபகார குணமும் பெருகி, நம்மைத் தெய்வத்தன்மையுள்ளோராகச் செய்யவும் வைக்கும். தமது க்ஷேமத்தைப்போலவே பிறரது க்ஷேமத்தையும், தம்மை நம்பியவரின் சுக லாபங்களையும் பாராட்ட வேண்டும். தமது மதிப்பைப்போலவே மற்றவர்களின் மதிப்பையும் வாழ்வித்தருள வேண்டும். உழைப்பாளிகளின் க்ஷேமலாப உயர்வுகளில் சிரத்தை கோள்வோரிடத்தில் பகவான் அத்யந்த அன்புள்ளவராகின்ருர். "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்பது அரும்போருள் அமைந்த அற்புதமான வாக்கியமாகும். நன்மை நலம்தரும். உழைப்பாளரைப் பாராட்டி, நல்லது செய்து நல்வழியில் நடக்கக்கடவோம். "பழிப்பன பகரேல்."

சந்தா நேயர்களே!

நான் பிரதி மாதமும் 15-ந்தேதி யன்று, அதாவது தமிழ் மாதம் முதல் தேதியன்றே சென்னையை விட்டு எனது காரியாலயத்தினின்று வெளிப்போந்து, தங்கள் இருப்பிடம் வந்து சேர்ந்தும், சில அன்பர்கள் என்னுடைய வரவைக் காணுது மனக்கவலைப்படுவது கேட்க யான் மிக வருந்தலாயினேன். என்னைப் பரிபாலிக்கும் தலைவர், தங்களுடைய விலாசத்தை நன்ருகக்குறித்து என்னைத் தங்களிடம் காலம் தவருது சேர்க்கும்படி, காருண்ணிய கவர்ன்மெண்டின் தபால் ஆபீசுக்கு அனுப்பிவிடுகிருர். நான் அப்படித் தங்களை நாடி வந்தடையாவிடில், உடனே நேயர்கள் என் தாமதத்தைப்பற்றித் தங்கள் ஊரைச்சேர்ந்த போஸ்ட் மாஸ்டருக்குத் தெரிவித்தால் நான் ஒழுங்காகத் தங்களிடம் வந்தடைந்து விடுவேன்.

தங்கள் செல்வி,
அமிர்தினி.

படித்த பெண்கள் ஒரு பக்கமாகக் கூடிப்பேச, படியாத பாவைமார் அவர்களுடன் சேராமல் மற்ருெரு பக்கம் வேறுகூட்டம் போகிருர்கள்.

நமது சந்தா நேயர்கட்கு.

விசேஷ விஞ்ஞாபனம்.

அனுபவ “அமிர்த”த்தின் அன்பர்காள்!

ஸர்வேசுவரனது அருளால், ஸர்வ மத சம்மதமாய், ஸகல ஜன மனோகரமாய் சென்ற எட்டு ஆண்டுகளாக நடைபெற்றிலங்கும் “அமிர்த குணபோதினி”ப் பத்திரிகையை நீங்கள் அனைவரும் ஆர்வத்துடனும் அபிமானித்து வருவதற்காக உகந்த வந்தனமளித்து மிகுந்த நன்றி பாராட்டுகின்றோம்.

ஃ

இந்தப் பங்குனி மாத ஸஞ்சிகையுடன் “அமிர்த குணபோதினி”க்கு எட்டு வருடங்கள் பூர்த்தியாகி, அடுத்த பவ வருடம் சித்திரை மாத முதற்கொண்டு ஒன்பதாம் ஆண்டு ஆரம்பமாகின்றது. இந்த எட்டு வருடங்களாக இப்பத்திரிகையைத் தொடர்ந்து பெற்றுப் பரவசங்கொண்டாடிய குண சிரேஷ்டர்கள் ஒன்பதாம் ஆண்டிலும் பூரண அபிமானம் கொண்டு அத்யந்த பிரேமையுடன் ஆதரித்து அபிவிர்த்தி செய்வார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

ஃ

நமது செந்தமிழ் நாட்டில் “அமிர்த குணபோதினி” விசேஷித்த செல்வாக்கும் பிரக்யாதியும் பெற்றுள்ள பத்திரிகையாகும். “அமிர்த குணபோதினி” என்ற பெயர் பொதுச் சார்பு கொண்டது. அந்தப் பொதுத்தன்மைக்கிணங்க ஒரு தலையங்கமும், விகடச் சார்பில் மற்றொரு தலையங்கமும் கொண்டு, அனுபவ ஞான போதனையில் மனத்திருளை நீக்கி மகிழ்வூட்டுவதான அதன் அமைப்பின் மாதிரியிலே மற்றொரு பத்திரிகை இல்லை யென்பது யாவரும் அறிந்துவைத்த உண்மை.

ஃ

“விகடப் பிரதாபன்” “அமிர்த குணபோதினி”யில் ஒரு முக்கியமான சிரேஷ்டத்தைப் பெற்று விளங்குகின்றான். அகட விகடமும் அதனை யடுத்துத் தோன்றி கௌரவமிக்க ஒரு விகடப் பத்திரிகையாகவும் ஆரம்பகால முதற்கொண்டு விளங்கி வரும் மனோல்லாஸ மாத ஸஞ்சிகையாயுள்ளது. இப்பத்திரிகையின் ஆசிரியர் பிரஸித்தமான “மஹா விகட தூதன்” பத்திரிகைக்குத் தலையங்கங்கள் வரையும் ஆசிரியராகப் பல்லாண்டுகளாக இருந்து வந்திருப்பதில், அவ்வகையில் தாம் பெற்றுள்ள விசாலமான அனுபவத் திறனை “விகடப் பிரதாப”னில் உபயோகித்துப் பத்திரிகாபிமானிகளை இரஞ்சிப்பிக்கச் செய்து வருகின்றார். கீர்த்தி வாய்ந்த “மஹா விகட தூதன் பத்திரிகைக்குப் பின்பு, அதன் சாயலான விகட

நமது அவசரத்துக்குக் கண் மறைந்துவிட்டு, நமது அவசரம் தீர்ந்தபின் நம்மை நெருங்கிச்சூழ வருவோர் எத்தனை பேர்!

விநோத பாகங்களைக் கொண்டுள்ள பத்திரிகை நமது "அமிர்த குண போதினி" யொன்றே யாகும். நகைச்சுவையை 'விகடப் பிரதாபன்'—'அகட விகடம்' — 'ஹாஸ்ய ஸஞ்சீவினி' ஆகிய இவற்றில் எப்பொழுதும் காணலாம்.

ஃ

பிரதி தடவையும் "அமிர்த குண போதினி"யில் தோன்றும் அடிக் குறிப்புகளும், ஆங்காங்கு பக்கங்களின் இடையே அலங்காரமாய் வளைவுகட்டி வரையும் அனுபவ விசேடக் குறிப்புகளும், பொதுவாகப் பத்திரிகை முழுதுக்குமே அனுபவ கலாஞானம் மிகுத்தோங்கும் பான்மையும் "அமிர்த குணபோதினி"க்கு ஒரு தனிச் சிலாக்கியத்தினைத் தந்து விளங்குகின்றது. பத்திரிகையைக் கையிலெடுத்ததும் முதலில் "ஆநந்த தரிசனம்" எதிரே தோன்றி, பக்தி ஞான விஷயங்கள் நிறைந்து அமிர்த தடாகமாய்ப் பரிமளிப்பதை "அமிர்த குணபோதினி" ஒன்றில்தான் இன்புறலாமென்றுகூறும்வாறு சிறப்புற்றுள்ளது.

பிரதி சஞ்சிகையிலும் தலையங்கத்தில் இடம் பெறுகிற விஷயங்களை எத்துணையோ நுட்பமாய்ச் சிந்தித்து, விசால ஹிருதயத்தினோடும் வெகு தெளிவாய் விளக்கி, ஆரம்பமும் முடிவும் பொருந்தித் தோன்றுமாறு பூர்த்தி செய்யப்படுகின்றன. அத்துடன் உலக நடவடிக்கைகளையும், ஆழ்ந்தரகசியங்களையும் அனுபவ ஞானங்களையும் ஒரு சேரத்திரட்டி விளக்குவதாயுமுள்ளன. சென்ற எட்டு வருடங்களாகத் தொடர்ந்து வரும் "பழமொழிக் குறிப்புகள்" இதுகாறும் எவராலும் எழுதப்படாதவையாகும். "நமது கடை" முதலியன முற்றிலும் அனுபவங்களின் சாரமாகும். இவ்விதமே "அமிர்த குணபோதினி"யிலுள்ள ஒவ்வொரு விஷயங்களும் நூதனச் சுவையுடன் ருசிப்பனவாகும்.

ஃ

"அமிர்தகுணபோதினி" எளிய இனிய செந்தமிழ் நடையில் எழுதப் பெற்று, ஒரு பக்கமேனும் வீண் போகாமல் சொற்சுவை பொருட் சுவை சுரந்து அருமையான அநேக விஷயங்கள் அடர்ந்து, நவரஸங்களும் பொருந்திய சமயோசிதமான பல நற்கதைகள் நிறைந்து, படிப்பவர்கட்குப் பாஷா ஞானம், ஈசுவரபக்தி, உலகின் தெளிவு, விவகார நுட்பம், லௌகிக சாமர்த்தியம், ஆழ்ந்த அனுபவம் ஆகியவைகள் பெருகி வர வேண்டிய அளவுக்கு அதற்கேற்ற பிரயாசையுடனும் விடாமுயற்சியுடனும் நடத்தி வரப்படுகின்றது.

ஃ

சென்ற முப்பது ஆண்டுகட்கு மேலாகப் பத்திரிகைத் தொழிலில் நமக்கு இருந்து வரும் அநுபவத்தை ஸம்பூர்ணமாக "அமிர்த குணபோதினி"யில் செலுத்தி, பிரதி தடவையும் சர்வ சிலாக்கியமாயுள்ளதான விஷயங்களைத்தெரிந்தெடுத்து அழகுபெற அமைத்து சந்தாதாரர்கட்குத்திருப்தியுண்டாகுமாறு பிரசுரித்து வருகின்றோம். "அமிர்த குணபோதினி"யி

தரித்திரம், நோய், துக்கம் முதலியவை மனிதருக்கு ஸகஜம். ஆயினும், இவைகள் படுத்துகிற பாட்டில் மனித ஜீவியமே மாறிவிடுகிறது. சிலர் புது சக்தி படைப்பதுண்டு; வேறு சிலரோ இருந்த சக்தியையும் இழந்துவிடுவதுண்டு.

லுள்ளவை யாவும் இதுவரை அச்சிடப்படாத விஷயங்களாகவும், என்றைக்கும் படித்தாலும், எத்தனை தரம் பார்த்தாலும் இன்பத்தை விளைக்கத்தக்கவையாகவும் இருப்பதை ஒவ்வொருவரும் தங்களுடைய அனுபோகத்தில் அறிந்திருக்கலாம். மாதப்பத்திரிகையின் ஓர் முக்கிய அம்ஸம் யாதெனில், அதில் வெளிவரும் விஷயங்கள் இப்போதைக்கு மட்டுமேல்ல, இனி ஒரு நூறு வருஷங்கட்குப் பிறகுங்கூடப் படித்துப் பயன் பெறக் கூடியதாய், வெறும் வர்த்தமானங்களைத் தழுவி வரையப்படும் வியாசங்களா யில்லாமல், அறிவுக்கு உணவாய், இகபர சுக சாதனமாய், மனோத்ஸாகத்தைத் தரவல்ல ஆநந்தக் களஞ்சியமாய், அர்த்த புஷ்டியுள்ளதா யிருக்கவேண்டுமென்பதே. இந்த முக்கியமான கருத்தை நாம் மனஸ்பூர்வமாய் 'அமிர்த குணபோதினி'' யில் நிறைவேற்றிக்கொண்டு வந்திருக்கின்றோம். நாம் பழங்காலத்துப் புண்பட்ட புள்ளி நமது உழைப்பு மனஸ்பூர்வமான பரிசுத்த உழைப்பு. இந்த உண்மையான உழைப்பைப் பாராட்டி, "அமிர்த குணபோதினி'' யை ஒன்பதாம் வருடத்திலும் ஆதரிக்க முன்வந்து, அதன் புதுசந்தாவை மணியாடர் மூலமாகச் செலுத்தி ஆசீர்வதிக்க வேண்டுகின்றோம்.

ஃ

பிரதி தடவையும் 80-பக்கங்களுள்ள ''அமிர்த குணபோதினி''யின் 12-ஸஞ்சிகைகளையும் வருட முடிவில் சேர்த்துப்பார்ப்பின் 960-பக்கங்களுள்ள அரும் பெரும் நூலாகி, அதனை ஒரே ரூபாய்க்குச் சந்தாதாரர்கள் பெறுகிறார்களென்பதும் விளங்கும். இத்துடன் சேர்த்துள்ள எட்டாம்வருட அட்டவணையை நன்கு ஆராயின், பத்திராசிரியரது ஒரு வருடத்திய உழைப்பின் உயர்வு இனிது புலனாகும். இனி தொடங்கும் 'அமிர்த குணபோதினி''யின் ஒன்பதாவது வருடத்தில் இப்போதைவிட இன்னும் அதிக சிறப்பாகவும், மேன்மையாகவும், விசேஷித்த சித்திரப் படங்களுடனும் நடத்தி வருவோமென்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஃ

ஆகவே, நமது கையொப்ப நண்பர்களான கண்ணியர்கள் ஒன்பதாம் வருடத்திய சந்தாவை உடனே அனுப்பிவைத்து, நம்மையும் நமது முயற்சியையும் ஆதரித்துப் பெருமையடையுமாறு பிரார்த்தித்துக்கொள்கின்றோம்.

எஸ்.ஜி. இராமாநுஜலுநாயுடு,
பத்திராசிரியர்.

ஒருக்காலும் தன்னைவிட்டுப் பிரியாதவர்களைக்கூடப் பிரிந்து மறந்திருக்க நேரிடுவதில்லையா? பிரிவதென்பது இல்லாதிருத்தல் வெகு சொற்ப காலமே.

ஒருவனுடைய அதிர்ஷ்டகாலமானது மற்றொருவனுக்குக் கோழைத்தனத்தையோ, மூடத்தனத்தையோ, புத்திக்குறைவையோ பெருக்கி விடுவதில், அவன் தாழ்ந்து தனக்கிருந்ததையும் விட்டுக்கொடுத்து இழந்துபோக, புதிய மனிதன் அவற்றையெல்லாம் அடைந்து பெரிய அதிர்ஷ்டசாலியாக ஆகிவிடுகிறான்.

சந்திரலேகா.

—மறைந்துநின்ற விரோதி—

புத்திர பாக்கியம் வேண்டுமோ? பதி பாக்கியம் வேண்டுமோ? ஏதாவது ஒன்றைத்தான் நீ பெற முடியும் என்று சொல்வது போல் சந்திரலேகாவின் வாழ்நாள் விளங்கியது. பிறந்த இருகுழந்தைகளும் அற்பாயுளில் மறைந்தன. கடைசியாக முப்பத்தைந்தாம் வயதில் ஒரு ஆண் குழந்தை பிறந்து கமலநாதன் எனப் பெயரிட்டு மகிழ்ந்திருக்கையில், மறு வருஷமே சந்திரலேகாவின் கணவன் ஜெகதீச ஐயர் கண்மூடினார். சந்திரலேகா தனக்குத் துணையாகத் தன் தங்கையின் குமாரத்தி கௌரியை அழைத்துக்கொண்டு, தனது கைக்குழந்தையுடன் ஏராளமான சொத்துக்களோடும் தர்மிஷ்டையாய்க் காலம் தள்ளி வந்தாள். இவர்களுடன் வீராயி என்ற வேலைக்காரி ஐந்து வயது சிறுமியில் வேலைக்கு வந்து நாற்பது வருஷங்களாக அவ்வீட்டிலேயே இருந்துகொண்டிருந்தாள். அவளுக்கு வயது 45-இருக்கும். அவள் ஒரு விதவை.

ஃ

ஒரு நாள் பத்துமணி வேளையில் ஒரு பைராகி வந்து ஜே! சீதாராம்! என்று கூவினான். அவனுக்குச் சந்திரலேகா பிக்ஷையிடச் சென்றாள். பைராகியோ இவளது விதவைக் கோலத்தைக் கண்டு தலையிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கதறினான். சந்திரலேகா திகைத்து அவனை உற்றுநோக்க, தன் கணவரின் கூடப் பிறந்து எங்கோ ஓடிவிட்ட கோபாலனாக இருக்கக் கண்டு கண்ணீர்விட்டழுதாள். பாடசாலையில் வாசித்து வந்த கோபாலன் எவருக்கும் சொல்லாமல் ஓடிப்போய் பதினைந்து வருஷங்களாயின. பைராகிகளின் கூட்டத்தில் சேர்ந்துகொண்டு காசி, அயோத்தி எல்லாம் சுற்றிக் கடைசியாகத் தன் தமயனைக் கண்டு செல்வோமென்று அந்தப் பக்கம் வருவதானான். தமயனுக்குப் பதிலாக அவரது குமாரன் கமலநாதனைக் கண்டு தூக்கி முத்தமிட்டு ஆசீர்வதித்து, சிறிது கோதுமை நொய்யும், பருப்பும், நெய்யும் பெற்றுக்கொண்டு பிறகு வருவதாக உறுதி கூறிச்சென்றான். சந்திரலேகா தன்னிடமே இருக்கும்படி எவ்வளவோ கெஞ்சியும் கோபாலன் ஒப்பவில்லை. திண்ணையைத் தாண்டி வீட்டிற்குள் வரவுமில்லை.

ஃ

இது நிகழ்ந்த மறுவாரத்தில் ஓர் நாள் இரவு இரண்டு மணிக்குச் சந்திரலேகா தன் பக்கத்தில் தூங்கிக்கொண்டிருந்த கமலநாதனைக்காணாது அலறினாள். வீட்டு வேலைக்காரியாகிய வீராயியும் தென்படவில்லை. கதவும் திறந்து கிடந்தது. ஜனக்கூட்டம் சூழ்ந்தது. எல்லா இடங்களிலும் தேடினர். பயனில்லை. சிலர் போலீஸாருக்குத் தெரிவித்தால் குழ

ஒருவரின் பேச்சு ஒழுங்காகவும், ஒழுங்கற்ற விதமாகவும் படுவது, கேட்பவரின் அப்போதைய பலவித மனோபாவத்திற்குத் தக்கபடி.

ந்தை அகப்பட்டுவிடுமென்றனர். அங்கிருந்த ஒருவர் சென்னையிலிருக்கும் துப்பறியும் நீலமேகரைத் தருவிப்பது நலமென்றார். போலீசுக்கு ஆளும், நீலமேகருக்குத் தந்தியும் அனுப்பினர்.

ஃ

இரண்டாம்நாட் காலையில் மருதாருக்கு நீலமேகர் வந்து சந்திரலேகாவைக் கண்டு சகலமும் விசாரித்தார். வீராயி காணப்படாததால் அவள்தான் குழந்தையைக் களவாடியிருக்க வேண்டுமென்றாள் சந்திரலேகா. இத்தருணத்தில் ஒருவர் உள்ளே வந்து நாற்காலியில் உட்கார்ந்து, நீலமேகர் வந்துவிட்டதால் இனி குழந்தை யகப்பட்டு விடுவது வெகு சுலபம்தான் என்றார். அவர் பெயர் மகாதேவரென்றும், அவரே தங்களுக்குத் தந்தி தரும்படி சொன்னாரென்றும் சந்திரலேகா நீலமேகரிடம் கூறினாள். அவ்வேளையில் வெளியே "ஜே! சீதாராம்" என்ற சப்தம் உண்டாகவே, சந்திரலேகா கண்ணீருடனும் வாயிற்படிக்கு ஓடி "குழந்தையைக்காணோமே, என்ன செய்வேன்" என்று அங்கு நின்ற கோபாலனைக் கண்டு கதறினாள். கோபாலன் திகைத்துப்போய், நிற்க சக்தியற்றுக் கீழே உட்கார்ந்துகொண்டு கலங்கினான். தேம்பித் தேம்பி அழுதான்.

ஃ

சந்திரலேகாவின் அலறுதல் கேட்டு வெளியில் வந்த நீலமேகர் கோபாலன் யார் என்று விசாரிக்க, மகாதேவய்யர் பூர்வ விவரம் யாவும் புகன்று, இவன் இங்கு வந்த பின்பே குழந்தை காணாமற் போயிருக்கிறதென்றார். நீலமேகருக்கும் விஷயம் பளிச்சென்று ஏதோ மனதிற்பட்டது. ஆயினும், அவர் சந்திரலேகாவுடன் சேர்ந்துகொண்டு கோபாலனைத் தேற்றுவதில் சிரத்தையுடையவர்போல் அபிநயித்தார். சந்திரலேகாவிடம் ரகசியமாய்க் கோபாலன்மீது ஏதாவது சந்தேகம் உண்டாவென்று நீலமேகர் கேட்க, சந்திரலேகா திடுக்கிட்டவளாய்ச் சிறிது நேரம் நின்று, "கோபாலன் சொத்துகளுக்காசைப்பட்டவனல்ல; மனிதர்களின்மீது மட்டுமே அவனுக்கு உயிர்" என்று பதில் கூறினாள். எனினும், நீலமேகர் கோபாலன்மீதே அதிகக் கண்ணாயிருந்தார்.

ஃ

மூன்று தினங்கள் சென்றன. சந்திரலேகா தனக்குச்சென்னையிலிருந்து வந்த ஒரு கார்டை நீலமேகரிடம் தந்தாள். அதிற் பின் கண்டபடி இருந்தது:—

"அம்மணீ! உன் குழந்தை வீராயியால் களவாடப்பட் டிருக்கின்றது. இதற்குக் கோபாலன் ஒரு முக்கியமான தூண்டுதலாகும். குழந்தையை மறைத்துப் பிறகு கொன்றுவிட்டால் எல்லா சொத்துக்களும் தன்னையே சேருமென்று கோபாலன் இந்தச் சூழ்ச்சி தேடி யிருக்கிறான். குழந்தை இறக்கு முன்பு அதைப் பெறப் பார்."

ஃ

இக்கார்டை நீலமேகர் நாற்புறமும் உற்று நோக்கினார். சென்னையி

ஒரு சங்கதிக்குத் தான் வெளியே செல்லுகையில் தன் குமாரன் எதிரில் வர, அவனை அந்த சங்கதியைக் கவனித்து வரும்படி அனுப்பிவிடுகிறான். தன் பக்கத்து மனுஷ்யர்களின் துணை எந்த வேளைக்கும் பெரிய சமய ஸஞ்சீவி போன்று அதிக உபயோகமுள்ளதா யிருக்கும்.

லுள்ள தபாற் பெட்டியில் போடப்பட்டிருப்பதாய்த் தெரிந்தது. பூதக் கண்ணாடியைக் கொண்டும் சோதித்துப் பார்த்துப் புன்சிரிப்புடன் கார்டைத் தன்னிடமே வைத்துக் கொண்டு "அம்மா, நான் மறுபடியும் இங்கு வர ஒரு வாரம் செல்லும்; உங்களுக்குத் துணையாக இருக்க இரவு எழு மணிக்கு என் வேலையாள் கருப்பனை அனுப்புகிறேன். அவன் ஒருவன் நூறு பேருக்குச் சமம்" என்றார். சந்திரலேகாவும் கலக்கத்துடன் விடை தந்தாள். அன்றிரவு முதல் கருப்பன் என்ற வேலையாள் வந்து இரவெல்லாம் பாரா கொடுத்தபடி யிருந்து அதிகாலையில் சென்று விடுவான். கருப்பன் பாரா கொடுக்கும் விஷயத்தை வெளியில் தெரிவிக்காதபடி நீலமேகர் ஏற்பாடு செய்திருந்தார். கருப்பன் வந்த இரண்டாம் நாள் ஏதோ துப்பாக்கிச் சத்தம் கேட்டது. சந்திரலேகா இந்த சப்தம் கேட்டு விழித்துக் கொண்டு நாற்புறமும் பார்த்து வெளியில் வர, கருப்பன் தூங்கியபடி கிடந்தான். அவனை எழுப்பவே, நான் இருக்கையில் எவரும் வரார் என்று சூரத்வமாய் நித்திரைக் கலக்கத்தோடு கூறினன். சந்திரலேகா அவனுடைய தூங்குமூஞ்சித்தனத்தைக்கண்டு சிரித்துக்கொண்டு வீட்டிற்குட் சென்றாள்.

II

குளித்தலையில் நாராயணய்யரின் ஹோட்டலில் ஒரு அறையின் ஜன்னல் வழியாகக் கிழித்தெறியப்பட்ட கடிதங்களையும், அங்குள்ள குப்பைகளையும் ஒரு ஒட்டன் எடுத்துச் சென்றான். அறைக்குள்ளிருந்தவர் வெளியில் வந்து என் அவற்றைப் பொறுக்கினையென்று கேட்க, 'அடுப்பு எரிப்பதற்குச் சாமி' என்றான் அவன். கேட்டவர் புன்சிரிப்புடன் ஒரு அணாவை அவன் முகத்தில் விட்டெறிந்து போ என்று சொல்லிவிட்டு உட்சென்றார். மற்றொரு பக்கம் நீலமேகர் நின்றுகொண்டு அவரைக் கவனித்தபடியிருந்தார்.

ஃ

மருதூரில் சந்திரலேகாவின் வீட்டிற்கு, துப்பாக்கி சத்தம் இரவில் கேட்ட மறுதினமே நீலமேகர் வந்து சேர்ந்தார். துப்பாக்கி சத்தத்தைத் தான் நம்புவதற்கில்லையென்றும், எவரேனும் சுடப்பட்டிருந்தால் அது வெளிக்கு வராது போகாதென்றும் கூறினர். கோபாலரைச் சில நாட்களாகப் பார்க்கவில்லையென்றும், அவரைப்பற்றிக் கொண்ட சந்தேகம் இன்னும் தீரவில்லையென்றும் கூறினர். இந்த சந்தேகத்தை சந்திரலேகா அப்பொழுதும் தகாததே என்று மறுத்தாள்.

ஃ

திரிச்சி ஆண்டார் தெருவில் ஒரு வீடு பூட்டப்பட்டிருந்தது. வீட்டின் சொந்தக்காரர்கள் அன்றைய நாடகத்திற்குச் சென்றிருந்தனர். வெளியே கோபாலன் காணப்பட்டான். இரவு பன்னிரண்டு மணி நேரத்துக்கு நீலமேகர் 'அங்கு வந்து பூட்டை வேறு சாவியால் திறந்துகொண்டு உட்செல்ல, உள்ளுக்கிருந்த

பெரிய பெயர் பெற்றுவிட்ட தேசபக்தர்கள் தங்களை யொத்த பெரிய தலைப்பாகைத் தேசபக்தர்களிடத்தில்தான் விசேஷ மரியாதை வைக்கின்றனரேயன்றி, உண்மையிலேயே தேசப்பற்றும் ஊழியமும் கொண்டுள்ள சாமான்யர்களை ஏதோ எறும்பு துரும்புபோல் எண்ணுகிறார்கள். அவர்களால் தங்களுக்கு ஒரு புதுக் கௌரவம் உண்டாகாதென்று எண்ணியோ யாதோ!

ஒரு வேலைக்காரி இவரை யழைத்துக்கொண்டு மேல்மாடியில் ஒரு அறையைக் காண்பித்தாள். நீலமேகர் யாவற்றையும் பார்த்துக்கொண்டு வெளியில் வந்து, அங்கு காத்து நின்ற போலீஸ் இன்ஸ்பெக்டருடனும் இரு கான்ஸ்டேபிள்களுடனும் மறுபடியும் உட்சென்றார். சில நிமிஷங்கட்குப் பிறகு யாவரும் வெளியில் வந்தனர். வீட்டிற்குள்ளே மறைந்திருந்த வேலைக்காரியும் வெளியில் வந்துவிட முன்போல் கதவும் பூட்டப்பெற்றது. இதற்குப் பிறகு இரண்டு மணிக்குமேல் அவ்வீட்டுக்காரர்கள் அங்கு வந்து கதவைத் திறந்து நிகைத்தனர்.

III

நீலமேகர் மிக்க சந்தோஷத்துடன்மறுநாளில் மகாதேவய்யர் இருக்கும் வீட்டிற்குச்சென்று தான் திருடனைக் கண்டுபிடித்துவிட்டதாயும், ஒரு பைராகிக் கூட்டத்தாரால் களவு டைந்திருப்பதாயும், கோபாலனும் அதில் சம்மந்தப்பட்டிருப்பதாயும், சந்திரலேகாவின் வீட்டிற்கு வந்தால் உண்மையான 'குற்றவாளி தானே வந்து அற்புதமாய்ச் சிக்கிக்கொள்வது தெரியுமென்றும், தனக்கு ஆரம்பத்தில் கோபாலனைப்பற்றிக் கொடுத்த யோசனைக் குறிப்பு அதிக உபயோகமாயிருந்ததென்றும் கூறினர். மகாதேவய்யரும் நீலமேகரைச் சிலாகித்துப் பேசி, தமது கைப்புண்ணை நன்றாகக் கட்டிக்கொண்டு அரைமணி நேரத்தில் வருவதாகக் கூறினர். நீலமேகர் நேராக சந்திரலேகாவின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

ஃ

சந்திரலேகா வீட்டில் ஒரு சபைபோல் பலரும் கூடியிருந்தனர். கோபாலனும் ஒரு பக்கம் உட்கார்ந்திருந்தான். நீலமேகர் குற்றவாளியே தனது குற்றத்தை யொப்புக்கொள்ள வரப்போகிறாரென்றுரைத்தார். இது எல்லோருக்கும் வியப்பா யிருந்தது. சிறிதுநேரத்தில் மகாதேவய்யர் அங்கு வந்து சேரவும், நீலமேகர் அவரைப் பார்த்துத் தாங்கள் கமலநாதனைக் களவுசெய்து வீராயியைக் கழுத்தைப் பிசைந்து மண்டையி லடித்துக் கொல்ல முயன்ற குற்றத்தை யொப்புக்கொள்ள வந்திருக்கிறீர்களா என்றார். மகாதேவய்யர் கடுங் கோபத்துடன் தமயன் சொத்தைக் கவருவதற்காக இவ்வளவு வேலைகளைச் செய்த கோபாலன்மீது குற்றஞ் சாட்டாமல் நிரபராதியான தம்மீது பழி கூறுவது ஆச்சரியமாக இருக்கிறதென்றார்:

ஃ

நீலமேகர், வீராயி என்று அழைக்க, வீட்டிற்குள்ளிருந்து ஆச்சரியப்படத்தக்கவாறு வீராயி அங்கு வந்தாள். அவளைக் கண்டதும் மகாதேவய்யர் பிரமித்தார். வீராயி கூறியதாவது.—"நான் இரவில் சரியாகத் தூங்குவதே கிடையாது. அடிக்கடி விழித்துக்கொண்டு ஏதாவது ஒரு வீட்டுவேலை செய்தபடி யிருப்பேன். நான் அரை நித்திரையிலிருக்கையில் முகமூடியணிந்த ஒருவர் என்னைத்

தன் தந்தையினுடைய மனைவி தன்னைப் பெற்ற தாயாக இருந்தால் அப்போதுள்ள பாத்தியதை வேறேதான். தன் தாய் கண் மூடிக்கொண்டு, வேறொருத்தி பிதாவுக்கு மனைவியாக வந்திருந்தாலோ அப்போது சற்றே ஒதுங்கித் தூரத்தில் மரியாதையாக இருக்கவேண்டியதுதான். தன்னை ஈன்ற மாதா இருந்தபோது தன் தந்தையின் சயன அறைக்குள் புகுந்த தாராளம்போல் இப்போது முடியுமா?

தாண்டிச் செல்லவும் அவரை எதிர்த்தேன். உடனே அவர் என் வாயில் துணியை யடைத்து என் கண்ணைக் கட்டினார். நான் ஆனமட்டும் அவரை எதிர்த்தும், கிள்ளியும், அவரது ஜேப்பில் கையிட்டு அதிலிருந்ததை எடுத்தும் என் மடியில் சொருகிக்கொண்டேன். கனத்த இருட்டாதலின் நான் மடியிற் சொருகிக்கொண்டதை அவர் கவனிக்கவில்லை. பிறகு என் கை கால்களையும் கட்டிவிட்டார். அதற்குப் பிறகு என்ன செய்தாரோ தெரியாது. பிறகு என்னை ஒரு மோட்டாரில் தூக்கிப் போட்டுக் கொண்டுசென்று ஓரிடத்தில் நிறுத்தி என்னைக் கழுத்தைப் பிசைந்து, என் தலையில் ஏதோ ஆயுதத்தால் ஓங்கியடித்து என்னைத் தூக்கி ஒரு வயலோரத்தில் எறிந்துவிட்டுச் சென்றுவிட்டார். நான் உயிர் போகாமல் மூர்ச்சித்துக் கிடந்தேன். நான் விழுந்துகிடந்த இடம் குளித்தலை ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகிலாகும். போலீசார் என்னைக் கண்டெடுத்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள்" என்று கூறித் தன்னை எதிர்த்தவரிடமிருந்து எடுத்த சில கடிதங்களைக் கொடுத்தாள். அக்கடிதங்களில் ஒன்று சந்திரலேகாவின் கணவனது வமிசாவளியைக் காட்டுவதாகவும், அதில் மகாதேவய்யரும் வார்சு பாத்தியதையுள்ள தாயாதியாகவும் குறிப்பிட்டிருந்தது. இரண்டு கடிதங்கள் இரங்கூனிலிருந்து மகாதேவய்யருக்கு வந்தவை.

ஃ

வீராயி கூறி முடித்ததும், போலீஸ் இனிஸ்பெக்டர் கமலநாதனைத் தூக்கிக்கொண்டு உள் நுழைந்தார். குழந்தையைக் கண்டதும் சந்திரலேகா ஆவலுடன் எடுத்து அணைத்துக்கொண்டாள். கோபாலன் பூரிப்புடன், சீதாராம் என்றார். போலீஸ் இன்ஸ்பெக்டர் கமலநாதனைக் களவு செய்த குற்றத்திற்காகவும், வீராயியைக் கொல்ல முயன்றதற்காகவும் மகாதேவய்யரைத் தாம் கைது செய்வதாகக் கூறினார்.

ஃ

நீலமேகர் புகன்றதாவது:—மகாதேவய்யர், கோபாலன் இவ்வூருக்கு வந்தபின்பே குழந்தை களவாடப்பட்டிருப்பதாய் என்னிடம் சொன்ன போது, சொல்லிய அவரையே நான் சந்தேகித்தேன். ஏனெனில், கோபாலன் தனது சொத்துக்களைப் பெறக் குழந்தையைக் களவு செய்ய வேண்டிய நிமித்தமில்லை. கோபாலன் தலை யசைத்தால் சந்திரலேகா சகல சொத்துக்களையும் ஒப்புவிக்கத் தயாராக இருந்ததையும் கவனித்துக் கொண்டேன். பிறகு நான் கோபாலனைத் தொடர்ந்து மகாதேவய்யர் மீது எனக்குள்ள சந்தேகத்தைச் சொல்லவே, அவன் அவரை நன்றாகக் கவனித்து வெகுநாளைக்கு முன்பு எங்கோ சென்றுவிட்ட மிக்க நெருங்கிய தாயாதி என்று கூறி நன்றாகத் தனக்கு இப்போது அடையாளம் தெரிவதாக நவின்றான். நீயும் கமலநாதனும் இறந்துவிட்டால் சொத்துக்கள் யாரைச் சேருமென்று நான் கோபாலனைக் கேட்கவும், அவன் திடுக்கிட்டுப்போய், இந்தத் தாயாதியே முதல் பாத்தியக்காரர் என்று சொல்லி, ஓ! நீங்கள் மகாதேவய்யரைச் சந்தேகித்தது சரி என்றான். நான் கோபாலனுக்கும் மரண பயம்

அந்த மருமகளை வேண்டாமென்கிறாள் மாமி. மகனுக்கோ மனைவி வேண்டியிருக்கிறது. மூடியும் ஜாடியும் தூரத்தூரப் பிரிவதில் இரண்டுக்குமே மதிப்பு கெடுகிறது.

உண்டாகலாமென்று எச்சரித்து விட்டு, மகாதேவய்யரைத் தொடர்ந்ததில் குளித்தலையில் ஒரு ஓட்டலில் தங்கியிருப்பதாகத் தெரிந்தது. மருதூரில் ஒரு வாரத்திற்குமுன் பழக்கமான ஒருவர் வீட்டில் தங்குவதாயும் சொந்த இடம் இங்கு இல்லையென்றும் தெளிவாயிற்று. பிறகு அவர் அடிக்கடி திரிச்சிணப்பள்ளிக்குச் சென்று ஆண்டார் வீதியிலுள்ள ஒரு வீட்டிற்குப் போவதையும் கவனித்து எல்லா இடங்கட்கும் என் ஆட்களைக் காவல் வைத்தேன். சந்திரலேகா என்னிடம் தந்த கார்டைக் கவனித்ததில் அதில் குளித்தலைத் தபாலாபீஸ் முத்திரை பட்டிருப்பதுபோல் இருந்ததைப் பூதக்கண்ணுடியால் சோதித்து, அக்கார்டு குளித்தலையிலிருந்து ஒரு கவரிலிட்டு சென்னையில் ஒருவருக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து மருதூருக்கு சந்திரலேகாவுக்குத் திருப்பப்பட்டிருப்பதாயூகித்தேன். குளித்தலையிலிருந் தனுப்பியது மகாதேவய்யரே என்று தீர்மானித்தேன். இதைச் சோதித்தறிய விரும்பி, நான் ஒரு வாரவ்வரை வெளியூரிலிருக்கப் போவதாய் சந்திரலேகாவுக்குக் கூறிவிட்டு, மகாதேவய்யரையும் கண்டு பிரயாணம் சொல்லிக்கொண்டு புறப்பட்டுவிட்டேன்.

ஃ

கருப்பன் என்ற வேடத்தில் என்னை முழுதும் மறைத்துப் பிரதி இரவும் சத்திரலேகா வீட்டில் காவலிருக்கையில், இரண்டாம் நாள் ஒருவன் உட்புகுவதற்குத் தன் கையை நீட்டிச் சுவர்மீது ஏற, நான் கையை நோக்கிச் சுட்டேன். அவனும் கூச்சலிட்டு ஓடினன். மறுதினமே மகாதேவய்யரைப்பற்றிக் குளித்தலையில் ஹோட்டல்காரரை விசாரிக்க, கையில் ஏதோ கனத்த காயம் பட்டிருப்பதாய் அவர்மூலம் தெரிந்தது. இரவு வந்தது மகாதேவரென்பதையும் குறித்துக்கொண்டேன். பிறகு ஒரு ஓட்டனைக் கூலிக்கு அமர்த்தி, மகாதேவய்யரின் அறையிலிருந்து கிழித்தெறியும் கடிதங்களை ஜாடையாகப் பொறுக்கச்செய்து கவனித்ததில், திரிச்சி ஆண்டார் தெருவிலுள்ள வீட்டில் அதிக நாள் வைத்திருப்பது ஆபத்து என்றும், தனக்கு 30-ரூபாய் உடனே கொடுக்காவிடில் பிரிந்துவிடுவதாகவும் எழுதியிருந்தது. இவ்விஷயமாய்க் குளித்தலை போலீஸ் இனிஸ்பெக்டருடன் கலந்ததில், அவர் வீராயி பிழைத்திருப்பதாகக் கூறினர். உடனே ஆஸ்பத்திரியில் வீராயியைக் கண்டு, யாவும் தெரிந்து ரகசியமாய் சந்திரலேகாவிடம் ஒப்புவித்தேன்.

ஃ

ஆண்டார் தெருவில் மகாதேவய்யர் வீட்டின் வேலைக்காரியை ஐம்பது ரூபாய் கொடுத்து வசப்படுத்தி வீட்டின் உள் ரகசியங்களைக் கவனிக்கச் செய்ததில், ஒரு சிறு குழந்தை அங்கிருப்பதாயும் அறிந்தேன். வேலைக்காரிக்கும் தெரியாதபடி குழந்தையை மறைத்திருந்தாலும், மேல் மெத்தயிலுள்ள மலத்தைப் பிரதிதினமும் வேலைக்காரி எடுத்துச் சுத்தி செய்வதில் அது 3, 4-வயதுக் குழந்தையின் மலமாய்த்தான் இருக்க வேண்டுமென்று வேலைக்காரி கூறினள். மூன்று பேர் அவ்வீட்டி லிருப்பதாகத்

மனித வாழ்க்கையை ஒரு தெய்வீக சக்தி உருப்படுத்துகிறது. அந்த சக்தி தனது வழியிலே மனிதனை நடத்திச்சென்று அவனுக்கு அதுவரையில் இல்லாதிருந்த திறமைகளையெல்லாம் உண்டாக்கி உயர்த்தி உலகுக்கு உபயோகமுள்ளவனுக்கி விடுகின்றது.

தெரிந்து, பிறகு இரவில் அவர்கள் இல்லாத சமயம் பார்த்து உட்புகுந்து வேலைக்காரியின் மூலமாய் மேல் மெத்தையில் தேடி ஒரு அறையில் குழந்தையின் மூச்சு விடுவதைக் கவனித்து பிறகு போலீஸ் இனிஸ்பெக்டருடன் சென்று அவ்வறையைத் திறக்கச்செய்து, அங்கிருந்தவளையும் குழந்தையையும் இன்ஸ்பெக்டரிடம் ஒப்புவித்து, மறுநாட் காலையில் குழந்தையுடன் மருதூருக்கு வருமாறு சொல்லி, நான்மட்டும் மருதூருக்குப் புறப்பட்டு வந்து சந்திரலேகாவிடம் யாவும் புகன்றேன்.

ஃ

ஆண்டாத் தெருவில் குழந்தை காணமற்போனதைத் தன் ஆட்கள் மூலம் மகாதேவய்யர் அறிந்து, அதைப்பற்றி ஏதேனும் விவரம் தெரிவதற்காகக் குளித்தலையிலிருந்து மருதூரில் தனது நண்பரின் வீட்டிற்கு வந்திருக்கலாமென்று நினைத்து அங்கு போக, நான் ஊகித்தபடி மகாதேவய்யரும் அங்கு இருந்தார். நான் கோபாலனையே கைது செய்யப் போவதாகக் கூறி அவரையும் வரும்படி சொல்லிவிட்டுவந்தேன். ஆரம்ப முதல் மகாதேவய்யர் என்னைச் சந்தேகிக்காதபடி கோபாலனே குற்றவாளி என்று எல்லோரிடமும் சொல்லி வந்திருக்கிறேன். மகாதேவய்யர் கமலநாதனைக் கொன்றுவிட்டுத் தாமே தாயாதி வகையில் முதல் பாத்தியஸ்தரென்று சந்திரலேகாவின் சொத்துக்களையடைவதற்காக அதற்கு வேண்டிய மூன்று தடியர்களுடன் இரங்கூனிலிருந்தும் குளித்தலை வந்து ஒரு மாதமாக ஏற்பாடு செய்தபடியிருந்து கடைசியில் கமலநாதனைக் களவாடி எதிர்த்த வீராயியைக் கொல்ல முயல்கிறார். இதிலே கோபாலன் இந்தக் களவுக்கு நான்குநாள் முன்பாக இவ்வூர் வந்து சேர்ந்தது தற்செயலாக நேர்ந்த ஸம்பவம். ஆயினும், தந்திரசாலியான மகாதேவய்யர் கோபாலனே குழந்தையைக் களவாடித் தமயன் சொத்துக்களையும் அடையப் பிரயத்தனப்பட்டதாக எவரும் நம்பும்படி கதைகட்டி விடுகிறார். நான் போலீஸ் இன்ஸ்பெக்டரை வேண்டிக்கொண்டிராவிடில், கட்டாயம் கோபாலன் போலீஸாரால் கைதுசெய்யப்பட்டிருப்பான். மகாதேவய்யர் கடைசியில் குழந்தையைக் கொன்றுவிட அந்தக் கொலை கோபாலன்மீது சுமத்தப்பட்டு அவன் தூக்கு சிக்ஷையும் பெற்றுவிடலாம். இப்படி நடுவில் தற்செயலாக வந்த கோபாலனும் ஒழிந்து தொலைய, குழந்தையும் செத்து மண்ணாக, சந்திரலேகாவின் சகல சொத்தும் மகாதேவய்யருக்கே கடைசியில் ஆகிவி. லாம். இவ்வளவு சாமர்த்தியங்கள் செய்தவர் இப்போது ஏமாறிவிட்டார். நான் சுட்ட துப்பாக்கியின் காயமே அவர் கையில் பட்டிருப்பது; வேறு எந்தப் புண்ணுமல்ல என்று நீலமேகர் சகலமும் விவரித்துரைத்தார்.

ஃ

மகாதேவய்யர் திகைத்துப் போனார். தமது குற்றங்களை ஒப்புக்கொண்டார். அவருக்கும் அவருடனிருந்த மூவருக்கும் ஐந்து வருஷ சிக்ஷை கிடைத்தது. கோபாலன் மறுபடியும் பைராகிக் கூட்டத்துடன் காசி யாத்திரைக்குப் புறப்படலானான். விவாகம் செய்துகொண்டு

தம்பிக்கு தாலிகட்டிய மனைவி வருகிறாள். அண்ணனுக்கோ அவன் தானே தேடிக்கொண்ட வைப்பு ஸ்திரீயே கதி! அது அவரவர்களின் அதிர்ஷ்டவிதி!

வீட்டுடன் இருக்குமாறு சந்திரலேகா எவ்வளவோ வேண்டியும் அவன் ஒப்பவில்லை. நீலமேகருக்கு ஆயிரம் ரூபாய் சந்திரலேகா பரிசு அளித்தாள். குழந்தை கமலநாதன் சுகமே தன் அன்னையிடம் வளர்ந்து வருகிறான். தாயாதித் துன்பத்திலும் கொடுந்துன்பம் வேறுண்டோ?

மனதின் தன்மைக்குத் தக்கபடி எண்ணுதல்.

ஒருவரை இகழ்ச்சி செய்யவேண்டுமென்று எண்ணாமல், அவரைக் குறித்து நிந்தையாகக் கூறினும், அது புகழ்வதான அர்த்தமே கொள்ளும். பல்லில்லாக் கிழவன் என்று ஒரு கைக்குழந்தையைப்பற்றிச் சொல்லும்போது அதைத் தாழ்த்திப் பேசியதாக அதற்குப் பொருளாகாது. தன் குமார்த்தியின் வீட்டிற்கு வந்திருக்கும் தாய், "நான் நாளை ஊருக்குப் போகவேண்டுமம்மா" என்னும்போது, மகள் கோபத்துடன் "அப்படியே போ" என்று உடனே பதில் சொல்லிவிட்டு, ஒரு அறைக்குட் சென்று படுத்துக்கொண்டு விம்மி விம்மி அழுகிறாள். தாய் அங்கு சென்று சமாதானம் செய்யப்போக, அதற்குப் புத்திரி "நீ ஊருக்குப் போ" என்று கூறிப் பின்னும் அதிகமாகக் கண்ணீர் பெருக்குகிறாள். போ, போ என்று தன் குமார்த்தி துரத்தியுங்கூட, தாய் தன் பிரயாணத்தை நிறுத்திவிடுகிறாள். பிரயாணம் நின்றதைக் கண்டு புத்திரி பூரிப்புடனும் தாயைத் தழுவிக் கொள்கிறாள். அன்பின் காரணமாகச் சொல்லும் சொற்கள் கடினமாயிருப்பினும், அதற்கே அதிக சுவை ஏற்படுவது வழக்கம். எனக்கு இலையில் காய்கறிகள் அதிகம் வைக்கிறதுபோலக் குழந்தைகட்கு நீ வைப்பதில்லை என்று தன் மனைவியைப் பழிக்கும்போது, அவள் 'முன்பு வேறே புசித்துவிட்டு இப்போது இரண்டாம் முறையாக இலையில் உட்கார்ந்திருக்கிறார்கள்' என்று சாதாரணமாகப் பதில் கூறுகிறாள் தன் கணவன் தன்னைப் பழித்ததை அவள் ஒரு குற்றச் சொல்லாக நினைக்கவில்லை. அவள் அக்குழந்தையின் சொந்தத் தாயாக இல்லாமல் மாற்றாந்தாயாக இருந்தாலோ, தன் கணவன் தன்னைப் பழித்ததற்குக் கனத்த கோபம் கொள்ளத் தொடங்குவாள். மனதின் தன்மைக்கும், அன்பின் தன்மைக்கும் தக்கபடி பிறரோ, தானோ சொல்லும் சொற்களுக்குப் பொருள் கொள்ளப்படும்.

பணத்திற்கு உண்டான உயர்வு எப்படி?

(705-ம் பக்கத் தொடர்ச்சி.)

II

ஆபிரிக்காவின் மேற்குக் கரையில் கிளிஞ்சில்களும், அபிசீனியாவில் இந்துப்புக் கட்டிகளும், சில இடங்களில் இரும்பும், சில இடங்களில் பித்தளையும், சில தேசங்களில் தோல்களும், சில தேசங்களில் ஆடுமாடுகளும் பணமாக உபயோகப்பட்டு வந்திருந்தாலும், பொன் வெள்ளி அகப்படக் கூடிய எல்லாத் தேசங்களிலும் சாதாரணமாய் அவைகளே வெகு காலந் தொடங்கிப் பணமாகக் கொள்ளப்பட்டு வருகின்றன. பொன் வெள்ளிகளுக்கு இன்னொரு மேலான குணமுண்டு. உலகத்தில் அநேகமாய் எல்லா வஸ்துக்களும் நாளாவர்த்தியில் அதிகப்படுதலினாலும் குறைந்து போதலினாலும் மதிப்பில் முறையே குறைந்துகொண்டும் உயர்ந்துகொண்டு மிருக்கின்றன. பொன் வெள்ளியோ அப்படியல்ல; அவைகளின் மதிப்புக்குப் பெரும்பாலும் மாறுதலுண்டாகாது. ஒருவர்க்கொருவர் முன் வாங்கிப் பின் கொடுப்பதற்கும், முன் கொடுத்துப் பின்னர் வாங்குவதற்கும் பொன் வெள்ளியைத் தவிர வேறே தகுந்த பொருள் இல்லை. இந்த வருஷம் பத்து கலம் நெல் கொடுத்து, வருகிற வருஷம் அதே பத்து கல நெல் வாங்கிக் கொள்வதற்கு என்னவென்றாலோ, இந்த வருஷம் இருபது ரூபாய் விலையுள்ள நெல் வருகிற வருஷம் செம்மையாய் விளைந்தால், பத்து ரூபாயிருந்தாலுமிருக்கும்; மழையில்லாமல் க்ஷாமமாயிருந்தால் நாற்பது ரூபாய்க்குமேற் போனாலும் போகும். இப்படியே எல்லாப் பொருள்களுக்கும் நயமென்றும் நஷ்டமென்றும் இரண்டு இருக்க, பொன் வெள்ளிகளுக்கு அவ்விரண்டும் அநேகமாய் இல்லையென்றே சொல்லலாம்.

ஃ

பொருள்களை வாங்குவதற்கும் விற்கிறதற்கும் பொன் வெள்ளிகள் கைம்மாறாக ஏற்பட்டுப் போன பிறகு, அவைகளை நாணயங்களாக அடிக்கவேண்டுமென்று தோன்றுவது இயல்பன்றோ? அதாவது, அப்போதைக்கப்போது பொன்னையும் வெள்ளியையும் நிறுத்து நிறுத்துச் சிறுசிறு பாகங்களாக வெட்டும்படி நேரிடுவதனாலுண்டாகும் அவஸ்தையினிமித்தம் எத்தனைச் சிறு பாகங்கள் அவசியமாக இருக்கவேண்டுமென்று காண்கிறதோ, அதை நிச்சயித்து, ஒவ்வொன்றுக்கும் இவ்வளவு இவ்வளவு நிறையென்று தீர்மானித்து, அவைகளுக்கு ஒரு கணக்குக்கு உட்பட்ட வடிவம் கொடுப்பது

உறவு—நட்பு முதலியவைகளைப் பிறகு சொல்லிக் குலாவிக்கொள்ளலாம். இம்போது நான் உனக்குத் தரவேண்டிய பாக்கியைப் பெற்றுப்போ—என்கிற கண்டிப்புக்காரரின் முன்பு அதிகமாக வாய்திறக்க முடிகிறதில்லை.

தான். இந்தக் காரியத்தை ஒவ்வொரு வனும் தனித் தனியாக இஷ்டப்படி செய்வது கூடாதென்று தடுத்து, எல்லாருக்கும் பொதுவில் அரசாட்சி நடத்தி வருகிற அதிகாரிகளே மேற் போட்டுக்கொண்டார்கள்.

ஃ

பணம் உபயோகத்தின் கீழ் வந்து விட்ட பிறகு, அவரவர்களுடைய ஆஸ்திகளும் சம்பாத்தியங்களும் செலவுகளும் பணத்தினால் அளவி டப்பட்டு வருகின்றன. தத்தமக்கு வேண்டிய பொருள்களைப் பணமிருந் தால் அடையலாமென்ற விஷயம் எல்லாருடைய மனதிலும் நன்றாய் ஸ்திரப்பட்டுப் போயிருக்கிறபடியால் மற்றப் பொருள்களினிடத்தி லிருக் கிறதைவிட அதிகமான ஓர் ஆசை யும் நோக்கமும் பணத்தினிடத்தில் உண்டாகிறது; ஆகவே, இந்தப்பணம் தான் ஐசுவரியம்; மற்றொன்றும் ஐசுவரியமல்லவென்றும் தோன்று வதற்கும் இடமுண்டாய்விட்டது. இதன்றியும், பணத்தை விசேஷமா கக் கையாளாமல் மிகவும் உபயோக மான பொருள்களைப் பயிராக்குவதில் நாட்டமுள்ள பாரிக் குடியானவர் களும், அவர்களைப்போன்ற மற்றத் தொழிலாளிகளும், தங்களின் பொ ருள்களை மதிக்கிறதானது என்னத்தி னாலே யென்றால், அந்தப் பொருள் களால் அதிகப் பணம் கிடைக்கு மென்ற எண்ணத்தினாலேயே அல் லாமல் வேறல்ல.

ஃ

ஒரு பொருளை முதலில் பண மாக்கிப் பிறகு, அந்தப் பணத்தைக் கொண்டு வேறு பொருளை வாங்கு வதற்கும், அந்தப் பொருள்களையே நேராய் ஒன்றுக்கொன்று மாற்றிக் கொள்ளுவதற்கும் வித்தியாஸ மென்ன? முன்னது சுலபமான காரி யம், பின்னதோ வருத்தமானது: இதுதான் வித்தியாஸம். மற்றபடி வேறு வித்தியாஸமில்லை. இதனால் பணத்தின் உபயோகமானது ஜனங் களுக்குள் நடக்கும் பொருள் மாற்றல் முதலிய காரியங்களைச் சுலபப்படுத்து வதற்காகவே யென்று தெரிந்து கொள்ளலாம்.

ஃ

எஜமானன் வேலைக்காரனிடத் தில் வேலை வாங்கிக்கொண்டு அவன் வயிற்றுக்கு வேண்டிய பொருள்களை அடைவதற்கு சாதனமென்று கொள் ளப்பட்ட பணத்தைக் கொடுக்கிறான். ரயில்வண்டி ஏறுவதற்காக நாம் பணம் கொடுத்து வாங்குகிற டிக்கட் டானது உத்தேசித்த இடத்துக்கு நம்மைக் கொண்டுபோய்விடவேண்டு மென்பதற்கு எப்படி அடையாளமா யிருக்கிறதோ, அப்படியே, வேலைக் காரனுக்கு வேண்டிய பொருள்கள் கிடைப்பதற்காகக் கொடுக்கப்படுகிற அடையாளமன்றோ அவன் சம்பள மாக வாங்கின பணம்?

ஃ

எப்படியாவது நிறைவேறக் கூடியதோர் காரியத்தைச் சுலபமா யும் சீக்கிரமாயும் செய்யப்பண்ணு கிறதுமாத்திரந்தான் பணத்தின் பிர யோஜனம். ஒருவன் தனக்கு வர வேண்டிய வரும்படிகளைப் பணமாய் வாங்கிக்கொண்டு, நினைத்தபோது தனக்கு வேண்டிய பொருள்களாக அதை மாற்றிக்கொள்ளலாமென்ப

"பெரிய உத்தியோகஸ்தர்"—எனல் நல்ல பிழைப்பு கிடைத்த அதிர்ஷ்ட சாலி யென்று அர்த்தம்.

தொன்றுழிய, பணத்தினுல் உண்டாகும் பிரயோஜனம் வேறில்லை. பணத்தைச் சும்மா கையில் வைத்துக் கொண்டிருந்தால் பசியாறுமா? கடும் பாலைவனத்தில் மனித ஸஞ்சாரமற்ற பூமியில் பணத்தை வைத்துக் கொண்டு அதற்குப் பதிலாக ஒரு பிடி சோறு கேட்டால் கிடைக்குமா? பணத்தைக்கொண்டு ஒரு குழந்தையைத் தானே உண்டாக்கிக்கொள்ள முடியுமா? தன்னை விரும்பாத ஒரு பெண்ணின் பிரீதியைப் பணத்தால் பெற்றுக்கொள்ளக்கூடுமா? பணத்தால் நமது ஆயுளை ஒருநிமிஷமாவது அதிகப்படுத்த சாத்தியமா? பணம் வழங்குகிற இடத்தில் சிரமமில்லாமல் எல்லாவற்றையும் விலைக்குப் பெறலாம். பணம் வழங்காத இடத்தில் பணத்தைக்கொண்டு எதையும் செய்ய முடியாது. பணத்தினுல் சௌக்கிய முண்டென்ருலும், அதனுலேயே உலகத்தின் சந்தோஷங்கள் இன்பங்கள் எல்லாவற்றையும் பெற்றுவிடலாமென்று எண்ணிக்கொள்வது மிகவும் பிசகு என்பதற்குச் சந்தேகமில்லை. பணக்காரர்களில் வெகுபேர் மனக்குறையுடனும் பிணியுடனும் ஸஞ்சல பிரலாபிப்புடனும் இருக்கிருர்களே! அது என்? நம்முடைய வீட்டிற்குப் போகிறதற்கு நல்ல பாதை ஒன்றிருந்து, அதனுல் நமக்கு 'அதிக சௌக்கியம் உண்டாகிறதென்ருலும், அது வீட்டுக்குப் போகப் பாதையே யன்றி வீடாகுமோ? அதுபோலவே, பணமானது வழங்குவதற்குச் சுலபமானதொன்றே தவிர நமது தலைவிதியைத் திருத்தி யமைக்கவோ, தெய்வ சோதனைகளை வராமல் தடுக்கவோ கூடியதல்ல.

தன் தாய் நேசித்திருக்கும் ஏழைக்குடும்பத்திலுள்ள பெண்ணுக்குத் தனது சொந்தச் செலவில் விவாகத்தைச் செய்துவைக்க லக்ஷ்மீமானுன ஒரு வாலிபன் முயலுகிருன். மணப்பெண்ணை நாலாயிரம் ரூபாய்க்கு வைர நகைகளால் சிங்காரித்து, மூவாயிரம் ரூபாய் வரதக்ஷிணையும் மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுக்கச் சித்தமாகிருன். மாப்பிள்ளை வீட்டாரோ பேராசைகொண்டு இன்னும் ஒரு ஆயிரம் ரூபாய் தந்தால்தான் விவாகத்தை நடத்த முடியுமென்று கொடுமையாய்ப் பேசுகின்றனர். பணத்தைவிடப் பெண் எவ்வளவோ பெரிய தங்க விக்கிரகமென்றும், அதற்குச் சரியான விலை இவ்வுலகிலில்லையென்றும் வாலிபன்கூறி மேற்கொண்டு ஆயிரம் ரூபாய் தர மறுத்துவிடுகிருன். மாப்பிள்ளை வீட்டாரும் கண்டிப்பாய் மீறி உக்கிரகமாகிருர்கள். வாலிபனே தன் பிகுவு விடாமல் இன்னும் அதிக கண்டிதமாகி—"இவ்வாறு கலகஞ்செய்கிறவர்களின் கையிலே ஒரு பெண்மணியை ஒப்புவிக்கத் துணிபவன் சண்டாளனுவான்"—என்று கூறி மாப்பிள்ளை வீட்டாரை வெளியிற் போகலாம் என்று விடுகிருன். மறு நிமிஷத்தில் தானே மணக்கோலம்பூண்டு அப்பெண்ணை மணந்துகொள்ள ஏற்பாடுகள் செய்துவிடுகிருன். மாப்பிள்ளை வீட்டார் அவமானத்துடன் வெளியிற் செல்ல நேர்கிறது. பேராசையின் முடிவு இது.

"அமிர்தகுணபோதினி"யின் ஒன்பதாவது வருடத்திய புது சந்தாவை மணியாடர் செய்தாய்விட்டதா? இன்னும் மணியாடர் செய்யாதவர்கள் இப்பத்திரிகையைப் பெற்றதும் உடனே வருஷ சந்தாவான ஒரே ரூபாயை அன்புடன் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிருேம். இப்போது 80-பக்கங்கள் கொண்டதாகப் பத்திரிகை உயர்ந்துள்ளதையும் தெரிவித்துக் கொள்கிருேம்.

ரமாவின் பதிபக்தி

ரமாபாய் ஒரு சிறிய பெண். இவளுக்கு கிருஷ்ணன் என்கிற சிறுவனிடம் ஆசை அதிகம். கிருஷ்ணன் உமயாபுரத்தில் இருப்பவன். ரமா கமலாபுரி. இளம் பிராயத்திலே இவ்விரு சிறுவர்களும் சாயங்காலம் சேர்ந்து விளையாடுவது வழக்கம். கமலாபுரியில் ஒரு சிறு மலையுண்டு. இம் மலைமீது ஒரு சிறிய லக்ஷ்மி கோவில். மலைமீது ஏறப்படிக்கட்டுகளுமிருந்தன. அதன் மேல் போட்டி போட்டுக்கொண்டு "நான் முன், நீ முன்" என்று ஓடி விளையாடுவார்கள். மலையடிவாரத்தில் ஒரு நந்தவனம் உண்டு.

ஃ

கிருஷ்ணன் தரும பாடசாலையில் படித்துவந்தான். சாயங்காலம் தினந்தோறும் ரமாவுடன் விளையாடுவான். ஒவ்வொரு நாளும் ரமாவுக்கு நந்தவனத்தில் உட்கார்ந்துகொண்டு அரிச்சுவடியைக் கற்றுக்கொடுப்பான். ரமாவும், 'அ ஆ இ ஈ.' என்று இனிய குரலில் திருப்பிச் சொல்லுவாள். மண்ணில் எழுதுவாள். ரமாவுக்குச் சிறு புஸ்தகங்கள் வாசிக்கும் திறமை வந்தது. ஒரு நாள் இவள் நந்தவனத்தில் புஷ்பங்கள் எடுத்து ஒரு மாலை தொடுத்தாள். "இந்த மாலை யாருக்குத் தெரியுமோ? எத்தனை பெரியது? என்ன வாசனை? என்றான் ரமா. "லக்ஷ்மி தேவிக்கு" என்றான் கிருஷ்ணன். உடனே பரபரப்புடன் எழுந்து கிருஷ்ணன் கழுத்தில் அம்மாலையைச் சூட்டினாள் ரமா.

ஃ

சூரியன் மலைவாயில் விழுந்தான். மேய்ந்துகொண்டிருந்த ஆடுமாடுகள் எல்லாம் வீட்டிற்குத் திரும்பின. பறவைகளெல்லாம் தங்கள் கூட்டிற்குப் பறந்தன. கிருஷ்ணன் ரமாவின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு "நான் மதராஸுக்குப் போய் ஹைஸ்கூலில் படிக்க நாளைய தினம் புறப்படுகிறேன்" என்றான்.

ரமா "எனக்கு ஒரு பெரிய பொம்மைப் புஸ்தகம் வாங்கிக்கொண்டு வர்ரையா?" என்றாள்.

ஃ

ரமாவிடத்தில் அவள் தாயாருக்கு அதிகப் பிரியம். கிருஷ்ணனும் இவளும் சேர்ந்து விளையாடுவதைக் கண்டு சந்தோஷப்படுவாள். இப்படி 10-வருஷம் சென்றன. கிருஷ்ணனும் எப். ஏ. பரீக்ஷை தேறியபின் அடிக்கடி ரமாவுக்கு கடிதமும் எழுதிவந்தான். ரமா நாணத்தால் பதில் போடுவதில்லை. கிருஷ்ணன்மட்டும் தபால் எழுதுவதில் தவறுவதில்லை. இச்சிறுவர்களுடைய தாய் தந்தையர்கள் இவர்களுக்குக் கலியாணம்செய்ய நிச்சயித்தனர். நல்ல முகூர்த்தத்தில் கலியாணமும் சிறப்பாக நடந்தது. சிறு தம்பதிகளும் ஒருவருக்கொருவர் அன்புடன் இருந்தனர்.

ஃ

யோசனை—விவேகம் இல்லாதவன் தடித்து நீண்டு வளர்ந்து யாருக்கு என்ன லாபம்?

கிருஷ்ணன் பாரிஸ்டர் படிப்பு படிக்க லண்டனுக்குப்போனான். ரமா தன் கணவனை விட்டுபிரிந்த துக்கத்தால் வருந்தினாள். தினந்தோறும் அஸ்தமான வேளையில் நதிக்கரையில் உட்கார்ந்து தன் துக்கத்தை நினைந்து உருகினாள். இவள் தாயாரும் இறந்தாள். ரமாவின் மாமாவின் சிநேகிதன் வரதாச்சாரி என்பவன் ஒருவன் இருந்தான். இவனுடைய திருஷ்டி ரமாவின்மீது விழுந்தது. துணையில்லாத சிறுமிகளைக் கண்டால் உற்றுப் பார்க்கும் குணம் சில மகா புருஷர்களுடைய சுபாவம்! வரதாச்சாரி ஒரு வைஷ்ணவர். ராமானுஜாச்சாரியார் சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர். எப்போதும் சரீரத்தில் துவாதச நாமங்கள் பளபளவென்று பிரகாசித்த வண்ணமாயிருக்கும். மூன்று நாளைக்குங்கூட அழியாமல் அப்படியே இருக்கும்! கழுத்தில் துளசி மாலையும் தொங்கிக்கொண்டிருக்கும். ராமா ராமா" வென்று சப்தம் செய்வார். இவரைப் பார்த்த மாத்திரத்திலேயே பெரிய உத்தம பக்தன் என்று எண்ணவேண்டியதாயிருக்கும். அவரது மனத்திலுள்ள அழுக்கோ இரண்டு கழுதைச் சுமையென யிருக்கும். ரமாவின் மாமா பெயரைச் சொல்லிக்கொண்டு துணையில்லாத இச்சிறுமிக்கு உபகாரம் செய்ய வீட்டு வேலை யெல்லாம் பார்த்து வந்தான். ரமா தன் புருஷனுக்கு எழுதிய கடிதங்களை இவனிடம் கொடுத்துத் தபாலுக்கு அனுப்புவாள். இவனும் அடிக்கடி பதிவிரதா தருமத்தைப்பற்றிப் புராணக் கதைகளைச் சொல்லி பிரசங்கங்கள் செய்து வருவான். ரமாவும் இவன் சாத்வீகப்பேர்வழி என்று நம்பினாள். அடிக்கடி தன் கஷ்டங்களை இவனிடம் சொல்லிக்கொள்ளுவதில் சங்கோசப்படுவதில்லை.

ஃ

ஒரு நாள் தந்தி வந்தது. வரதாச்சாரி அதை படித்துக் காட்டினான். அதில் கிருஷ்ணன் பம்பாய்க்கு வந்துசேரும் தேதியும் அன்று பம்பாயில் தன்னை வந்து பார்க்கவேண்டுமென்றும் எழுதியிருந்தது. ரமாவும் தனிமையாக எப்படிப் போவது என்று கவலைப்பட்டாள். வரதாச்சாரி அழைத்து போவதாகச் சொன்னான். கபடமற்ற மனதுடைய ரமாவும் அவனை நம்பி அன்று இரவு ரயில் ஏறி பம்பாய்க்குப் புறப்பட்டாள். பம்பாயில் ஊரெல்லாம் சுற்றிச் சென்று ஒரு ஹோட்டலில் ரமாவுடன் தங்கினான். தந்தியில் கண்டிருந்த தேதியும் வந்தது. கிருஷ்ணன் வரவில்லை. அடுத்த கப்பலில் வரலாமென்றும், அதுவரை பம்பாயில் தங்கியிருப்பது நலமென்றும் வரதாச்சாரி சொன்னதை நம்பி அங்கேயே இருந்தாள். வரதாச்சாரியின் சூழ்ச்சி யெல்லாம் கபடமற்ற ரமாவுக்குப் புலப்படவேயில்லை. பம்பாயில் சிலரிடம் ரமா தன் பெண்ஜாதி யென்று வரதாச்சாரி சொல்லுவது ரமாவின் காதில் விழுந்தது. உடனே பம்பாயை விட்டு வரதாச்சாரிக்குத் தெரியாமல் புறப்பட்டுவிட எண்ணி இரவில் ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்தாள்.

ஃ

வழியிலே ரமா "ஸ்டேஷன் இன்னும் வெகு தூரமோ?" என்று ஒருவரை விசாரிக்க, அவர் "அம்மா!

பத்திராசிரியர்களையும் தாசிகளையும் ஏமாற்ற முடியாது. பெரிய கை என்று ஏமாறுகிறவர்களும் இவர்களே! இவர்களைச் சுற்றி நிற்கிற கூட்டத்துக்கும் குறைவில்லை. காசு தருவோர்தான் கொஞ்சமாம்.

தாங்கள் தன்னந் தனியே போகிறீர்களே; தங்களுக்குத் துணை எவருமில்லையோ? சென்னைப் பக்கத்துப்பெண் மணிபோல் தெரிகிறதே, நானும் அந்தப் பக்கத்துக்காரன்தான்; ஸ்டேஷனைக் காண்பிக்கிறேன் வாருங்கள்” என்று கூற, ரமாவும் அவரை நம்பி உடன் சென்றாள். வழியில் ரமாவின் வரலாறுகளையெல்லாம் சிறுகச் சிறுகக் கேட்டு யாவும் தெரிந்துகொண்ட அந்த மனிதன் ரயில்வே ஸ்டேஷனைச் சேர்ந்ததும், அங்கிருந்த தன் பெட்டி மூட்டைகளுக்கு அருகில் ரமாவை உட்கார வைத்து, தன் கூஜாவைத் திறந்து டம்ளரில் காபியை ஊற்றி ரமாவைப் பருகும்படி வேண்டினான். ரமா வணக்கத்துடன் மறுத்தாள். “அம்மா? உன்னுடைய மனோகரனான கிருஷ்ணன் தந்தால் உட்கொள்வா யல்லவா? என்னை அந்தப் பயலாக நினைக்கக் கூடாதா?” என்று அந்த மனிதர் கேட்கவும், ரமா திடுக்கிட்டவளாய், “கிருபைகூர்ந்து தங்களின் மூக்குக் கண்ணாடியை எடுத்துவிட்டுக் காட்டுங்கள்” என்று வேண்டவும், அவரும் அவ்விதமே செய்யவும், மறு நிமிஷத்தில் ரமா, ஹா! என் கிருஷ்ணன் தான் என்று வாய்விட்டுக் கதறிப் பிரலாபம் நிறைந்தாள்.

ஃ

“உன் வீட்டில் ஏப்ரல் மாதம் 17-ந் தேதி காலையில் இருப்பேன். என்னை எதிர் பார்க்கவும்” என்று கிருஷ்ணன் ரமாவுக்கு முன்பு தந்தியனுப்பியிருக்க, அதை வரதாச்சாரி வேறுவிதமாகக் கூறி ரமாவைப் பம்பாய்க்கு இட்டு வந்ததாகக் கிருஷ்ணன் கூறியதிலிருந்தும் தெரிந்தது. தனது பிராணப் பிரியையான ரமாவைப் பம்பாயிலேயே காண முடிந்ததற்குக் கிருஷ்ணன் வெகுவாக சந்தோஷித்தான். நேராகத் தனது ஊருக்குச் செல்லாமல் தனக்கு உத்தியோகமாயுள்ள ஜில்லாவுக்கே ரமாவுடன் போய்ச் சேர்ந்து, உத்தியோகத்தை ஒப்புக்கொண்டான். வருஷங்களும் மூன்று ஆயின. ரமாவும் கிருஷ்ணனும் தமது காதல் வாழ்க்கையின் ஞாபகமாக ஒரு பாலசுந்தரனையும் பெற்றுக்கொண்டனர்.

ஃ

பம்பாயில் ரமா தன்னை விட்டுப் பறந்துவிட்டதைக் கண்ட வரதாச்சாரி ஏமாறிய உள்ளமாய்த் தன் ஊர் வந்து ரமாவைப்பற்றிப் பொய் வதந்திகளைக் கிளப்பிவிட்டான். ரமா ஒரு அன்னியனோடு ஓடிவிட்டதாகக் கதை கட்டினான். ஊரார் ரமா தனியாக வரதாச்சாரியுடன் சென்றதற்கே வெகு கோபமாயிருந்தபடியாலும், வரதாச்சாரியர்லேயே ரமா கெட்டதாக எண்ணியதாலும், வரதாச்சாரி ரமாவை நகைகளுடன் பம்பாய்க்கு அழைத்துச் சென்று என்னவோ விபரீதம் செய்துவிட்டுத் திரும்பிவிட்டானென்று போலீஸாருக்குத் தெரிவித்தனர். வரதாச்சாரி கைது செய்யப்பட்டு விசாரணை நடந்ததில், கிருஷ்ணன் தந்த தந்தியின்மேல் ரமாவின் வேண்டுதலுக்காகப் பம்பாய்க்கு அவளை அழைத்துக்கொண்டு சென்றதாகக் கூறித் தன்னிடமிருந்த கிருஷ்ணனின் தந்தியைக்காண்பித்தான். அந்தத் தந்தியில் ரமாவைப் பம்பாய்க்கு வருமாறு கண்டிருக்கவில்லையே

ஒருவனுடைய கெட்ட செய்கையைக் கண்டிக்கிறவன் அடியோடும் கெட்டுக் கேவலமடைய, அந்தக் கெட்டதையே செய்வோன் இன்னும் மேலான பதவிக்கு உயர்ந்துகொண்டே போகிறான். உலகினரும் இதை நோக்கி அதிசயிக்கின்றனர்.

என்று கோர்ட்டார் கேட்டதற்கு வரதாச்சாரியார் பதில் ஒன்றும் சொல்லக்கூடவில்லை. பம்பாயில் ரமா எவ்விதம் தன்னை விட்டுப் பிரிந்தாளென்பதையும் விவரமாகக் கூற முடியவில்லை. வரதாச்சாரி ரமாவின் நகைகளை அபகரித்துக்கொண்டு நடுத்தெருவில் விட்டு விட்டு வந்திருக்க வேண்டுமென்றே கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு, மோசக் கருத்துடன் குடும்பத்திலிருந்த விவாக ஸ்திரீயை இட்டுச் சென்றதான குற்றஞ் சாட்டி மூன்று வருஷம் சிக்ஷை விதித்தனர். வரதாச்சாரி பல ஜில்லாக்களின் சிறைக்கு அடிக்கடி மாற்றப்பட்டு மூன்றாவது வருடம் முடிவதற்குப் பதினைந்து நாட்கள் இருக்கும்போது, கிருஷ்ணன் ஜில்லா மாஜிஸ்திரேட்டாக இருக்கிற ஊரின் சிறைக்கு மாற்றப்பட்டான். வரதாச்சாரியின் குடும்ப பாக சொத்துக்களின் விஷயமாக நடந்து கொண்டிருந்த ஒரு வியாஜ்யத்தில், வரதாச்சாரி ஒரு சாக்ஷியாக ஏற்பட்டு, ஜில்லா மாஜிஸ்திரேட்டின் விசாரணையின் போது கைதிஉடையுடன் ஆஜராயிருந்தான். மாஜிஸ்திரேட்டான கிருஷ்ணன் வரதாச்சாரியைக் கைதியாகக் கண்டதும் திடுக்கிட்டான். எந்தக் குற்றத்திற்காக அவன் தண்டிக்கப்பட்டானென்று விசாரித்தபோது, ரமாவை மோசமாய் ஏமாற்றிய குற்றத்திற்காகவென்று தெரிந்தது. கிருஷ்ணன் விசாரணையை மறுதினம் ஒத்தி வைத்துவிட்டு, வரதாச்சாரியை தனது பங்களாவுக்கு அழைத்து வருமாறு போலீஸாருக்கு உத்திரவிட்டு, தான் ரமாவிடம் சென்று சகலமும் கூறி, அங்கு கொண்டு வரப்பட்ட கைதி வரதாச்சாரியையும் காண்பித்தான். வரதாச்சாரி ரமாவின் மகோன்னத நிலையைக் கண்டு தலை குனிந்தான். ரமா அவனை நோக்கி,என்னை உன் மனைவி என்று பம்பாயில் பலரிடமும் கூறி என்னை ஸர்வநாசம் செய்ய நினைத்ததற்குப் பகவான் உனக்கு விதித்த சிக்ஷை இதுவாகுமென்றாள். பிறகு வரதாச்சாரியைப் போலீஸார் இட்டுச் சென்றனர்.

ஃ

கிருஷ்ணன் மறுதினம் வரதாச்சாரி தண்டிக்கப்பட்ட விஷயமாய் மேல் அதிகாரிகளுக்கு எழுதி, ரமாவின் நகைகளை வரதாச்சாரி ஏதும் அபகரிக்கவில்லையென்றும், அவனது மோசக் கருத்தை யறிந்ததும் ரமாவே அவனுக்குத் தெரியாமல் புறப்பட்டு ரயிலுக்கு வரும் வழியில் தெய்வகிருபையால் கணவனைச் சந்திக்கும்படியாகி, அந்த நிமிஷ முதல் கணவனோடும் சுகமாயிருப்பதாயும், ஆகவே, வரதாச்சாரியின் தண்டனையை ரத்து செய்யும்படியும் சிபாரிசு செய்தான். அதன் நிமித்தம் அதிக பிரயாசையும் எடுத்துக்கொண்டான். ஆயினும் என்ன? வரதாச்சாரி தான் அடைந்த தண்டனையின் காலத்திற்கு முன்பு சிறையிலிருந்து வெளி வருவது தெய்வத்திற்கு சம்மதமில்லைபோலும்! மேலதிகாரிகளிடமிருந்து விடுதலை உத்திரவு வருவதற்கும், தண்டனையின் கடைசி நாள் முடிவதற்கும் சரியாகிப்போய் மறுதினம்தான் சிறையினின்றும் விடுவிக்கப்பட்டான்.

ஃ

வரதாச்காரி தனது ஊருக்கு வந்ததும், ஊரார் அனைவரும் அவ

அன்பைக்கொடுத்து அன்பை வாங்குவதில் உண்மையான இன்பம் இருக்கிறதென்று உணரும் வேளை ஒருவனுடைய வாழ்நாளில் தோன்றுவது பெரிய அதிர்ஷ்டமாகும்.

னைத் தூற்றினர். உத்தமியான ரமாவைக் கடவுள் காத்து, அவள் அநாதையாய்த் தவித்த அந்த நிமிஷமே அவளைச் சொந்த கணவனுடன் சேர்த்த அற்புதத்தை வியந்து பேசினர். ரமாவின்மீது முன்பு ஊரார் கூறிய நிந்தைகள் யாவும் மறைந்துபோயின. கிருஷ்ணன் ரமாவுடன் அவ்வூருக்கு வந்து தனது பழைய நண்பர்கள் உறவினர் சூழ ஒரு மாதம் வரையில் தாமதித்து ஸந்தோஷத்தை யனுபவித்தான். அப்பொழுது ரமா தன் பிரேமநிதியான கிருஷ்ணனின் தோளிற் சாய்ந்தபடி, "நாதா! நான் சின்னஞ் சிறு குழந்தையா யிருக்கும் போது விளையாட்டாக ஸ்ரீ லக்ஷ்மி கோவிலுக்கு முன்னிலையில் மாலை தொடுத்து. லக்ஷ்மிதேவியையும் வஞ்சித்துத் தங்களுடைய கழுத்தில் அந்த மாலையைச் சூட்டினேனல்லவா? அந்த லக்ஷ்மீதேவியே முன்பு என்னைத் தூற்றிய இவ்வூராரையும் இப்போது போற்றும்படி மாற்றிக் கருணைபுரிந்திருக்கிறாளென்று கூறினாள். கிருஷ்ணன் பழய நாளில் ரமா தனக்கு அணிவித்த பூமாலையை நினைத்தவனாய் ஆநந்த பரவசனானான். கடவுளை நம்பினோர் கைவிடப்படார். அக்கிரமிக்குத் தண்டனை நெடுங்காலம் கழிந்தாவது நிச்சயமாயுண்டு.

எஸ். வி. ஸ்ரீநிவாஸன்,
பீ. ஏ., பீ. எல்.

என் கையில் காசு இருந்தால்!

அந்த வீட்டுக்காரர் நல்ல உழைப்பாளி. தானே கஷ்டப்பட்டுச் சம்பாதித்து அதிலேயே உண்ணும் தன்மதிப்பாளி. அவர் ஒரு மாதமாகப் பலவித வியாதிகளால் வருந்தி வந்தார். ஒன்று போக ஒன்று முளைத்தெழுந்தது! அவரது மனைவி சாப்பிட வரவில்லையா என்று அழைத்த போது, எனக்கு என்ன செய்திருக்கிறாய் என்றார்.

மனைவி:—ஒன்றுமில்லை, வெறும் சாதம்தான் இருக்கிறது. ஜலம் ஊற்றிக்கொண்டு ஊறுகாயைத் தொட்டுக்கொள்கிறது.

புருஷன்:—இவ்வளவு சமையல் நடந்திருக்கையில் எனக்கென்று ஏதாவது கடித்துக்கொள்ளச் செய்து வைக்கக்கூடாதா? இந்த வெறுஞ் சாதத்தை எப்படியுண்பது? (சிறிது புசித்துப் பார்த்து) வாய்க்குள் போகமாட்டேனென்கிறதே? நான் எவ்வளவோ சீக்காக இருக்கிறது தெரிந்தும் இப்படிச் செய்யலாமா?

மனைவி:—பணத்தைக் கெட்டியாய்ப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிக்கொண்டிருந்தால், என்னத்தை வாங்கிச் செய்கிறது?

புருஷன்:—என்? என்னைக் கேட்டால் உடனே பணம் கொடுக்கமாட்டேனா? காலையிலிருந்து இரவுவரை வீட்டுச் செலவுகளுக்குக் கொடுத்தபடியேதானே இருக்கிறேன்.

மனைவி:—எனக்கென்று கொடுக்கிறீர்கள்? எனக்கென்று செலவுகள் நடக்கிறது? ஒரு காலணா எனக்கு வேண்டியிருந்தாலும் கேட்டுக் கேட்டல்லவா வாங்கித் தொலையவேண்டும்.

புருஷன் :—கேட்டபோதெல்லாம் தந்திருக்கிறேனே? எப்போது தராமற்போனது? சாதத்தைப் போட்டு விட்டு என் இப்படிச் சண்டையிடுகிறாய்? சாதமே எனக்கு வேண்டாம்.

மனைவி:—"என் கையிலே காசு இருந்தால்" என் இஷ்டப்படி வாங்கி உங்கள் வாய்க்கு ருசியாக ஏதாவது செய்யக்கூடும். ஒவ்வொரு செலவுக்கும் உங்களிடம் கேட்டு வாங்கியே ஆகவேண்டியிருக்கிறது. என் கையிலிருந்து செலவு செய்வதற்கில்லை. பணம் பெட்டிக்குள்ளே பூட்டியிருக்கு.

புருஷன்:—நீ எப்போது எவ்வளவு செலவிடச் சொன்னாலும் செய்யவில்லையா? நீ கேட்கும் போதெல்லாம் பணத்தை எடுத்துத் தந்தபடியிருக்கவில்லையா? உன் கையில் காசிருந்தால்தான் எனக்கு வாங்கிச் செய்ய முடியுமென்றாயே, அது தப்பு. நீ கையில் பணம் வைத்துக்கொண்டு எனக்குச் செலவிடத் தேவையில்லை. எது வேண்டினும் அதற்கு என்னைக் கேட்டு வாங்கித் தாராளமாகச் செய்யலாம். பெட்டிச்சாவியும் துட்டும் தலைமையும் எப்பொழுதும் என் கையில் தான் இருந்தாகவேண்டும். நானே

அவனுக்கு அரையணா கொடுத்து உதவ மனம் வருகிறதில்லை. ஆனால், அவனுக்கு முக்காலணா கார்டு எழுதமட்டும் உடனே தயார்.

எடுத்துக் கொடுத்து அதன்மேல் தான் எந்தச் செலவும் நடப்பதாய் இருக்கவேண்டும். இவ்வித ஒழுங்கில் தான் இதுவரை இந்த வீட்டுக் குடித் தனம் நடத்தப்பட்டு வந்திருக்கிறது. இது நீயும் தெரிந்துவைத்ததே. எனக்கென்று எவரும் தன் காசில் செலவிடவேண்டாம். அப்படிச் செலவிட்டிருந்தால் அதை இப்போதே தெரிவித்து என்னிடம் பெற்றுக் கொள்ளட்டும். எப்போதுமே நான் வியாதியிற் படுத்தபோதும், எனக் கென்று வேண்டியவர்கள் வரும்போதும், பத்தியமாய் மருந்து உண்ணும் போதுமே நீ வாட்டுவது வழக்கம்.

மனைவி:—எனக்கென்று தனியாக என் கையில் நாலு காசேனும் இருக்கவேண்டும். மற்றவர்களுக்குச் செலவிடுவதுபோல சம்பளம் வந்ததும் எனக்கென்று மாதம் அரை ரூபாயாவது கொடுத்தால்தான் தேவலே; கொடுத்தே ஆகணும்.

புருஷன்:—பல பல வாங்கித் தருவதைவிட பணமாகக் கொடுத்துவிட்டால் அதற்குத்தான் பெரும் கணக்கும் இருக்கும். எல்லாம் உனக்குச் சொந்தமாயிருக்க, அதைத் தெரிந்து கொள்ள முடியாத அல்ப புத்தியோடு பிரிந்து இந்த அரை ரூபாயைப் பெரிதாக நினைத்துக் கேட்டாய். அப்படியே பிரதி மாதமும் தருகிறேன். இந்த மாதத்துக்கு இந்தா அரை ரூபாய் பெற்றுக்கொள்.

மனைவி:—நான் இப்போது கேட்கவில்லே. சம்பளம் வந்த பிறகு கொடுங்கள்.

புருஷன்:—சம்பளம் வருகிறவரையில் காத்திருக்க வேண்டாம். இன்று தேதி மூன்று. இந்தத் தேதியிலிருந்தே வாங்கிக்கொள். எவ்விதமாவது திருப்தி பெறு. குடித்தனம் நடந்தேறட்டும். எப்பொழுதும் உன் காசிலிருந்து ஒன்றும் செலவிடவேண்டாம். என் காசைக் கேட்டு வாங்கி எனக்குச் செலவு செய். உன்னிடத்தில் என் பெட்டிச் சாவியையும், பணத்தையும் என் குடுமியையும் கொடுத்துவிட்டு பிறகு, அடியே! அடியே! கண்ணே! எனக்குச் செலவுக்கு ஒரு அணா கொடு என்பதாக உன்னைக் கெஞ்சிக் கேட்பதென்கிற சங்கதிமட்டும் என் ஆயுளிலேயே கிடையாது. இதை நீ என்றைக்கும் தெரிந்துவைத்துக்கொள். நான் யாருக்கும் உட்படுகிறவனல்ல.

மனைவி:—ஓ! அப்பா! நான் என்ன பேசிவிட்டது? அதற்காக ஓயாமல் தொண தொணவென்கிறீர்களே?

புருஷன்:—இது சின்ன சங்கதியல்ல, வெகு பெரிய சங்கதி. ஆனதால் அதை விவரமாய் எடுத்துச் சொல்லிவிடுவதே சரி. இதிலே மனைவி தன் புருஷனைக் கொஞ்சங் கொஞ்சமாக அடக்கியாண்டு மிதித்து அவன் தலையில் ஏறி நின்று அதிகாரம் செய்வதற்கு மெதுவாக வழக்கப் படுத்தி அதற்கு அஸ்திவாரம் போடப் பார்க்கிறாள். தானே வீட்டின் ஸர்வாதிகாரிபோலவும், அதிலே புருஷனும் தனக்கு அடங்கிக்கிடக்கவேண்டியவனே போலவும் அதிகாரம் செய்து காட்டக் கொஞ்சங் கொஞ்சமாய் நிமிர்கிறாள். "அது செல்லாதடியம்மா" என்று புருஷன் உடனே அவளுக்குச் சுடச்சுடத் தெளிவாய்த் தெரிவித்து, தன் தலையை

பாக்கித்தொகை வசூல் தாமதப்படுவது பெரிய இடங்களில்தான். ஏழை செலுத்தாத வரிக்கு வீட்டுப் பாத்திரங்கள் முதலியன ஜப்தி! சேர்மன் கௌன்ஸிலர்கள் வரி செலுத்தாவிடினோ கேட்பாரில்லே!!

உயர்த்தித் தனது ஆண்மையைக் காட்டிக்கொள்கிறான். தான் புருஷனென்றும், மனைவி என்று வீட்டுக்கு வந்தவள் புருஷனுக்கு அடங்கி நடக்கவேண்டியவளே என்றும் தெளிவாகத் தெரிவித்துப் போடுகிறான். இதுதான் இப்போது உனக்கும் எனக்கும் நடந்த கதை. உன் மனதில் நீ எண்ணியதையும், நீ செய்ய நினைத்துக்கொண்டிருக்கிற அதிகாரத்தையும் படம் பிடித்துக் காட்டுவதுபோல் உன் முகத்தின் முன்பு சொல்லிவிட்டேன். அடியே! கண்ணே! தெரிகிறதா? என்றார்.

மனைவி தன் முகத்தைக் கோணிக்கொண்டே சமையலறைக்குச் சென்றாள்.

தாங்களாகவே சிருஷ்டித்துக்கொண்ட சங்கட நிலைமை.

இவ்வளவுக்காவது வீட்டுச் செலவுகள் செய்வதற்கு வழியும் வருவாயும் ஏற்பட்டுக் குடித்தனம் நாலுபேருக்கு முன்பாக ஒரு மதிப்புடன் கௌரவமாய் நடந்தேறி வருகிறதே யென்று திருப்திபட்டுக்கொண்டு தங்கள் கணவனுடன் சந்தோஷமாய் ஒற்றுமையுடன் வாழப் பார்க்காமல், தங்களுக்கு நகையில்லை, நல்ல சேலையில்லை, நன்றாகச் செலவிடவில்லை யென்று குறைபட்டுக்கொண்டு தூற்றி அனுவசியமான ஒரு சங்கட நிலைமையைச் சில பெண்கள் தாங்களாகவே சிருஷ்டித்துக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள். இவர்களுக்குத் தங்களிடம் உள்ளதில் திருப்திபட்டுச் சந்தோஷிக்க அதிர்ஷ்டமில்லை. வேறு சிலர் அளவுக்கு மீறிச் சென்று நடந்துவிட்டோ, ஒரு மனஸ்தாபத்தில் வார்த்தைகளை அதிகம் புண்படக் கொட்டிவிட்டோ, முன்யோசனையின்றி உறவு நேசம் பிரித்துக்கொண்டோ சங்கட நிலைமையைத் தாமே சிருஷ்டித்துக் கொள்கின்றனர். பிறருக்குச் செய்யவேண்டிய நன்மைக்குப் பதில் தீமை செய்யப் போய், அதிலே அவர்கள் அலறிவிடும்படியாக, அதைக் கடவுள் சகியாது பதிலுக்குப் பதில் சோதனை காட்டிவிட, அவ்வகையாகவும் ஒரு சங்கட நிலைமையைத் தாங்களே உண்டாக்கிக் கொள்வதும் உண்டு. பிறருக்கு ஒரு வாக்கு கொடுத்துவிட்டு, பிறகு அதை நிறைவேற்றப் பிரியமில்லாமல் கபடமாய் நடந்து, அந்த வழியில் ஒரு சங்கட நிலைமையைத் தேடிக்கொள்வதுண்டு. எதையும் ஆராய்ந்து நிதானிக்கத் தங்களின் சிந்தனை சக்தியை உபயோகிக்காமலே அவசரப்பட்டுக் காரியங்கள் செய்துவிடுவதின் முடிவு இதுவாகும்.

இதிஹாஸத்தின் மஹாத்மியம்.

(Ganesh Sadasiva Bhate, M. A.)

சக்தியற்றுத் தாழ்ந்துள்ள ஓர் வகுப்பினருக்கு இதிஹாஸத்தைப் பார்க்கிலும் சிறந்த திவ்ய சக்தியைத் தருவது வேறொன்றில்லை. எந்த வகுப்பினர் பராதீனமாகிய இருண்ட கிணற்றில் விழுந்து கிடக்கின்றனரோ, அவர்க்குத் தமது கடமையைத் தெரிவிப்பதற்கு இதிஹாஸ ஞானம் சிறந்த தீபமாகவே விளக்குகிறது. அதுவுமன்றி, எந்த வகுப்பினரது உன்னத நிலையாகிய சூரியன் உச்சி நிலையில் வந்திருக்கிறானோ, அவர்களுக்கும் நிகழும் மார்க்கத்தைச் சீர்திருத்த இதிஹாஸமே சிறந்த உபாயமாகும்.

ஃ

இதிஹாஸத்தில் சிறந்த திவ்ய சக்தி உள்ளடங்கி யிருக்கிறது. உயர்ந்த மலை யொன்றின் சிகரத்தின் மீதேறும் ஒருவனுக்குக் கையிலுள்ள தடியின் உதவி எவ்வாறு இன்றியமையாததோ, அவ்வாறே, தாழ்ந்த கடையான நிலையிலுள்ளார்க்கு உன்னத நிலையை யடைதற்கு இதிஹாஸம் மிகவும் முக்கியமானதே. உலர்ந்து கிடந்த எலும்பிலுங்கூட இரத்தம் பெருகும்படிச் செய்து அதை இயக்கும் திறமை இதிஹாஸத்தில் அமைந்து கிடக்கின்றது.

ஃ

எந்தத் தேசத்தாரேனும் இதிஹாஸத்தை அழித்து விடுவதனால் எவ்வளவு கேடுண்டாகுமோ, அவ்வளவு கேடு எதேனுமொரு ஜாதியாரை அல்லது தேசத்தை யழிப்பதினாலுண்டாகாது என்று சிற்சில புலவர்களது கருத்து. இதிஹாஸத்தின் உதவியினாலேயே இழந்துபோன சக்தியைத் திரும்பவும் அடையலாம். அன்றியும், இதிஹாஸத்தால் சுதந்திரத்தை யடையலாமேயன்றி, சுதந்திரத்தினால், இழந்த இதிஹாஸத்தை யடைய முடியாது. இந்தக் கருத்தைக் கொண்டே, எதேனுமொரு ராஜ்யத்தார் மற்றொரு ராஜ்யத்தாரின் நாகரீகத்தை யழித்து விட நினைத்தால், அப்பொழுது தமது எதிரியினுடைய இதிஹாஸத்தையும், பாஷையையும் அழிக்கத் தொடங்குகின்றனர். ஒரு ராஜ்யத்தை அழிக்கவேண்டுமாயின் முதலில் அதன் பாஷையையும் இதிஹாஸத்தையும் அழித்துவிட வேண்டுமென்பது யாவரும் ஒப்புக்கொண்டதொரு சித்தாந்தம். இதைவிட ஒரு ராஜ்யத்தையும், அதன் நாகரீகத்தையும் அழிப்பதோருபாயம் வேறில்லை. ஆகையால், எல்லாப் பொருள்களிலும் விலையுயர்ந்தது இதிஹாஸமே யன்றி வேறில்லை. ஃ

ஒருவர் ஒன்றைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கையில், விவேகிகள் அந்த இடத்திலேயே நில்லார்கள். அறிவீனர்களோ அப்பொழுதுதான் அவரிடம் பல சங்கதிகளைப்பேச ஆரம்பிப்பர்.

இதிஹாஸ ஞானம் எளிதிலடையக்கூடியதல்ல; குருவின் உபதேசத்தாலும் வரப் பிரசாதத்தாலுமே அடையத்தக்கதாம். ஞானமென்பது, ஒரு இடத்தில் புதைத்து வைக்கப்பட்ட பொருளல்ல; ஆதலால், அது திடீரென்று சென்று எடுத்துக் கொண்டு வரக்கூடிய பொருளன்று. சாஸ்திரங்கள் எங்ஙனம் ஞானத்துக்குச் சாதனமாக அமைந்துள்ளனவோ, அங்ஙனமே, இதிஹாஸமும் நன்றாய் ஆராய்ந்து பார்க்கப்படின், ஞானத்தை யடைவதற்கு இன்றியமையாத வழியாக வுள்ளது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. எவன் தன்னுண்ணுணர்வைக் கொண்டு, தக்க ஆராய்ச்சியினுல் மேற்கூறிய ஞான சாதன வழியை யறிந்து கொள்ளுகிருனே—அதன் ரகஸியத்தை யுணர்கிருனே—அவனே ஞானி, அவனே கலைஞன், அவனே இதிஹாஸ முணர்ந்தவன் ஆவன்.

ஃ

இதிஹாஸம் என்னும் இம்மொழி வடமொழியிற் சேர்ந்ததாகும். இதி-ஹ-ஆஸ என்னும் பதங்களினுலாகிய ஒரு தொடர் மொழி. இதன் பொருள் "இப்படியிருந்தது" என்பதாம். "இங்ஙனமிருந்தது" என்று கூறுவதனுலேயே, "இப்பொழுது அப்படியல்லை" என்னும் பொருள் எளிதில் த்வனிக்கின்றது. "ஒரு காலத்தில் இப்படி யிருந்தது, இப்பொழுது அவ்வாறில்லை" என்பது இதன் தேர்ந்த பொருள். இதனுல் இதிஹாஸம் என்பது மாறுதலைத் தெரிவிப்பதாகும்.

ஃ

எந்த இடத்தில் மாறுதலும் வேறுபாடும் இல்லையோ, அவ்விடத்தில் இதிஹாஸமும் இல்லை. ஈசுவரனிடத்தில் மாறுதலுமில்லை, வேறுபாடுமில்லை; உற்பத்தி இல்லை; நாசமும் இல்லை; விருத்தியுமில்லை; க்ஷயமுமில்லை; எஞ்ஞான்றும் ஒரு தன்மையனுகவே யிருக்கிருன்; ஆதலால், ஈசுவரனுக்கு இதிஹாஸமில்லை. ஈசுவரன் இதிஹாஸத்துக்கு விஷயமுமாகான். ஈசுவரனுக்கும் இதிஹாஸத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. ஃ

ஆனுல், இதிஹாஸத்துக்குப் பிரபஞ்சத்தோடு சம்பந்தமிருக்கிறது. ஏனெனின், முதலாவதாகிய ஈசுவர விஷயத்தில் மாறுதலில்லை; இரண்டாவதாகிய பிரபஞ்ச விஷயத்தில் மாறுதல் உண்டு. பிரபஞ்ச விஷயம் எவ்வளவு விஸ்தாரமாகக் கூறப்படினும், ஒரு அளவுக்குட்படுவதில்லை. இதிஹாஸத்தின் தன்மையும் அங்ஙனமேயாம். எந்த எந்த இடங்களில் மாறுதலும் வேறுபாடுமுள்ளனவோ, அந்த அந்த இடங்களில் இதிஹாஸமும் இருக்கின்றது. முதலாவதான ஈசுவர நிலைமை போய், இரண்டாவதான பிரபஞ்ச சம்பந்த நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் யாது? என்று ஆராய்வதே,—ஆராய்ந்து உண்மைகண்டறிவதே, இதிஹாஸத்தின் கருத்தாகும்.

தாங்கள் கண்டித்து எழுதுவதில் அவன் பயந்துவிடுவானென்று எண்ணப்போக, அவனே உன்னுல் ஆனவரையில் நீ பார் என்று சொல்லி மீறி விடுகிருன். மீருதவரையில்தான் ஒருவனை அதிகாரம் செய்ய முடியும்.

மனைவியின் தாய்வீட்டினர் மனஸ்தாபத்துடன் புசிக்காது சென்ருல், "எத்தனையோ தடவைகளில் இது ஒரு தடவை" என்கிருன்!



நமது கதாப் பிரஸங்கி.

தை வெள்ளிக்கிழமை பூஜை.

“ஏண்டா தாமரைப் பூ வாங்கி வரச் சொன்னேனே!” என்று வெகு அதிகாரத்துடன் கேட்டுக்கொண்டே பார்வதி அம்மாள் கூடத்திற்கு வந்தாள்.

ஃ

அவளுக்கு சுமார் ஐம்பது வயதிருக்கும். ஆயினும், வெகு மிடுக்கும் தளராத தேகக்கட்டும் உள்ளவள். பழயகாலத்துத் தாசில்கச்சேரிபோல வெகு அமுலுடன் குடும்பம் நடத்தி வந்தாள். பார்வைக்கு அம்மாது சிரோமணி பருத்து கட்டை குட்டையாக இருப்பாள். ஒருவேளை இடுப்பின் சுற்றளவைக்கொண்டு ஒருவரின் மேன்மையைக் கணக்கிடவேண்டுமாயின் பார்வதி அம்மாள் முதன்மையாக இருக்கலாம். இப்பேற்பட்ட உருவம் தனக்கு இருந்தும், பிறரது ரூபலாவண்யங்களைப்பற்றி பரிகாசம் செய்யாத நேரம் இல்லை.

ஃ

நமது அம்மாளுக்கு ஏழு பெண்களும் இரண்டு புதல்வரும் உளர். நாகரிகம் மிகுந்த இக்காலத்தில் அப்பெண்களில் நால்வர் பெரிய உத்தியோகம் செய்திருந்தனர். இருவர் கலியாணம் செய்துகொண்டு தத்தம் கணவருடன் வாழ்ந்திருந்தனர். கடைசிப்பெண் இன்னும் கலாசாலையில் பயின்று வந்தாள். மூத்த பெண் சென்னப்பட்டணத்தில் மகா கியாதி பெற்ற டாக்டர் சீதாலட்சுமி அம்மாள். இளையவள் சிம்லாவில் தன் கணவருடன் வசித்திருந்தாள். அவளுடைய மூன்று பெண்களும் பம்பாயில் நமது அம்மாள் வீட்டில் படித்துக்கொண்டிருந்தார்கள். மூன்றாமவள் பாலியத்தில் விதவையாய் விட்டபடியால் ராஜாங்கக் கலாசாலையில் பயின்று உயர்ந்த பட்டம் பெற்று, இப்போது ஸ்திரீகள் கலாசாலை ஏற்படுத்தி அதில் ஸ்திரீகளுக்குப் பலவித தொழில்கள் பயில்வதற்கு முயற்சி செய்து பெரும்புகழ் பெற்றுப் பம்பாயிலிருக்கிறாள். இன்னொருவள் பல்காமில் கலெக்டர் வேலை செய்யும் தன் புருஷனுக்கு உற்ற நாயகியாய் வாழ்ந்திருந்தாள். அவள் இருபுதல்வரும் பம்பாயில் பாட்டியார் வீட்டில் வசித்திருந்தார்கள்.

ஃ

ஒரு பெண் சாஸ்திரத்தில் **M.A.** பட்டம் பெற்று பெரும் கியாதியுடன் கலாசாலை புரொபசராக இருந்தனள். மற்றொரு பெண் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பரீட்சையில் தேறி பம்பாயில் முதன் முதல்

தொல்லை பிடித்த—தொலையாத—துரதிர்ஷ்டமான — கேடுகெட்ட—ஓயாத—சங்கீதம், காதில் உண்டாகிற—பிந்திய செவி மந்தத்திற்கு மூலகாரணமான தொனிதான்.

ஸ்திரீ ஜாதியில் வக்கீல் தொழில் நடத்தும் புகழ்பெற்றுப் பெருமையுடன் வசித்திருந்தனள். கடைசிப் பெண் எலெக்டிரிக் இஞ்சினிரிங் பயின்று வருகிறாள். புதல்வரில் ஒருவன் பர்மாவில் ரப்பர் தோட்டம் நடத்தி வருகிறான்; மற்றொருவன் ஜெர்மனியில் சமஸ்கிருத பாஷா ஞானம் விருத்திசெய்து கொண்டிருக்கிறான். நமது அம்மாளின் பெருமையும் பணமும் ஒன்றுக்கொன்று தாழ்வின்றி நிற்க, பெண்களும் பேரன் பேத்திகளும் இவ்வித மகோன்னத நிலைமையில் இருக்க, அம்மாள் அவர்கள் தாசில் கச்சேரிபோல அமுலுடன் குடும்பம் நடந்த என்ன தடை? பிறரைக் கேவலமாக மதித்துத் தூக்கி எறிந்து பேசுவதற்குக் கேட்பானேன்?

ஃ

ஐயரவர்களோ, கட்டிப்போட்ட பசு என்னும்படி அவ்வளவு தங்கமான குணமுடையவர். இத்தங்கத்தில் பதிக்கப்பெற்ற வைரம் போன்ற நமது அம்மாளின் மேன்மை நன்றாகப் பிரகாசித்தது. அவர் ஏதோ சொற்பவேலையிலிருந்தனரெனினும், நமது அம்மாளின் சாமர்த்தியத்தினாலே பிறருடன் அதிக நெருக்கம் வைத்துக்கொள்ளாமல், தன் வயிற்றிற்கு வேண்டிய அரிசியும் தன் உடுப்புக்கு வேண்டிய துணியும் மாத்திரம் பார்த்துக்கொண்டு, சுய நலம் என்னும்கப்பலில்ழக்கித்தடித் தனம் நடத்தி வந்ததால் இவ்வளவு பெருமையும் ஏற்பட்டது எனலாம்.

ஃ

ஐயரவர்களின் பந்துக்கள் உயர்ந்தபதவியில் இருக்கிறார்கள். அவர். சகோதரர் ஹைகோர்ட்டு ஜட்ஜாக விளங்கிப் பெரும்புகழ்பெற்று இருந்த காலத்தில் நமது அம்மாள் சேஷ்டையினால் இரு சகோதரர்கள் குடும்பத்திற்கும் சகஜமாக ஏற்பட வேண்டிய அன்புப் பாசம் கொஞ்சம் கொஞ்சமாக நாசமாகிவிட்டது. "என் வீட்டுக் கூழ் ஆயினும் நான் தனியே சமைத்துச் சாப்பிட்டுக் கொள்வேன். சகோதரர் வீட்டு சேமியா பாயசம் தேவையில்லை" என்ற இறுமாப்பு விருத்தியாயிற்று. ஆயினும், அவர்களது நிலைமையைவிட இப்போது தங்கள் குடும்ப நிலைமை உன்னதமாகிவிட்டது என்ற ஆத்ம கர்வம் நாளுக்குநாள் விருத்தியாகி வந்தது.

ஃ

ஐயரவர்களின் ஏழை பந்துக்கள் யாரேனும் வந்துவிட்டால் வீட்டில் ஏற்படும் அமளி வேடிக்கையாகவிருக்கும். பாவம்! அத்தான் ஒருவர் பட்டபாடு வர்ணிக்க முடியாது. பெரியோர்களின் குணம் சிறுவர்களுக்குச் சொல்லிக் கொடுக்காமல்தானே பழகும் என்பது தெரிந்த விஷயம். சிறுவர்களும் சிறுமிகளும் ஏழை பந்துக்களை மகா கேவலமாக எண்ணி சில சமயம் நேரில் அவர்களை அவமானப்படுத்துவதும் சதாகாலமும் பின்னால் பரிகசித்து ஆனந்திப்பதும் வழக்கமாயிற்று. ஆனால், அம்மாள் அவர்களின் பந்துக்கள் யாரேனும் வந்தால் நடக்கும் மரியாதை அபரிமிதம். அம்மாள் அவர்களின் ஏழை பந்துக்களுக்குப் பலவகையிலும் உதவி கிடைப்பது அக்குடும்பத்தில் சகஜமாயிற்று. உதவி செய்வதுடன் நில்லாமல் அந்த அம்மாள் பேச்சுக்குப் பேச்சு தான் செய்த உதவியை ஊரெல்லாம் பெருமையாகச் சொல்

வெகு அன்போடு பேசினும், தந்திரசாலிகளின் முகம் தெரியாமலில்லை. கபடம்தான் முதலில் புலப்படுகிறது.

லிக்கொள்வது வழக்கம். அம்மாளின் குணத்தை யறிந்தவர்கள் அம்மாளு டன் பேசும்போது "ஆமாம்! இக் காலத்தில் பந்துகளுக்கு உங்களைப் போல் பாடுபட்டிருப்பவர் யார்? உங் களுக்கு சமானமாக ஒருவருமில்லை" என்று சொல்லிவிட்டாற் போதும். அவர்களுக்கு அன்று அவ் வீட்டில் விருந்து தான். அப்படியின்றி எதே னுப் நியாய அநியாயம், உலகவியல்பு, மனித சுபாவம் இவைகளைப்பற்றிப் பொதுவாகப் பேச ஆரம்பித்துவிட் டால் வந்தது மோசம்!

ஃ

இவ்வளவு தூரம் நமது குடும்பத் தைப்பற்றிச் சொன்னபின் தை வெள்ளிக்கிழமையன்று நடந்த விஷ யத்தைப்பற்றி இனி சொல்வோம். நமது அம்மாள் அவர்கள் வெகு விமர் சையாக அம்பிகை பூஜை செய்வது வழக்கம். மேலும், அன்றைய தினம் பல விருந்தினர்கள் எதேச்சையாக வந்து சேர்ந்தபடியால் அன்றைய பூசை சாதாரணமாக இராமல் விசே ஷமாக இருக்கவேண்டுமென்று அம் மாள் ஆசை. முதல் நாளிலேயே நாளை பூஜைக்கு வடை, பாயாசம், போளி, சித்திரான்னம் செய்வது என்று பலவித ஏற்பாடுகள் செய்த பிறகு, காலையில் எழுந்தவுடன் தாம ரைப்பூ கிடைக்கவில்லை என்று தெரி ந்தவுடன் வெகு கோபம் உண்டா யிற்று.

ஃ

வெந்நீர்த் தவலைபோன்ற பாத் திரத்தில் காபி செய்து ஒவ்வொருவ ருக்கும் கொடுக்கப்பட்டது. நமது அம்மாள் எல்லாரும் குடித்து வைத் துச்சென்ற பாத்திரங்களில் கொஞ் சம் கொஞ்சம் கெட்டில் வெந்நீரை ஊற்றி அலம்பி ஒரு அடுக்கில் விட்டு அத்துடன் வடிகட்டின துணியில் உள்ள பொடியில் இன்னும் கொஞ் சம் வெந்நீர் விட்டுப் பிழிந்து 'ஸ்பெ ஷல்' காபி தயார் செய்து வீட்டில் பரதேசிகளாக வந்து சிக்கிக்கொண்ட இரு பரிசாரகப் பெண்களுக்கும் அம் மாள் திருக்கரத்தால் காபி கொடுத் தாள். தனக்கு எதோ ஒரு முறை யில் அம்மஞ்சியின் மைத்துனனுகிய அங்குசாமியை மறுபடியும் மார்கட்டுக் குப் போய் தாமரைப்பூ வாங்கிவரும் படி உத்தரவளித்தாள். பெண்களும் பேரன் பேத்திகளும் கூடத்தில் அங்குமிங்கும் உட்கார்ந்து தலை பின் னிக்கொண்டும் வம்பு பேசிக்கொண் டும் இருந்தனர். எலக்டிரிக் இஞ்சினீ ராகிய கடைசிப்பெண் ஞானும்பிகை "அம்மா, நேற்று சுவாமிசுக்ராசாரியார் லெக்சர் (உபந்யாசம்) செய்தார். இவ் வுலகம் முழுதும் பராசக்தியினுல் நடைபெறுகிறது என்ருர்" என்று சொல்ல,

அம்மாள்:—"ஆம், அம்பிகையாகிய பரதேவதையினுல்தான் இந்த உலகம் நடை பெறுகிறது. பார்! நான் பூசை செய்யும் சக்கரம் லலிதா தேவியின் ஆக்ஞா சக்கரம்."

பாரிஸ்டர் பத்மரேகை:—"ஆம், ஸ்திரீகள் தாம் இவ்வுலகத்திற்கு ஆதாரம்; அவர்களே பூலோக விருத் திக்கு முக்கிய காரணம்."

ஞானும்பிகை:—"இது அறியா மல் இந்தப் புருஷர்கள் லோகஸம்ரட் சணம் தங்களால் நடைபெறுகிறது என்றும், கேவலம் ஸ்திரீ ஜாதிகள்

தாங்கள் அதிக அவசரமான வேலையில் இருக்கிறீர்கள்போலும் என்று தன் காரியங்களைத் துரிதமாகச் செய்துகொண்டிருப்பவனைப் பார்த்துச் சொல்லிவிட்டு அவன் பக்கத்தில் உட்கார்ந்து விடுகிருர்கள்.

புருஷர்களுக்கு அடிமைகள் யென்றும் எண்ணி நடத்துகிறார்களே!"

அர்ச்சுனன் (அம்மாள்பேரன்):—அப்படி இல்லே! ஸ்திரீகளின் பெருமையை அறிந்துதான் லோகமாதா என்றும், பூமாதேவி என்றும் மகிமைப்படுத்துகிறோம். கல்விக் களஞ்சியம் சரஸ்வதி என்றும், செல்வக் குதிர் லட்சுமி என்றும் நாம் சொல்கிறோம்.

லட்சுமி (அம்மாள் பேத்தி):—குதிர்! எண்டாப்பா! இதிலேயே தெரிகிறது புருஷர்கள் மமதை!

ஃ

ஐயரவர்கள் சுகமாக நாற்காலியில் வீற்றிருந்தவர் நிமிர்ந்து உட்கார்ந்து, "ஆம் ஸ்திரீகள் குதிராக இருந்து உழைத்தால்தான் புருஷப் பயல்கள் சுகமாக சாப்பிடலாம்" என்றார். இதைக் கேட்டு எல்லோரும் ஒருங்கே சிரித்தார்கள்.

ஞானம்பிகை:—நீங்கள் என்னவோ சொல்கிறீர்கள்! நான் சொல்வது உண்மையா இல்லேயா? மனு முதலியவர்கள் ஆசார விதிகள் ஏற்படுத்தியவர்கள்; எல்லாரும் புருஷர்கள். எல்லா ஏற்பாடுகளும் ஸ்திரீகளைக் கேவலமாக வைத்து மனிதர்களுக்கேற்றசட்டங்களைப்பழக்கத்தில் கொண்டுவந்திருக்கிறார்கள்.

அம்மாள்:—அடி, என் கண்ணே! உன் வாய்க்குச் சக்கரை போடணும். முன்னிருந்த இந்த ஸ்திரீ ஜாதிகள் எல்லாம் பாமர ஜனங்கள். பாவம்! இந்தப் புருஷர்கள் கையில் அகப்பட்டுத் திண்டாடிக் கொண்டிருந்தார்கள். இனிமேலாவது புதிய முறைகள் ஏற்படவேண்டும். காலம் மாறிவிட்டது.

புரோபஸர் ஹேமாவதி:—இந்த மனிதர்கள் ஸ்திரீகளைக் கேவலம் குழந்தைகள் பெறுவதற்கும், அவர்களைச் சுமப்பதற்கும் தகுந்த கருவிகளாக மாத்திரம் நினைத்தார்களே யன்றி, அவர்களும் புத்தி, ரோஷம், ஆத்மன் உள்ள ஜீவப் பிராணிகள் என்று கருதவே யில்லே.

ஃ

இதற்குள் அங்குசாமி எங்கேயோ தேடியலேந்து நான்கு தாமரை மலர்கள் கொண்டுவந்தான்.

ஃ

"என்னடா விலே?"

"பூ நாலும் நாலு அணா."

உடனே ஐயரவர்கள் எழுந்து வந்து மலர்களை எடுத்துப் பார்த்து "டேயப்பா! ஏமாந்துபோய்விட்டாய்! இந்த நாலு அணாவுக்கு இட்லி வாங்கிச் சாப்பிடலாமே" என்று முணுமுணுத்துக்கொண்டு சென்றார்.

ஃ

"வேலே என்ன! எப்ப பார்த்தாலும் வயிற்றுப்பாடுதான். ஒரு பூஜைக்கு ஏதாவது காலணா காசு செலவு செய்தால் இந்த முணுமுணுப்புதான். உங்கள் காசு ஒரு சல்லியும் வேண்டாம். நான் சம்பாதிக்கிறேன், என் பெண்கள் சம்பா

பெண்கள் பிறந்தது முதலே பிறரது அதிகாரத்திலிருக்கவேண்டியவர்களாகிறார்கள். எப்பொழுதும் தங்கப் பதுமைக்குக் காவல்வேண்டியிருப்பதில், அந்தத் தங்கம் சிறையிலும் நிர்ப்பந்தத்திலும் இருப்பதாகக் கேவலப்படுத்திச் சொல்ல முடியாது.

கிக்கிறார்கள். தேவலோகம்போல பூஜை மண்டபம் சிங்காரிக்கக் கூடாதென யார் என்ன சொல்ல முடியும்" என்று நமது அம்மாள் தலையை நிமிர்த்திக் கம்பீரமாக உடனே எழுந்து சரமாரியாகப் பேச ஆரம்பித்தாள். இதைக் கண்ட பாரிஸ்டர் பெண் பேச்சை மாற்றி அம்மாள் ஆவேசத்தை அடக்கும் பொருட்டு சாமர்த்தியமாக "அம்மா! மணி ஒன்பதாயிற்று! இனி சகஸ்திர நாமம் சொல்லி பூஜை முடியப் பனிரெண்டு ஆகிவிடும்" என்று எழுந்தாள்.

ஃ

"ஆமா! நான் பெண் பிறந்தது முதல் இப்படித்தான் ஒவ்வொருவருக்கும் இந்தப் பிராமணன் கிட்ட கண்ணீர் விட்டுப் படாத பாடுபட்டு பணமா பண்டமா என்னென்ன ஒத்தாசை செய்திருக்கிறேன்: பிறருக்காக அழுது அழுது மண்டைக்குத்து வலிதான் லாபம்" என்று சொல்லிக் கொண்டே அம்மாள் ஸ்நான அறைக்குச் சென்றாள்.

ஃ

இதற்குள் இரு பெண்கள் கூடத்தை மெழுகிக் கோலமிட்டு, ஸ்வர்ணக்கால்கள் அமைந்த மண்டபத்தைத் துடைத்து ஆங்காங்கு அழகிய ரச குண்டுகள் போன்ற எலக்டிரிக் கலர் விளக்குகள் தொங்கவிட்டு பூஜைக்கு வேண்டிய சாமான்களை வெள்ளித் தட்டுகளிலும் கிண்ணங்களிலும் எடுத்து வைத்தார்கள்.

ஃ

அம்மா அவர்களும் ஸ்நானம் முடித்து ஒரு துணியைக் கட்டிக் கொண்டு கூடத்திற்கு வரும் வழியில் சமையல் அறைவழியாக வந்தாள். சற்று திரும்பிப் பார்த்தாள். "ஏண்டி! இது என்ன குடித்தனம்! இத்தனை விறகு அடுப்பில் மாட்டி கோட்டை அடுப்புபோல எரியவிட்டால் நாளைக்கு உன் சம்பளத்தில் விறகு வாங்குவையா?" என்றுகூவிக் கொண்டு இரண்டு கட்டைகளை வெளியே இழுத்து ஜலத்தை ஊற்றி விட்டு, கூடத்திற்கு வந்து மடிப் புடவை கட்டிக்கொண்டாள். பிறகு பூஜை செய்ய ஆரம்பித்தாள். பரிஷ்காரமாக இரு பெண்களும்கூட மந்திரம் ஜபித்தார்கள். ஸ்வர்ணத்தாலாகிய பூஜைப் பெட்டியைத் திறந்து, நவரத்ன சிம்ஹாஸனத்தை நாய்த் தோல் கொண்டு துடைத்து பளபளவென இருக்கும்படி செய்தாள். எலெக்டிரிக் விளக்குகள் ஏற்றப்பட்டன. சந்தனத்தூள், மட்டிப்பால் முதலிய வாசனை சரக்குகள் போட்டு தூபம் பரிமளித்தது. ஆகா! அப் பூஜைக்கோலத்தை வர்ணிக்க யாரால் முடியும்! பண்டைக்கால பதவிசும் பரிசுத்தமும் தேய்ந்து, நவீன கால நாசுக்வேஷமும் டாம்பீகமும்மிகுந்து, பூஜா மண்டபம் கண்களைக் கவர்ந்தது. பூஜை முடியும்சமயம் ஆயிற்று. இருந்தபோதிலும் அம்மாள் தன் பெண்கள் பேத்திகள் பட்டினியுடன் இருக்கச் சகியாராதலின் அவர்கள் எல்லோரும் போஜனம் செய்து கொண்டிருந்தார்கள்.

ஃ

இச்சமயம் தெருவில் ஒரு மாட்டு வண்டி வந்து நின்றது. மாநிறமான ஒரு புருஷர் இறங்கினார். அவருடன் ஒரு பெண் குழந்தையுமிறங்கியது. பின்னால் இன்னொரு மாட்டு வண்

ஒருவனை மதித்த மதிப்பு தவறும்போது நேசம்—உறவு—கடிதப் போக்கு—யாவுமே ஆகாசத்தில் பறக்கிறது.

டியிலிருந்து ஒரு அம்மாள் இறங்கி சற்று விலகினுப்போல் நின்ருள். இதற்குள் அங்குசாமி அவர்கள் யாரென்று விசாரிக்க வந்தான். ஸ்நானம் செய்துவிட்டு ஈர வேஷ்டியுடன் வந்துகொண்டிருந்த ஐயரவர்கள் தெருப்பக்கம் நிமிர்ந்து வந்தவரைப் பார்த்து "என்ன கிருஷ்ணமூர்த்தி! வா! அவள் எங்கே! மங்களம்; சௌக்கியமா?" என்ருர். வந்தவரும் "சௌக்கியம் தான். நாங்கள் ஆமதாபாத்திற்குச் செல்கிரேம். நான் இரண்டு மாதம் லீவில் இருந்தேன். நாளன்றைக்கு வேலை ஒப்புக்கொள்ளணும். புறப்படுகிற சமயத்தில் இந்தப் பெண்டுகள் சமாசாரம் தான் தெரியுமே!" என்று சொல்லிக்கொண்டு உட்கார்ந்தார். ஐயரும் சிரித்துக் கொண்டு "இதுக்கென்ன சகஜம் தானே. என் தாரமாகிவிட்டாளா! அப்படி வாசல் ரேழியில் இருக்கட்டுமே. நீ போய் ஸ்நானம் செய்" என்று சொல்லிவிட்டு மாடிக்குச் சென்ருர்.

ஃ

உள்ளே குட்டிகள் எல்லாரும் வந்தவரைப் பார்த்து ஒருவரோடொருவர் கேலிப் பேச்சுகள் செய்துகொண்டு சீக்கிரம் போஜனம் முடித்துவிட்டு மாடிக்குச் சென்றனர்.

ஃ

"ஏங்காணும்! உங்களைத்தானே! கொல்லைப்பக்கம போகணுமே! எப்படிப்போறது" என்று முணுமுணுத்தாள் வந்த மாது. கிருஷ்ணமூர்த்தியும் அங்குசாமியை மெதுவாகத் தட்டிக்கொடுத்து சிநேகம் செய்துகொண்டு அவனை விசாரிக்க, அங்குசாமி சமயம் பார்த்து உள்ளே அம்மாளிடம் தெரிவித்தான்.

"கர்மம்! இது வேறேயா! வெள்ளிக்கிழமையும் அதுவா! 'தாரமணுள் ஒருவள் வந்தாள். கோச்மானைக் கூப்பிட்டு கக்கூஸ்காரன் வரும் சந்துக் கதவைத் திறந்துவிட்டு கொல்லைப்பக்கம் போகச்சொல்லு" என்று சொல்லிவிட்டு அம்மாள் பூஜா விதியை அனுஷ்டித்திருந்தாள். கிருஷ்ணமூர்த்தியும் தன் மனைவிக்கு வழி காட்டிவிட்டு அங்குசாமியிடம் தாங்கள் சாப்பாடு கொண்டுவந்திருப்பதாகவும் கொல்லையில் குழாயண்டை வைத்துக்கொண்டு சாப்பிடுவதாகவும் சொல்லிவிட்டு மூட்டையை எடுத்துக்கொண்டு பெண்ணையும் கூட்டிக்கொண்டு நல்லவேளையாக அதிக சம்பாஷணை யின்றிப் பிழைத்தோமே என்று, இரண்டாங்கட்டுக்கு அங்குசாமி வழிகாட்ட நடந்தான்.

ஃ

பூஜை முடிந்தது. கல்பூர ஆரத்தி எடுக்கப்பட்டது. "அம்பிகே! பரதேவதை!" என்று பலவகையாகத் தோத்திரங்கள் பாடப்பட்டன. பிறகு நைவேத்தியம் ஆன ஆமவடையில் ஒன்றை எடுத்து வாயில் போட்டு மென்றுகொண்டே அம்மாள் திரும்பி போஜனத்திற்கு அமர்ந்தாள். பதார்த்தங்களை அப்படியே அம்மாள் முன்னிலையில் கொணர்ந்து வைத்தார்கள். ஓர் புறம் ஐயரவர்களுக்கு வெள்ளித் தட்டில் பரிமாறப்பட்டது. ஐயரவர்களும் கிருஷ்ணமூர்த்தியை விசாரித்துவிட்டு அவர் சாப்பிட வர

வறுமைக்காலத்திலும் உறுதியாக நிலைத்துள்ள நற்குணங்கள் கஸ்தூரி போன்றது. கால சோதனைகள் அந்தக் குணங்களைப் பிரகாசிக்க வொட்டாமல் எவ்வளவுக்கு மறைத்தபோதிலும் அதின் மணம் எவ்விதமும் வெளிக்குத் தெரிந்துவிடும்.

வில்லே என்று தெரிந்துகொண்டு. பிறகு போஜனத்திற்கு உட்கார்ந்தார். அங்குசாமியும் மற்ற இரு பெண்களும் ஒருபுறம் உட்கார்ந்தார்கள். அம்மாள் அவர்கள் இடது கையிலும் வலது கையிலும் உட்கார்ந்தபடியே தன் கணவருக்கும் பிறருக்கும் சில முக்கிய பதார்த்தங்களைத் தாமே அருமையாகப் பரிமாறினர். "கொஞ்சம் புளி ஜாஸ்தி குழம்பில்" என்றார் ஐயர். "அப்பா! இவர் நாக்கு என்ன நாக்கு! இவ்வளவு வருஷங்களாக உங்கள் வாயில் புகுந்து புறப்பட்டது போதாதா? இவ்வளவு மேன்மையாக ஒருவரால் சமைக்க முடியுமா? எத்தனை புருஷாள் இல்லே; ஏதோ போட்டதைச் சாப்பிட்டுப் போகக்கூடாதா? எப்ப பார்த்தாலும் சொட்டைச்சொல்" என்று பிரசங்கித்தனள் அம்மாள்.

ஃ

"அடி! இப்ப நீ சமையல்செய்ய இல்லேயே! அந்தப் பங்கஜம் சமையல் திருத்த வேண்டுமேயென்று அவளுக்குச் சொல்லுகிறேன்" என்று ஐயர் சமாதானம் சொன்னர்.

உடனே பாரிஸ்டர் பெண் "அப்பா" இந்தக் கிருஷ்ணமூர்த்திக்கு எங்கு வேலே?"

"ஆமதாபாத்தில் ஏதோ கம்பெனியில் இருக்கிறனும்"

"ஆமா. இவர்களுக்கு எல்லாம் ஊரைவிட்டு ஊர் எங்கேயோ ஒரு வேலே திண்டாடித் தெருவிலே நின்று சம்பாதித்துக்கொள்கிறார்கள். வயிறு வளர்க்க வேண்டுமே!" என்றாள் பாரிஸ்டர் பெண்.

ஃ

இந்த சமயம் "அம்மா! தாயீ! ஒரு கவளம் அன்னம் போடுங்க அம்மணீ!" என்று நெடுங்குரல் பாய்ச்சி ஒரு ஏழைப் பிச்சைக்காரன் தெருவாயிலிருந்து கதறினன்.

ஃ

"யாரடி அங்கே! வாசல் கதவைச் சாற்று! இந்த நாய்களெல்லாம் உள்ளே வந்து உபத்திரவம் செய்கிறது" என்று கூவினள் நமது அம்மாள். இரண்டாங்கட்டில் போஜனம் முடித்துவிட்டு எழுந்த கிருஷ்ணமூர்த்தி தன்னிடம் மிகுந்த அன்னத்தை மூட்டையுடன் எடுத்து அப்பிச்சைக்காரனிடம் கொடுத்துவிட்டுக் கை கழுவிக்கொண்டு வாசல் ரேழியில் போய் உட்கார்ந்தான். பெரிய வீட்டில் ஏழை விருந்தாளி பயந்து நடந்தால் தானே அங்கு தங்குவதற்கு முடியும்?

ஃ

நமது அம்மாள் அவர்களும் போஜனம் முடிந்து ஒருவிதமாக எழுந்தார். இந்த விதமாக தை வெள்ளிக்கிழமை புண்ணிய தினமாகக் கடைத்தேறியது. "தை வெள்ளிக்கிழமை பூஜையும்—வீடு தேடி வந்தவர்கட்கு உபசாரம் செய்யாமலும், பிச்சை கேட்டவர்களுக்கு இடாமலும் திவ்யமாக(!) நடந்தேறியது. அம்மாளுக்கு நீங்கள் மங்களம் பாடுங்கள்!

ஒரு ஐசுவரியவந்தன் ஒருவனை மோசம் செய்தோ கேவலப்படுத்தியோ அவனைக் கண்டபடிவைது நகைக்கின்றான். அந்த நகைப்பு எத்தனை அக்கிரமமானதாயினும், அவனைச் சுற்றியுள்ள நாற்காலியில் வீற்றிருக்கும் வீணர்களும் அச்செல்வனேடு சேர்ந்து நகைத்து அவன் செய்ததே சரி என்பர். ஏழையின் நியாயத்தைக் கவனியார்? ஹா! கடவுளே!!





இன்றுகூடிய நமது கடையில் அல்லா பிச்சை "பரஸ்பரம் கொள்ளும் விரோதத்தன்மை" யைப் பற்றிப் பேசினார். "நெஞ்சிலே ஆழ்ந்த பற்றுதல் இருந்து இடையில் ஒரு விரோதத்தால் பிரிந்து பகையானவர்கள்—தம்மை எதிர்த்து நின்றோர் நோய் வாய்ப்பட்டுப் பாயிற் கிடக்கிறார்களெனக் கேட்குமிடத்து, உடனே விரோதப்பான்மையை மறந்து அந்த வியாதியஸ்தரைப் போய்ப் பார்த்து உறவு கலந்து ஒன்றாகி விடுவார்களென்றும்; மனத்திலே எவ்விதப் பகையுமின்றி ஒப்பாரியன்பு காட்டுவோர் தாம் பகைத்துக்கொண்ட இடத்தில் பிராணன் போகக் கூடிய நிலையிலிருப்பினும், அப்படித்தான் வேண்டுமென்று தூஷித்து விட்டு எட்டியே பாரார்க" ளென்றும் புகன்றார்.

ஃ

"ஒருவன் பிணியுற்றுக் கிடக்கும் போதுதான் அவரவர் அன்பையும், அலக்ஷியங்களையும், எட்டியே பாராதிருந்துவிட்டவர்களையும், மற்றும் வீட்டிலுள்ள மனைவி முதலோரின் குணப்போக்குகளையும் கண்டுகொள்ளும்படியாகிறது. நோயினின்றும் சற்றுத் தேறி எழுந்து உட்கார்ந்திருக்கும் வேளையில் வீட்டில் ஒரு சச்சரவு உண்டாக, அதை இந்தப் பிணியாளி கண்டிக்கப்போக, அதற்கு மற்றவர்களோ "உன் உடம்பில் சற்றுப் பலம் வந்து எழுந்து குந்தியதாலல்லவோ இப்படி நடுவிலே பேச வந்துவிட்டாய்; அதிகம் பேசாதே; மறுபடியும் பாய்போட்டுப் படுத்துக் கொண்டு அழுகி நாறும்படியாவாய்" என்று இடித்துப் பேசித் தடித்தனத்துக்கு ஆரம்பிக்கிறார்கள். நோயாளிக்கோ இந்தச் சுடுசொல் மிக்க வேதனைப்படுத்திவிட மனது தத்தளித்துப்போகிறான். ஏதோ சிறிது பலம் வந்து உட்கார்ந்த இந்த நிலையில் தன்னைப் பார்த்து 'இன்னும் பாயிற் படுப்பாய்' எனப் பேசலாமாவென்று தெய்வத்தினிடம் முறையிடுகிறான். இந்தச் சச்சரவிலே தனது பத்தியத்துக்கு வேண்டிய கஞ்சியும் காலத்தில் கிடைக்காமற் போய்விடுமென்று தோன்றவே, அதற்காகத் தன்னை ஏசியவர்களிடமே மறுபடியும் பேசிச் சமரஸமாகப் போக வேண்டியதாகவும் அவனது நிலைமை ஆகிவிடுகிறது. எவரெவர்களைத் தன் துணைக்கென நெடுநாளாக நம்பிக்கொண்டிருந்தானோ அவர்கள்தான் அந்த சமயத்துக்கு முக்கியமாய் வராதிருந்து விடுகிறார்கள். ஒரு குறித்த மருந்தைப் பற்றிக் கடையில் விசாரித்து வரும்படி நேசர்களிடம் வேண்டிக்கொள்வதில், அவர்கள் பிறகு திரும்பி வராமலேபோய், குணப்பட்டு எழுந்த பின்பு வழியில் சந்தித்து க்ஷேமமா என்று விசாரிப்பவர்களாய் முடிகிறார்கள். தங்களினூருக்குப்போகிறவழியில் இங்குவந்து பார்க்க வந்தோர் பிணியாளியை நோக்கி, "உங்களுக்கு இஷ்டமானால் சொல்லுங்கள், டாக்டர் டப்பரை இங்கு அனுப்பிவைக்கிறேன்" என்கிறார்கள். இவ்விதம் கூறுவோர் இரவு வண்டிக்கு ரயில் ஏறுவோராக இருந்து

கொண்டு மேலுக்கு இந்த ஒப்பாரி உபசாரம் பேசுகிறார்கள். டாக்டர் டப்பர் பிணியாளியின் வீட்டுக்கு வந்தால் 'பீசு' எவ்வளவு தரவேண்டுமோ, மேல் செலவுகள் எவ்வளவோ, அதைப்பற்றி யொன்றும் கனமாக இந்த ஒப்பாரி உபசாரக்காரர்கள் நினைப்பதில்லை. அவர்கள் தங்களின் கையிலிருந்தும் கொடுக்கப் போவ தொன்றுமில்லையாகையால் வாய்ச் சுளுவாகப் பேசிவிட, பிணியாளியோ கவலையுடன் யோசித்து டாக்டர் டப்பர் வேண்டாமென்றுவிட, இவர்களும் போய்வருவதாகச் சொல்லிக் கொண்டு சென்று விடுகிறார்கள். பிறகு ஒரு கடிதம்கூட நோயாளி எப்படி யிருக்கிறானென்பதற்குப் போடுவதேயில்லை. இத்தகையோருக்கே மிகவும் நெருங்கிய பந்துக்களென்றும், மிகவும் வேண்டியவர்களென்றும் பெயர். ஒவ்வொருவரின் குணங்களையும் அறிந்துகொள்வதற்கு வியாதியானது தங்கத்தின் மாற்றைத் தெரிவிக்கும் உறைகல் போலிருக்கிறது" என்று பெத்த பெருமாள் சாற்றினர்.

ஃ

"இனி உன் கடிதமே தேவையில்லை" என்று ஒருவன் இன்னொருவனுக்கு எழுதுகிறான். இவ்விதம் ஒருவனுடைய கடிதத்தை மறுப்பது அவனையே வேண்டாமென்று எடுத்தெறிவதைப் போலாகிறது. தன் மானத்தையும் மதிப்பையும் ஒருவன் காப்பாற்றிக் கொள்ள விரும்பும் பட்சத்தில், இவ்விதம் கடிதம் எழுதியவனிடமிருந்து ஜாக்கிரதையாய் விலகித் தூரஇருந்துகொள்ளும்படியே நேரும். குறித்த ஒருவனிடம் தானே பிரியம் வைக்காமல், தனக்கு வேண்டியவர்களின் பொருட்டாக அவனிடத்துக் குலாவ முயலுகிற மேல்உபசாரத்தன்மையால், அந்த மனிதனிடம் தனக்கு ஒரு வெறுப்பு தோன்றியதும் மேற்கண்ட விதமாகக் கடிதம் எழுதிவிடத் துணிவு உண்டாய்விடுகிறது. அந்தத் துணிவாலும் தமது பொறுமையற்ற அல்பபுத்தியாலும் மனம்போனபடி எழுதிவிடுகின்றார்கள். இது ஒரு விதம். வேறு சிலரோ தங்களுக்கு அனுகூலச்சத்துருக்களா யிருந்து கொடுந்துன்பமும் அவதியும் விளைவித்தோர்களின் கூட்டுறவை விரும்பாமல் மனக் கசப்பு ஏற்பட்டுப்போய், அவர்களுடைய கடிதமே தங்கட்கு வேண்டாமென்றும், அன்னோரது சகவாசமே தேவையில்லை யென்றும் மறுத்துவிட்டு, மனோ சமாதானமடையப் பார்க்கிறார்கள். இது மற்றொரு தினுசாகும்" என்று ஆமவடைப் பண்டாரம் பகர்ந்தார்.

ஃ

"காலவசமானது சிலரை அவசரப்பட்டு ஒரு காரியத்தை நிதான புத்தியின்றிச் செய்துவிட வைத்துவிடுகிறது. அந்த அவசரத்தின் விபரீதப் போக்கு பிறகு கனத்த கேடுகளை யுண்டுபண்ணிவிடும்போது இவர்கள் தங்களின் அவசரபுத்திக்குத் தங்களையே நொந்துகொண்டு அங்கலாய்க்கிறார்கள். எவ்வளவோ பொறுமைப்பட்டமனிதர்களைக்கூடக் காலவசம் இவ்விதம் ஆட்டிவிடுவதுண்டு" என்றார் தாண்டவத்தேவர்.

ஃ

"ஒருவருக்கொருவர் மனஸ்தாபப்பட்டுக்கொள்வதும், வக்கீல் நோட்

காலம்—எந்தத் திருத்தத்தையும், எந்த உணவுகளையும் ஏற்றுக்கொள்ள வைக்கும்.

டீஸ் அனுப்பிவிடுகிற அவ்வளவு அரத்துக்கு வேற்றுமைப்பட்டு விடுவ தும் இடையிலே யிருந்து தூண்டி விடுகிறவர்களின் விஷமத்தனத்தா லேயே நேரிடுகின்றது. இந்த நடு மனிதர்களை நீக்கிவிட்டு மனஸ்தாபப் பட்டுக்கொண்ட இருவரும் எதிர் பட்டுப் பேசிக்கொண்டுவிடுவார்களா ஞல், எத்தகைய கனத்த வருத்தமும் சுலபத்தில் தீர்ந்து சமாதானமாய்ப் போய்விடக்கூடும். அவ்விதம் இவ் விருவரும் சமரஸமாகிவிடில் தாங்கள் சுறண்டிக்கொண்டிருக்கிற லாபம் போய்விடுமே யென்று நடுமனிதர்கள் ஆத்திரமடைகிருர்கள். கடைசியில் இரு மனஸ்தாபக்காரர்களும் ஒன்ருகி விட்ட பிறகோ, இந்த நடுமனிதர்கள் எவருடைய கண்கட்கும் எதிர்படா மலே மறைந்துவிடுகிருர்கள். முடி வில் தாங்கள் செய்ய இருந்ததும், செய்துவிட்டதுமான தீங்குகளுக் குத் தெய்வத்தினிடம் சோதனைக் கூலியும் பெறுகிருர்கள்'' என்று அந்தோணி முத்து நவின்ருர்.

ஃ

"அற்பர்களின் கோபத்தை லக்ஷியம் செய்யக்கூடாது. அவர்க ளின் வார்த்தையை வெட்டியெறிந்து பேசிவிடுவதே மேல். அப்பொழுது தான் தங்களின் வாய்வீச்சு இங்கு பலிக்காதென்று அவர்களும் பின்வா ங்கிவிடுவார்கள். சனியன் தொலைந்த தென்று நாமும் திருப்திபடலாம். குடும்ப சம்பந்தமாய் நிறைவேற்ற நினைத்துள்ள நமது சரியான உத்த மத் தீர்மானங்களை மற்றவர்கள் கலக் கிக் கரைத்து மாற்றிவிட எண்ணிப் பேசும்போது, நமது மாருத உறுதி யின் கண்டிப்புத் திடத்தை அவர்கள் அறியம்படி செய்துவிட்டால், அதற் குப் பிறகு அன்னேரும் அடங்கிவிடு வார்கள்'' என்ருர் இஞ்சி பச்சடியார்.

ஃ

"சிலர் தங்களுக்கு நேர்ந்த அப வாதத்திலே அதைத் தாளாமல் அழுது கதறிவிடுகிருர்கள். அது கோழைத்தன்மையாலல்ல. தங்க ளின் தவிக்கிற மனதுக்கு அந்த அழுகையின்மூலம் ஒருவித சாந் தியை ஏற்படுத்திவிடுவது முதல் வேலை. பிறகு தங்களுக்கு நேர்ந்த துன்பத்தை நிவர்த்தித்துக் கொள்வ தற்கு வேண்டிய யோசனைகளைச் செய்யத் தொடங்குவதை இரண்டா வது வேலையாகவும் கொள்கிருர்கள்'' என்ருர் சிவகிரிப் பிள்ளை.

ஃ

"சிலர் தங்களின் வீட்டிலுள்ள வர்களையும், பந்துக்களையும், நண்பர் களையும் மிக்க மேன்மையாக மதித்து நடத்துகிருர்களாஞலும், அதற்கேற்ற படி மேன்மையாக அவர்கள் நடந்து கொள்கிறதில்லை. அதற்கு எதிரிடை யாகக் கெடுமதி படைத்த துரோகிக ளாகவும், வஞ்சகர்களாகவும் மாறி விடுகிருர்கள்'' என்ருர் சிதம்பரத் தேவர்.

ஃ

"ஒருவருக்கொருவர் தூஷித் துக்கொள்ளுகையில், அந்த ஆத்திரத் திலே வாரிக்கொட்டும் உக்கிரகமான வார்த்தைகளையும், நேவலச் சொற் களையும் பிறகு பொறுக்குவதற்கு ஆகிறதில்லை அந்தச் சொற்களை வெகுகாலம் வரையும் மறக்க முடிகிற தில்லை. திடமனதுள்ள சிலர் ஒரே

தான் ஒரு அக்காவுக்குத் தம்பியாக இருந்த காலம் முதன் முதலில் கண்ட நாடகமாம். இப்போது தன் குமார்த்தியும் குமாரனும் அக்காள் தம்பி யாக இருப்பதைப் பார்ப்பது இரண்டாவது தினுசான நாடகமாம்!

தீர்மானத்தை ஒருதடவை மட்டுமே செய்து, பிறகு அதை மாற்றாத உறுதியில் நின்றுகொள்கிறார்கள். இத்தகையோரைப் பிறர் ஏமாற்றுதல் சாத்தியமில்லை. சிலர் தங்களின் ஒரு குற்றத்தை மறைக்க ஒன்பது குற்றம் செய்து மூடினாலும் எவ்விதமும் அந்தக் குற்றத்தவறு வெளியில் தலைகாட்டி விடுகிறது" என்றார் பலசரக்குக்கடைச் செட்டியார்.

ஃ

"ஒருவர்க்கொருவர் பரஸ்பரம் தயாளத்துவசிந்தையுடன், ஒருவருக்காக மற்றவர் செலவிட முன்வந்து, தாராளத்தன்மையுடன் நடந்துகொண்டால்தான், இருவரது உறவும் நேசமும் நீடித்து நின்று பெருகும். தங்களின் பணம் காசு என்று கணக்குப் பாராமல் செலவிட்டு அன்பாயிருக்கவும் பரஸ்பரம் உதவிக்கொள்ளவும் அது தூண்டும். ஆபத்திலும் கைகொடுத்து உதவ வைக்கும். இவ்விதமின்றி ஒரு காசு, செலவிடுவதற்குக்கூட மனம் வராமல் தங்கள் பணத்தைக் கெட்டியாக முடிந்து கொள்வோருக்கு மற்றவரும் அப்படியே முடிந்துகொண்டு, நெருங்கிச் சேராமல் தூரவிலகி நின்று, பேச்சுகளை மட்டும் வெகு தித்திப்பாகக் கொட்டிவிட்டு ஒதுங்கிக்கொள்வார்கள். ஒரு காலத்தில் தாராள மனதாக இருந்தவர்கள், மற்றவர்கள் தங்களின் மனத்தை மாற்றி சுருக்கிக் கொள்ளவே, அதைப்பார்த்துக் கசந்து இவர்களும் அவ்விதமே சுருக்கிக்கொண்டு வேறுபட்டு விடுகிறார்கள்" என்று தாமோதரர் கூறினர். இத்துடன் நமது கடையும் பூர்த்தி பெற்றது.

பஹதூர் பொன்வண்டு செட்டியார்.

கடைசியில் சுவர் இடிந்து விழுகிறது!

ஒரு பெரிய வீட்டின் பக்கத்தில் அந்தச் சுவற்றுடன் இரண்டு அறைகளைக் கட்டிக் கொண்டுள்ள அண்டை வீட்டார் அடுத்த வீட்டுச்சுவர் முழுதும் தங்களுடையதே என்று சாதிக்கிறார்கள். பெரிய வீட்டினர் கொல்லைப் பக்கத்தில் இடிந்த சுவரை மறுபடியும் எழுப்பிக்கட்டுதற்கு முயன்றால், அண்டை வீட்டார் முழுச்சுவரும் தங்களுடையதென்று பேராசையுடன் பேசித்தடுக்கின்றனர். கடைசியில் புதுச்சுவர் எடுக்கப்படாமலே போய், இடிந்த சுவரின் மற்ற பாகங்களும் அடியுடன் வீழ்ந்து பாழாகிறது. அப்படிப் பாழானாலும் ஆகலாமே யன்றிப் புதுச்சுவர் எடுக்கக் கூடாதாம்! ஆ! பேராசையே! அநியாயமே!

சிலர் தாங்கள் வண்டியிற் செல்லும்போது வழியில் அறிமுகமானவர்களைக் காணும்போதெல்லாம் அடிக்கடி வண்டியை நிற்கவைத்து, அவர்களுடனே அனாவசியமாய் வார்த்தையாடி அனுப்பிவிட்டு, ஓட்டப்பா ஓட்டு என்று சொல்லி, அவ்விதமாக வண்டியிலிருந்து பேசுவதை ஒரு பெரிய கௌரவமாக நினைத்துக்கொள்ளுகிறார்கள். ஹா! என்ன கௌரவங்களப்பா!!

விவேகம் விநோதம் விசித்திரம் விகடம்

விகடப்பிரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம் அற்புதம் ஆச்சரியம் ஆநந்தம்

வாயடி, கையடி, கண்ணடி வித்தைகள்!



வாருங்களப்பா! என் விகட குட்டிக் குழந்தைகளே! இந்த விநோத உலகத்தின் செயல்களையும், அதன் விபரீதப் போக்குகளையும் விகடன் என்னென்று சொல்வேன்! "முகத்துக்கு முகம் கண்ணாடி!" என்பார்கள்! "முகம் சந்திர பிம்பம். அகம் பாம்பின் விஷம்" என்பதாக நடந்துகொள்வோர் எத்தனை பேர்! "முடக்கப் பாயில்லாதே போனாலும் சடக்குக் குறைச்சலில்லை" என்பதாகத் தங்களது ஆடம்பரத்தைக் காட்டுவோர் எத்தனை பேர்! "மூலை வீட்டிலே முட்டை யிடுகிற"வர்கள் எத்தனை பேர்! "மெச்சிக்கொள்கிறதற்கு எச்சிலை எடு"ப்பவர்கள் எத்தனை பேர்! "மொட்டைச்சிக்குத் தகுந்த மூக்கறையன்"களாக உள்ளவர்கள் எத்தனை பேர்! "மூத்திரம் பேய்கிறதற்குள்ளே முப்பத்தெட்டு குணம்" என்பதாக ஒரு நிமிஷத்துக்குள் முழுதுமே மாறிவிடுவோர் எத்தனை பேர்! "வாயிலே உறவு மனதிலே பகை" என்பதாக எத்தனை பேர்! "விசுவாசம் இருந்தால் வேசியும் பிழைப்பாள், நிசம் இருந்தால் நீசனும் பிழைப்பான்!" அதுதானே காணும்! இவைகளெல்லாம் "வாழ்நாளுக்கு எற்ற வயிற்றெறிச்சல்" தானப்பா! "மூக்கு இருக்கிறமட்டும் சளி உண்டு" என்பதுபோல, உலகம் உள்ளமட்டும் இந்த விகட விநோத வேடிக்கைகளும் இருக்கவே செய்யும்! முன்னுக்கு முனை சிவியா இருக்கிறார்கள்? எல்லாம் தன்னில் தானே அறிகிறது தான்! "முன் அளந்த நாழி பின் அளக்கும்" என்பதுபோல, ஒரு சமர்த்துத் தந்திரத்திலே கை நனைத்துத் தேர்ந்து விட்டவன், அதையே கடைசிவரைக்கும் காட்டுவான்! விகடன் முதலிலே வாயடி வித்தையை எடுத்துக் கொள்கிறேன்!

I

"மாவிருக்கிற மணத்தைப்போலிருக்கும் கூழ்" என்று சொல்வது பொய்யல்லடா ராஜாவே! அப்படிப் போலத்தான் மனது இருக்கிற ஒழுங்கு கிரமத்துக்கும், அழுக்குக் குப்பைகளுக்கும் தக்கபடிதான் வாயுமிருக்குமப்பா! "மெத்தை நேர்த்தி தலையணை பீற்றல்" என்பதாக வெளிக்கு வெகு ஒழுங்குள்ளவர்கள் போல் தோன்றுகிறவர்களின் உள் சங்கதியில் பல கசுமாலக் குப்பைகள் நாறிக்கொண்டும் மீறிக்கொண்டும் கிடக்கும்! "மெழுகின வீட்டிலே நாய்

புகுந்தது போல" இப்படியும் சில குடும்பங்களில் வெகுவான விபரீதத் தனங்கள்நேர்ந்துகொள்கிறது அய்ய னே! "மூடி முக்காட்டுக்குள்ளே போ கிறவள்தான் ஓடி ஓடி மாப்பிள்ளை கொள்ளுகிறது" என்பதாகத் தன்னை வெகு உத்தமிபோலக் காணபித்துக் கொள்கிறவள்தான் ரகசியத்தில் கோணல் நடத்தையைத் தொட்டுக் கொண்டு நிற்கிறது! அதைப் புரு ஷன் சந்தேகித்து, "நான் அந்தப் பயலே இவ்வீட்டுக்கு வரவேண்டா மென்று கண்டித்திருக்க, எப்படி அவன் வரலாம், எப்படி அதற்கு இடம் தரலாம்" என்று கண்டிக்கும் போது, இவளும் தன் பிகுவு விடா மல் அப்படி வந்ததாக யார் சொன் னது?—துடைப்பத்தாலே சிங்காரிக் கிறேன்—பெயரைச் சொல்லாமல் பேசினுல் நான் ஒப்பமாட்டேன்—எப்படிச் சொல்லலாம் என்மேலே? என்று வாய்ப்பந்தல் போட்டுத் திமிறு கிருள்! புருஷனே அந்தச் சங்கதி யைத் தனக்குத் தெரிவித்தவன் பேரைச் சொல்ல முடியாமல் பின் வாங்கவும், இவளும் அது கண்டு "வாயைப் பார்த்து ஆளை எய்த்த கதை"யாக அதற்குமேல் ஆரவாரித் துப் புருஷன் வாயை அடக்கிப் போடுகிருள்! "வாய் உள்ளவனுக்குக் காலம்" என்பதும் இந்த வாயடி சமர்த்துக்காரர்களைப் பற்றித்தான்! தான் விரும்பியவளைப் பார்ப்பதற்காக வந்துவிட்டு வேறு சங்கதிக்கு வந்தது போல வாயடி அடிப்பவர்களும் இருக் கிருர்கள்! விபசாரப் பிசாசுகளுக்கே வாயடி வித்தைகள் அதிக ஊேம்தான்!

ஃ

ஒரு தப்பு சங்கதியில் ஒருத்திக்கு ஒருத்தி துணையா யிருந்துவிட்டு, பிறகு இருவருக்கும் மனஸ்தாபங்க ளுண்டாய்விடும்போது, "மூக்கு அறுந்த மூளி, காது அறுந்த மூளி யைப் பழித்தாளாம்" என்பதுபோல, ஒருத்தி செய்த சங்கதியை இன்னெ ருத்தி வெளியிட்டுவிட, அதைப் பலருக்கு முன்பு மறைத்து மூடப் பெரிய வாயடி சமர்த்து காட்டிக் கொள்வது கனத்த வேடிக்கை! தான் நெடுங்காலமாக வஞ்சித்துச் செய்தி ருக்கும் மோசங்களும், துரோகச் செய்கைகளும் வெளிக்கு வந்து தன் னைக் கேட்கும்போது, தான் எதுவும் செய்யவேயில்லை யென்றும், எவ ராலோ தூண்டப்பட்டுப்போய் இப் படி வந்து விசாரிப்பதாயும், தனக்கு ஒன்றுமே தெரியாதென்றும் வாயடி யடித்து, 'மூன்று முழமும் ஒரு சுற்று: முப்பது முழமும் ஒரு சுற்று" என்று தங்கள்பேரில் சொல்லப்பட்ட சங்கதிகளுக்கெல்லாம் தக்கபடி பதில் தந்து சமாளிக்கப் பார்ப்பார்கள்! கடைசியில் இவர்களின் சங்கதிகளைப் பச்சையாக ருசுப்படுத்திவிட்டால், "முழிக்கிறதைப் பார் கிழக் குரங் கைப்போல"என்று அப்போது பேபே என்று விழிப்பார்கள்! சிலர் அதி லே மீறித் துணிந்து, "ஆமாம் செய் தேன், என்னை யார் என்ன பண்ண முடியும்?" என்று பட்டிவாய்த்தனம் காட்டுவார்கள்! "முப்பது பணம் கொடுத்தாலும் மூளிப் பட்டம் போகாது" என்பதாக, என்ன வாய் ஜல்லி யடிப்பினும், இவர்கள் தங்க ளின் குற்றத்தை மூடி மறைக்க முடி யாமற் போய்க் கடைசியில் திண்டாடு வார்கள்! தலை குனிவார்கள்!

ஃ

"முட்டாள்தனத்துக்கு முதல் பாக்குக்காரி"களான சிலர் தங்களை

இனிக்கப் பேசி மிகவும் குலாவி கடைசியில் படிப்பதற்கு ஏதாவது ஒரு புஸ்தகம் கொடுங்கள் என்று கேட்போரே அதிகம்.

மற்றவர்கள் எதிர்க்கும் சங்கதியிலே, "முட்டாளுக்குக் கோபம் மூக்கிலே" என்பதாக வெகு ஆத்திரப்பட்டுக் கொண்டு எவ்வளவுக்கு வாய் வீச்சு வீசுகிருளோ அவ்வளவுக்கும் ஜெயம் என்று பெரிய சண்டையைத்தொடங்கிக்கொள்வார்கள்! சில பெண்கள் தங்களின் தவறு தப்பிதங்களுக்குப் புருஷன் கண்டிக்கும்போது அவனை மீறி எதிர்த்து வாய்த்தனம் காண்பித்துத் தாய் வீடு போவதாகத் தெருவுக்கு வந்து "மூர்தானை இருக்கிறது நாலு வீடு இருக்கிறது" என்று தம் புருஷனின் மானத்தைச் சிந்த வைப்பார்கள்! இத்தகையோருக்குத் தான் ஆயுள் அதிகமானபடியால், கணவன் மரித்த பின் "குந்தினையா குரங்கே உன் சந்தடி யடங்க" என்று அடங்கிப் போவார்கள்! அல்லது இவர்களை அடக்க மகனே, மருமகளோ, புது மாப்பிள்ளையோ தோன்றிக்கொள்வார்!

ஃ

வீட்டுக்கு வந்தவர்களைச் சாப்பிட்டுவிட்டுப் போகிறது தானே என்று மிகவும் வேண்டிக்கொள்வது போல வாயடி யடிப்பார்கள்! எப்பொழுது ஊருக்குத் தொலைவானே என்று உள்ளுக்குள் எண்ணமிட்டபடியே வெளிக்கு வெகு உருக்கமாக "நீங்கள் போய்விட்டால் வீடு காலி தான், எப்படிப் பிரிந்து சகிப்போம்" என்று வாய்ப் பாசாங்கு வளர்ப்பார்கள்! தன்மீது தவறில்லையென்று ஒருவன் எவ்வளவு நியாயம் சொன்னாலும், "அது ஒரு பேச்சாகாது" என்று மறுத்து, அவன்மீதே தப்பிதம் இருப்பதுபோல வாயடி யடித்துப் பிறரையும் நம்பச்செய்து விடுவார்கள்! தனக்கு லாபமான சங்கதியை இன்னொருவனுக்கு லாபம் போல்பேசி வாயடியடித்து மயக்கி அவனைச் செய்ய வைத்துத் தாங்கள் அதிலே வேண்டியலாபத்தைப் பார்த்துக்கொள்வார்கள்!

ஃ

(1) தங்களின் காரியத்துக்கென்று வலியச் சென்று உறவு பிடிப்பவர்கள்; (2) தித்திக்கவே பேசிக் குடி கெடுப்பவர்கள்; (3) பல நாளைக்கும் தங்க நினைத்து ஒருவர் வீட்டுக்கு வந்துவிட்டு, நடுவிலே தாங்கள் புறப்பட்டுப் போகப்போகிறவர்கள் போலக் காட்டுபவர்கள்; (4) தன் வீட்டுச் சண்டையால் வெளிப்பட்டு ஓடி வந்துவிட்டதை மறைத்து, பிறரது வீட்டின் அவசரங்களுக்கு வந்து உதவிக்கொண்டது போல நடிப்பவர்கள்; (5) வீட்டுப் பெண்களை உறவு பிடிக்க வருபவர்கள்; (6) ஏமாற்றிப் பெண்ணைக் கொள்ளவும், கொடுக்கவும் நினைப்பவர்கள்; (7) அவனுக்கோ—அந்த இளம் விதவைக்கோ, தானே அவர்களுக்கு நல்லது நினைக்கிற முக்கியஸ்தன்போலக் காட்டிக்கொண்டு சுரண்டுகிறவர்கள்; (8) ஒருவனின் சங்கதியை உள் நுழைந்து மெதுவாக ஆராயப் பார்த்து மற்றவனுக்குத் தெரிவிக்க எண்ணுகிற பித்தலாட்டக்காரர்கள்; (9) இருபக்கமும் தலையசைத்துப் பேசி நடுவிலே பறிப்பவர்கள்; (10) தான் கையால் ஒன்றுமே தொட்டு வேலை செய்யாமல் பேச்சுச் சமர்த்திலேயே நின்று, தன்னாலேயே எல்லாம் நடப்பது போலப் பிறருக்குத் தோற்றுவிக்கிறவர்கள்; (11) தேனொழுகப் பேசி நன்றாகத் தின்று ஏப்பமிட்டுவிட்டுப்

புறப்பட்டபோது ஒரு தீர்மானம்; இவ்வளவுக்குள் தான் செலவிடுவேதென்று ஒரு கணக்கும் போட்டுக்கொள்வது. போய்ச் சேர்ந்த இடத்திலோ வேறொரு முடிவு.

பிறகு ஊர் போய், முன்பு சொன்னதெல்லாம் மறந்து எதும் செய்யாமலே கம்மென்று இருந்துவிடுகிறவர்கள்; (12) பிறருடைய செலவிலேயே தங்களின் பல செலவுகளை முடித்துக் கொள்கிறவர்கள்; (13) ஒன்றை வாய்த்துடுக்காகப் பேசிவிட்டுப் பிறகு தாங்கள் அப்படிச் சொல்லவேயில்லை யென்பவர்கள்; (14) தன் பகைக்காரனை மற்றவனும் பகைக்காரன் போலவே எண்ண வைத்துத் தனக்குப் பக்கத்துப் பலம் தேடிக்கொள்கிறவர்கள்; (15) ரொம்ப ரொம்பக் கொஞ்சமாகத் தின்பவர்களைப்போல் காட்ட, ஒரு இட்டிலி போதுமென்று பட்டாங்கடித்துப் பத்து இட்டிலியை விழுங்குகிறவர்கள்; (16) தானே மற்றவர்களிலும் அதிக உறவு, நேசம், நெருக்கம் கொண்டவர்கள் போலக் காட்டிக் கொஞ்சிக் கொள்கிறவர்கள்-இத்தகையோரெல்லாம் வாயடி வித்தையிலே வெகு பேர்போனவர்கள்! இவர்களுக்கும் சத்தியத்துக்கும் வெகு தொலைதூரம்! இன்னும் எவ்வளவோ வாயடி அடிக்கிறவர்களை யெல்லாம் விகடன் வெளியிலிழுத்துச் சொல்லலாம்!

II

கையடி வித்தையோ வாயடி வித்தைக்குத் துணை! "வாய் கரும்பு கை இரும்பு"; "வாய் சர்க்கரை கை கருணைக்கிழங்கு" என்பதுபோல, வாய்ப் பேச்சு அதிகமே தவிர கை நீளம்—தாராளத்திலே இராது! ஆனல், எவ்வளவோ பிரியமாக அன்னம் படைப்பதுபோல் கை காட்டும்! வயிறு நிரம்பாது, பசியுந் தீராது. வாய் மட்டும் இன்னும் கொஞ்சம் சாதம் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லும்! கையோ ஒன்றுமே இடாது! எடுக்கிறதுபோல எடுத்து மறுபடியும் தட்டிலேயே வைத்துவிடும்! ஒருவருக்கு ஒன்று வாங்கியோ, வீட்டிற்குள்ளிருந்து எடுத்தோ கொடுப்பதிலும் கை வெகு சுருக்கமாகவே பின்னுக்கு இழுத்துக்கொண்டாலும், வாய்மட்டும் 'இன்னும் வேணுமா—போதுமா' என்று நீள நீளப் பேச்சு காட்டும்! வெகு பிரியமான கடிதத்தைக் கை எழுதிவிடும்! அதே சமயம் நெஞ்சிலே ஒரு கடுகத்தனைப் பிரியமும் இராது! தோளோடு தோள்போட்டுத் தொங்குகிறதெல்லாம் உண்டு; ஆனல் நல்ல ஈகைக் கைமட்டும் இராது! பிறர் வீட்டு நெய்யானல் தாராளமாய் ஊற்றிக்கொள்ளக் கைவரும்! தனக்கு வேண்டியவர்களானல் பால் விட்ட காபியிலும் மறுபடி பால் ஊற்றி வெகு பிரியமாய்த் தந்துவிடும்!

ஃ

நீராடுகையில் முதுகு தேய்ப்பதிலே ரகசியமுண்டு. கைகளுக்கு அதிக மெஸ்மரிச மயக்குச் சக்தியிருக்கிறது! அதனல்தான் மனைவி தன் கணவனுக்கு முதுகு தேய்க்கவேண்டுமென்பது! அது இருவரையும் ஒற்றுமைப்படுத்திவிடும்! மாப்பிள்ளைக்கு நலுங்கிடுவதிலே பல பெண்களின்கை படுவதில் வாழ்க்கை யுணர்ச்சியைத் தெரிந்துகொள்ள வைக்கும்! கோழித் திருடி கூடக் குலாவுவதும் ஒரு கையடிவித்தை! தன்னை எவரும் சந்தேகியாரென்று மெதுவாகத் தன் முன் அகப்பட்டதைச் சுருட்டி மறைத்துவிட்டு யோக்கியனக நடப்பதும் ஒரு பெரிய கையடி வித்தை! பிள்ளை

தனது சமயங்களுக்கு உதவுகிறவ னல்லவென்று ஒருவனைப்பற்றித் தெரிந்துகொண்டபிறகு அவனை மதிக்காதிருந்துவிடும் தன்மையின் மூலமாகவே அவனுக்குப் புத்தி கற்பித்து ஒதுக்கிவிட வேண்டும். அந்தக் குறிப்பை அவனும் கண்டுகொள்வான்.

யைக் கிள்ளித் தொட்டிலாட்டுதலும், குழந்தையின் கழுத்தி விருப்பதைக் கழற்றுகிற சமயம் எவரேனும் வந்து விடில் குழந்தையைத் தூங்கப்பண்ணு வதுபோல் தட்டிக்கொடுப்பதும் ஒரு கை சமர்த்து! "வேகிற வீட்டில் பிடுங்கினது லாபம்" என்று பறிப்பதும் ஒரு கையடி வித்தை! தான் போய்த் தங்கியிருக்கிறவீட்டினில் தானும் பல வேலைசெய்வதுபோல் பரிமாற வருவதிலே, அந்த வீட்டுக்காரனின் இலையில் அதிகம் வைத்து மிகு பிரியமுள்ளவள்போல நடித்து, அவன் வீட்டில் இன்னும் பலநாள் குந்திக் கொள்ளப் பார்ப்பதும் மகா கையடி சமர்த்து! இன்னும் வியாபாரத்திலே கையடி, கொசுறு போடுவதிலே கையடி- போன்றவைகள் எத்தனையோவிதங்களப்பா! நம்ப வைத்து நடுவிலே கழுத்தறுக்கும் கைத்தினுசுசள் வேறேயுண்டு! குடிக்கும் கை, பிடிக்கும் கை. சரஸக் கை, அன்பு நடிப்புக் கை, கும்பிடு போடும் கை, தரித்திரக் கை, அதிர்ஷ்டக் கை, நல்ல ராசி யுள்ள கை, கொண்ட கணவனுக்கு மருந்திடும் கை—இதிலும் ஆயிரம் வகைகள்! ஆனதால்தான் விகடன் கையடி வித்தையின் சமர்த்தும் லேசானதல்லவென்கிறேன்!

III

கண்ணடி வித்தையோ வாயடி, கையடிகளுக்கும் மேலான ஜெகஜால வித்தை! ஒரு கண்ணடி ஜாடையிலே ஒரு பெண்ணையோ வாலிபனையோ அப்படியே அமுக்கிக்கொண்டு போய்விடும்! ஒருவன் ஒரு பெண்ணைத் தந்திரமாய்த் தொட்டு வழக்கப் படுத்தி மயக்க நினைத்து அதற்காக முயலும்போது, அதையறிந்த அந்தப் பெண் ஒரு உக்கிரக் கண்ணடி யடித்துவிட்டால், உடனே அவனை நடுங்க வைத்து ஓடச் செய்துவிடும்! இந்தக் கண்ணடி சமர்த்துக்குக் கை உதவி, வாய் உதவி எதுவும் வேண்டியதில்லாமலே தானே தனியாயிருந்து சமாளித்து உலகத்தையெல்லாம் ஆண்டு வசியப்படுத்திக் கொண்டுவிடும்! கண்ணை அப்படியும் இப்படியும் திருப்பி அசைக்கிற அசைப்பிலேயே வாயும் கையும் செய்கிற எல்லா வேலைகளையும் நடத்திக்கொண்டு விடும்! கண்ணுக்குக் கண் சம்மதி கொடுத்துவிட்டால் வாய்ப் பேச்சுக்கு அங்கு வேலையேயில்லை! இணங்குவதும், பிணங்குவதும், எரிந்து விழுவதும், விலகுவதும், கோபிக்கிறதும், கடுகடுப்பதும், துவேஷிப்பதும், பகைசாதிப்பதும், நேசிப்பதும், மோகிப்பதும், பிரிவதும், கூடுவதும், சிரிப்பதும், அழுவதும், தொழுவதும், துடிப்பதும், தடிப்பதும், மீறுவதும் தூறுவதும், சீறுவதும, நாறுவதும்—யாவும் கண்ணடி சமர்த்து தனக்குத்தானே மௌனமாய்ச் செய்து கொண்டுவிடும்! இவ்வளவும் வெளிக்கு வரவே வராத அத்தனை மர்மமாயிருக்குமடா அப்பா!

ஃ

கண்களிலும், அதன் சதையிலும் (Phosphorecence) பாஸ்பரஸென்ஸ் என்கிற ஓர்வித ஒளிசக்தி யிருக்கிறதிலே. அந்த சக்தியால் எத்தகையோரையும் மயக்கிவிடுகிற ஒரு ஜெகஜால வித்தை வெகு சமர்த்தாய் நடந்தேறி வருகிறது! இதனல் தப்பு நடத்தையுள்ளவனும் தன் கண்களால் வெகு யோக்கியன்போல்காட்டுகிறன்! பிறரின் கண் தன்னை நோக்காதபோது, தான் அவர்களைத் தந்திரமாய் நோக்குகிறன்! சிலரின் கண்க

காதில் ரவைக்கம்மலானுலும் முகக்கோணலை மூடமுடியாது. அழகு முகத்துக்கு எதை இட்டாலும் அழகுதான்.

ளைப் பார்க்கும்போதே அவர்கள் காரியப்புலி யென்று தெரிந்து விடுகிறது! தங்களின் சொல் சத்திய வாக்கு போலவும், தங்களை நம்பிக்கையுடையவர்கள்போலவும் கண்ணடி வித்தையால் வசியப்படுத்தி விடுகிறார்கள்! வெகு அன்புள்ளவர்கள் போல் தங்களைக் காண்பித்துக்கொள்வதும் ஒரு கண்ணடிவித்தை! கண்ணடி சமர்த்துகளிலே எவ்வளவோ சங்கதிகள் நடந்துவிடுகின்றன. இந்தக் கண்ணடி வித்தைகளுக்கு நிகருமில்லை; ஜோடியுமில்லை; அதை விவரித்துச் சொல்ல விகடனுக்கு இடமுமில்லை! ஆதலின், என் நஞ்சான் குஞ்சான்களே நினைத்துப் பார்த்துக்கொள்ளட்டுமென்று விட்டுவிடுகிறேன்! கடைசியாக, வாயடி, கையடி, கண்ணடி என்பதான மூன்றுவித வித்தைகளின் சமர்த்துகளுக் குள்ளேயே இந்த விநோத விகட உலகமும் அடங்கிப் போயிருக்கிற தென்பதை விகடன் குறிப்பாய்த் தெரிவிக்கிறேன். நீங்களும் கருத்தாய் முறுக்காய் கேட்டுக்கொள்ளுங்கள்! ஒன்பதாம் வருடப் புது சந்தாவை உடனே விகடனை மறவாது அனுப்புங்கள். ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா!!



புதுப் பெண்ணே! புதுப் பெண்ணே! நெருங்கிப் பக்கத்திலே படுத்துக்கொள்ளு. உனக்குப் பின்னாலே இருக்கிறது போகப்போகச் செருப்படி பூஜை என்று கல்யாணவாழ்வு கூறுகிறதாம்!

என் அருமை நாயகா! என் சங்கதி இப்போது தெரியாதுதான். இன்றைக்கு நான் வெகு அடக்கமான வாய் பேசாத பெண்ணே! போகப் போக அறிவீர்கள் என் கையிற் சிக்கி நீங்கள் படும்பாடு என்று ஒரு கல்யாணப் பெண் தனக்குள்ளே சொல்லிச் சிரித்துக் கொண்டாளாம்!

கல்யாணத்தன்று இருக்கும் பிரியமும் சாவின்போது சேரிடும் வியாகூலமும் நீடித்திருப்பதில்லையாம்!

நன்றாய் முடியின் எல்லாம் நன்றே! அதுதானே காணோம் விகடேசா!

ஆடிய பல்லும் அந்தரங்கத்திலே சென்று குலாவ ஆசை வைத்துவிட்ட காலும் புறப்பட ஆரம்பித்துவிட்ட ரயிலும் அந்த இடத்திலே பிறகு நிற்காதாம்!

அவனை ஏமாற்றி அவ்வீட்டுக்குள் நுழைந்துகொண்டுவிட முடியவில்லையே என்று ஒருவர் விகடனிடம் அங்கலாய்க்க, அதற்கு விகடன் உன்னைப்பற்றி நன்றாகத் தெரிந்து விழித்துக்கொண்டவனை நீ ஏமாற்றித் தூங்கவைப்பது மிகவும் கஷ்டமான வேலையப்பா என்று பதில் சொன்னானும்!

"ரிப்பேர்" என்பதற்கு 'இரண்டாவது கல்யாணம்" என்று அருத்தமாம்! ஒரு குடை, ஒரு கடியாரம் இவற்றின் ரிப்பேர் அவற்றிற்கு இரண்டாவது கல்யாணம் செய்தது போலாகுமாம்!

பறிக்கிறவர்களையன்றித் தருவாரைக் காணோமாம்! இடுவார் இல்லையாம்! உண்பவர்மட்டும் உண்டாம்!

வீட்டிலே புருஷன் மனைவிக்குள் கலகமானால், அவ்வீட்டில் குடிவந்திருப்போர் இரண்டு பக்கத்திலும் வேண்டியவர்களாக நின்று தலையாட்டி மத்தளம் அடிப்பார்களாம்!

வீட்டுக்காரன் செலவுக்கு ஏங்கு கையில், மனைவியோ புறப் பணியாரம் சுடக் கணக்குப் போடுகிறாளாம்!

வீட்டுக்கு மொத்தமாக மளிகைச் சாமான்கள் வாங்கியானதும், விருந்தாளிகளும் மொத்த மொத்தமாகவே விஜயமாகிறார்களாம்!

எதையும் தொடர்ந்து பழகினால் நாற்றமாயிருப்பதும் ரொம்பரொம்ப வாசனையாகி விடுமாம்!

எனக்கு எப்போது கல்யாணமாகுமோ, எப்போது எனக்கு நலுங்கு வைத்துப் பக்கத்தில் ஒரு பெண்ணை உட்கார விடுவார்களோ என்று ஏங்குகிறவர்களுக்கு முன்பாக, ஏற்கெனவே கல்யாணம் செய்துகொண்டு ஏமாறிப்போன பழைய மாப்பிள்ளைகள் பெருமூச்சு விடுகிறார்களாம்!

கோபித்த கணவன் தன் மனைவியைக் கொஞ்சுகிற வேளையும் ஒன்று இருக்கிறதாம்!

மனைவி ஒருசண்டையை இழுக்க வென்று ஒரு சுடுவார்த்தையை வீச, கணவனோ அதைக் கவனியாதது போல் வெளியே சென்றுவிட, என் செய்வாள் பெண்மணி, பாவம்!


ஆஸ்பத்திரியில் மருந்து கலந்து தருவோரிற் சிலர் குட்டி டாக்டர்களாகி விடுகிறார்களாம்!

சிநேகம் பிடிக்கவந்து, அதிலே லாபம் கிடைக்காதபோது ஏமாறிப் போய்த் தூரப் பிரிந்து விடுகிறார்களாம்! ஆஹாஹா! போத் அச்சா!!

திக்கற்ற இரு பெண்கள்.

“நெடுமரம் போலப் பையனை வைத்துக்கொண்டு இன்னமும் அவனுக்கு ஒரு ‘கால் கட்டு’ கட்டாமல் சும்மா இருக்கிறாயே? நாளைக்கு நீ கண்மூடிக்கொண்டால் அவன் கதி என்ன? சேஷம்மா! உனக்கு ஏன் இந்த யோசனையில்லை?”

சேஷம்மா:—பார்வதி! நீ சுலபமாகப் பேசிவிட்டாய். யோசனைக்கென்ன குறைவு? என் கவலையே என் தேகத்தை அரித்துத் தின்று எலும்புக் கூடாக்கிவிட்டது. என் வீட்டுக்காரர் தனது தங்கையின் இரண்டு பெண்களை இந்த வீட்டோடு வைத்துவிட்டுப் போயிருக்கிறாரே! அது ஒரு பெரிய தொல்லையம்மா? ஊரில் வருகிற வாந்திபேதி இவர்களுக்கு வந்து இடம் காலியாகக்காணோமே:” என்று தன் எதிரிலிருந்த விவாகமாகாத இரு பெண்களையும் பார்த்துக் கைகளை நீட்டித் திட்டினாள்.



பார்வதி:—ஏன்? இந்த இரண்டு பெண்களையும் உன் மகனுக்குக் கட்டிக்கொள்ளுகிறதுதானே? அல்லது ஒரு பெண்ணை வெளியில் கொடுத்துவிட்டு மற்றொன்றை நீ எடுத்துக் கொள்கிறதுதானே? வீட்டிலேயே தங்க விக்கிரகம்போல் பெண்களை வைத்துக்கொண்டு இப்படி விசாரப் படுகிறாயே? வீணாக அநாதைப் பெண்களைக் கண்டபடி பேசாதே. பாவம்!

சேஷம்மா:—நன்றாகச் சொன்னாயே? இந்தத் தரித்திரக் குப்பைகளையா என் மகனுக்குக் கொடுக்கும்படி சொல்லுகிறாய்? இதுவரை இந்தவீட்டில் உட்கார்ந்து தின்று அழித்துவருவது போதாதா? என் பிராணன் போனாலும் இவர்களை நான் கொள்ள மாட்டேன். வெளியே தகுந்த இடத்தில் பெண்ணெடுத்து அப்படிக் கலியாணம் முடித்தால்தான் போகவர இருக்கும்படியாகி, அது ஊருக்கும் ஒரு மதிப்பாகத் தோன்றும். அதை விட்டு இந்தக்கரித்திரப் பஞ்சைகளையா கட்டிக்கொள்ளச் சொல்லுகிறாய்?

பார்வதி:—உன் செல்வத் திமிர் இப்படிப் பேச வைக்கிறது? இந்தத் திக்கற்ற இரு பெண்களையும் விட்டுவிட்டு வேறிடத்திலே உன் குமாரனுக்குப் பார்த்தால் தெய்வம் பொறுக்குமா? உன் வீட்டுக்காரர் சாகிற நேரத்தில்கூட செல்வபதிக்கு என் தங்கையின் இரு பெண்களில் ஒன்றை விவாகம் செய்துவிடு என்று சொல்லிப் போனதற்காகவா இப்படி நடக்கிறாய்? உன்னுடன் பேசுவதற்கே எனக்குப் பிடிக்கவில்லை சரி. நான் எழுந்து போகிறேனம்மா. திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை.

ஃ

என்று சொல்லிப் பார்வதி தன் வீட்டுக்குக் கோபத்துடன் சென்றாள்.

அவளைப் பழித்தபடி சேஷம்மாள் முகத்தைக் கோணிக்கொண்டு நெடு



நேரம் உட்கார்ந்திருந்தாள். கடைசியில் தன் அபிப்பிராயத்தையே உறுதி செய்துகொண்டு. தாசில்தாரின் குமாரத்தி தனபாக்கியத்தைத் தன் குமாரனுக்கு முடிவு செய்வதென்ற தீர்மானத்துக்கு வந்தாள். உத்தியோகஸ்தரின் வீட்டில் பெண் எடுத்தால், தன் மகனுக்கு உத்தியோகம் கிடைப்பதுடன். வெளிக்குக் கௌரவமாயுமிருக்குமென்று சேஷம்மாள் நினைத்துக்கொண்டாள் இந்தக் கௌரவத்தைக் கருதினளே தவிர, ஏழைப் பெண்களான அம்புஜம். ஜானகி இவர்களுக்கு ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமே என்ற தர்ம சிந்தை அவளுக்கு உண்டாகவேயில்லை. காலம் கெட்டுப்போயிற்றல்லவா ? அவரவர்கள் தங்களின் சொந்த லாபத்தையே முதலில் கவனிப்பதென்பது இந்த நாளில் சாதாரண வழக்கத்திற்கு வந்துவிட்ட சங்கதிதானே? ஆனால் என்ன? திக்கற்றவர்கட்குத் தெய்வம் கூடவா துணையில்லாமற் போகும்?

சேஷம்மாளின் சமர்த்து யாருக்கு வரும்? தாசில்தாரின் பெண்ணையே பார்த்து நிச்சயதார்த்தமும் செய்து விட்டாள். அம்புஜமும் ஜானகியும் கண்ணீரோடும் நின்றனர். இந்த சமயத்தில் மதுரையில் தாமோதரம் ஐயர் யென்ற ஒரு தனவந்தரின் மனைவி கனத்த வியாதியில் விழுந்து விட, வேறொரு பெண்ணை அவருக்கு



விவாகம் செய்துவைத்துவிட்டால், தோஷம் நீங்கி அவரது மனைவி பிழைத்துக்கொள்வாளென்று ஜோஸ்யர்கள் சொன்னார்கள். அதன்மேல் பரபரப்புடன் அவசரமாய்ப் பல இடங்களிலும் பெண் பார்க்கப் புகுந்தனர். ஒரு பெண் இருக்கையில் இன்னொரு பெண்ணைக் கொடுக்கப் பலர் மறுத்துவிட்டனர். பக்கத்து வீட்டுப் பார்வதியம்மாளின் செவிக்கு இந்த சங்கதி எட்டி, ஏழைப்பெண்ணுக்கு எவ்விதமேனும் விவாகம் நடந்தாற்போதுமென்று, அம்புஜத்தை அவர்களுக்கு ஏற்பாடு செய்துவிட்டாள். சேஷம்மாளின் குமாரனுக்கு விவாகம் நடப்பதற்கு முன்பே அம்புஜத்திற்கு விவாகம் சிறப்பாய் நடந்தேறிவிட்டது. பெண்ணுக்கு மூவாயிரம் ரூபாய் வரை நகைகள் போட்டார்கள். சேஷம்மாளுக்குத் தன்னிடம் கூழுக்குக் காத்திருந்தவளுக்கு இவ்வளவு நகைகளும் நல்ல இடமும் கிடைத்ததா என்று மனதுக்குள் பொறாமைதான். பார்வதிக்கு மிக்க சந்தோ

தமது ஜீவிதகாலத்தில் கௌரவிக்கப்படாமல் தாம் கண்மூடிய பிறகு தமது பிரதானத்துவத்தை யுணர்ந்து துதிக்கப்படுவோரின் கணக்கே அதிகம்.

ஷமே. இந்த விவாகத்திற்குப் பிறகு தாமோதரம் ஐயரின் முதல் மனைவி ராதாவும் பிழைத்தெழுந்தாள். அம்புஜமும் ராதாவும் அன்னியோன்னியமாய் ஸகோதர பாசத்துடன் குலாவி நின்றனர். இருவரும் நன்கு கற்றவர்களாதலின் கீழ்த்தரமான சச்சரவுத்திச் சண்டைகளில்லை.

ஃ

சேஷம்மாளின் குமாரன் செல்வபதிக்கும் தாசில்தாரின் குமாரத்தி தனபாக்யத்துக்கும் விவாகம் மிகசம்பிரமமாய் நடந்தேறிற்று. சேஷம்மாளின் மனதும் குளிர்ந்தது. மாமியார் ஸ்தானத்தை வகிக்கத் தொடங்கினாள். மருமகள்மீது அதிகாரம் காண்பித்து அடக்கியாள முயன்றாள்.



தனபாக்யத்துக்குத் தன்னை மாமி அடிமைபோல் நடத்துவதைச் சகிக்க முடியவில்லை. "எதற்காகப் பெண்களை இவ்வளவு சேவலமும் இழிவுமான நிலையில் வைத்துத் தாழ்த்தி அவமதிக்கவேண்டுமோ." என்று தன் மாமியைக் கேட்கத் தொடங்கினாள். "ஒரு பெண்ணுருவமே தன்னையொத்த மற்றொரு பெண்ணுருவத்தைத் தன்மதிப்பு சற்றுமின்றி அவமதிப்பதா?" என்று தனது பி. ஏ. படிப்பைக் காண்பித்துக் கேள்விகள் போடலானாள். "அன்பின் வழியாக அதிகாரம் செய்தல் தோன்றவேண்டுமேயன்றிக் கொடுமையிலிருந்து அதிகாரம் செய்யத் தலைப்படுவது கூடாது" என்றாள். சேஷம்மாளுக்கு நேர்வழியாகப் பதில் சொல்ல முடியாததால், படிப்பில்லாத தனது கோணல் புத்திக்குஏற்பத் தன் பெருவாயைத் திறந்துகொண்டு சொல்லம்புகளை வீசி எறிந்தாள். தனபாக்கியத்துக்கு இது சகிக்காமல் தன் தந்தைக்குச் செய்தி தெரிவிக்க, அவர் தாசில்தார் அதிகாரத்துடனே வந்து சேஷம்மாளைக் கண்டபடி பேசிக் கேவலப்படுத்திவிட்டுத் தன் குமாரத்தியை மோட்டாரில் ஏற்றி அழைத்துக்கொண்டு போய்விட்டார்.

ஃ

இந்தச்சண்டையிலே செல்வபதி தன் மனைவி தனபாக்யத்தை ஏதும் கண்டித்துப் பேசவில்லை. தன் மனைவியின் பேச்சுகளை நியாயமென்றே அவன் கருதினான். அவன் படித்த விவேகியாதலின் செல்வத்திற் பிறந்து வளர்ந்த தன் மனைவி கிணற்று ஜலமெல்லாம் சேந்தவும், புடவைகளையெல்லாம் துவைத்துப் போடவும், சமையல் அறையிலேயே எப்போதும் கிடக்கவும் இஷ்டப்படாளென்றும், ஒரு வேலைக்காரியைத் துணைக்கு வைத்துக்கொண்டால் தன் மனைவிக்கு உதவியாயிருக்குமென்றும் தன் தாயிடம் கூறினான். "அந்தச் சிறுக்கியுடன் சேர்ந்துகொண்டு

ஒரே தந்தையிடத்துத் தோன்றியவர்களேயாயினும், அவர்களின் சரீரங்கள் உண்டுபண்ணப்பட்ட இடம் வெவ்வேறு ஸ்திரீகளின் உடலிலாகில், அந்தந்தப் பெண்களின் சுபாவத்திற்குத் தக்கபடியே அந்தந்த உற்பவ சரீரங்களின் குணப்போக்குகளுமிருக்கும்.

என்னை எதிர்க்கிருயா?" என்று சேஷம்மாள் தன் பெரிய வாயைத் திறக்கவே, செல்வபதியும் மௌன மாய் விட்டான். அவனது தாசில் மாமனர் ஐம்பது ரூபாயில் ஒரு உத்தியோகமும் தேடிவைத்து விட்ட தால், இந்தச் சண்டைகளைக் கவனித்துக்கொண்டு வீட்டிலிருக்கவும் அவனுக்கு நேரமில்லை. அவனுக்குத் தன் உத்தியோக வேலையே சரியாக இருந்தது.

ஃ

சேஷம்மாள் தன் தோழி பார்வதியம்மாளிடம் தன் குமாரன் மனைவியின் பக்கமாகவே இருப்பதை மாற்றுவதற்கு என்ன செய்யலாமென்று கேட்டாள். எதிர்ப்பட்ட சமயத்தைக் கைவிட்டு விடாத பார்வதிக்கு, திக்கற்ற பெண்ணுன ஜானகிக்கு விவாகம் நடத்த இதுதான் சமயமென்று மனதில் பட்டது. உடனே சேஷம்மாளைப் பார்த்து, அவர்களின் அகங்காரத்தை யடக்குவதற்கு ஜானகியைச் செல்வபதிக்கு விவாகம் செய்வித்துவிட்டால் பையனும் நமது பக்கமாகி, அவர்களின் ஆணுவமும் ஒடுங்கிவிடும் என்று உபதேசித்தாள். சேஷம்மாளுக்கும் அப்படிச் செய்தால்தான் அந்தத் தாசில்தார் தன்னைக் கேவலப்படுத்திப் பேசியதற்குப் பழிக்குப் பழி வாங்கியதாகுமென்று நினைத்து, 'ஓ! அதுதான் சரி' என்று துள்ளிக் குதித்தாள். பணத்திமிர் பிடித்த சேஷம்மாளுக்கு எதைத் தான் செய்ய முடியாது? அந்தச் சீமாட்டி நினைத்தால் எதுவும் உடனே ஆகிவிடுமெல்லவா? விவாகத்துக்கும் நாள் குறித்தாய்விட்டது.

ஃ

செல்வபதி தன் மாமனுருக்கும் தனபாக்கியத்துக்கும் இந்த விஷயத்தை ரகசியமாகத் தெரிவித்தான். அவர்கள் இருவரும் ஏழைப் பெண்ணுன ஜானகிக்கு விவாகமாவதில் தங்களுக்குப் பரம சந்துஷ்டியென்றும், அதை உன் தாயாரே தனது கையால் நடத்திவைப்பது மிக்க திருப்தியென்றும், மாங்கல்யதாரணமான பிறகு தாங்கள் கல்யாண வீட்டிற்கு வருவதாகவும், எவ்விதமேனும் நல்ல பெண்ணுகிய திக்கற்ற ஜானகிக்கு விவாகம் நடந்து விடட்டுமென்றும், தங்களின் திருப்தியை வெளியிடாமல், தாங்கள் முற்றிலும் இந்த விவாகத்திற்குப் பகைத்து எதிர் விரோதமாயிருப்பதுபோலவே காண்பித்துக் கொள்ளப்போவதாயும் கூறி செல்வபதியைத் தட்டிக் கொடுத்துவிட்டார்கள். செல்வபதிக்குத் தன் மாமனுரும் மனைவியும் மிக்க தயாளகுணமுள்ளவர்களென்று மனதில் பட்டுவிட்டது. அவன் தன் தாய்க்கு "அவர்கள் வெகு கோபமாயிருக்கிருர்கள்" என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு மௌனமாக நின்ருன்.

ஃ



ஜானகிக்கும் செல்வபதிக்கும் விவாகம் நடந்துவிட்டது. சேஷம்மாள் தாசில்தார் வீட்டுக்குத் தாம்பூலம் வைக்கவுமில்லை, அவர்களுக்குச் சொல்லவுமில்லை. சீ! அவர்கள்

டக்கிறார்கள் நாய்கள் என்று இகழ்ந்துவிட்டு விவாகத்தை முடித்துவிட்டாள். மாங்கல்யதாரணம் ஆகி மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் நலுங்கு வைத்துக்கொண்டிருக்கையில் தாசில்தாரும், அவர் மனைவியும், குமாரத்தி தனபாக்கியம் பி. ஏ.யும் அங்கு வந்து சேர்ந்தார்கள். சேஷம்மாள் இதைக்கண்டு ஏதாவது கலகம் நடக்குமென்று எதிர் பார்த்தாள். என்ன கலகம் செய்தாலும் இனி அவர்களால் தடைபடுத்தப் போவது ஒன்றுமில்லை என்று கூறிக்கொண்டு ராங்கியாக நின்றாள். தனபாக்கியம் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் நலுங்கு வைத்துத் தன் சந்தோஷத்தைக் காண்பித்துக் கொண்டாள். தாசில்தார் விவாக தம்பதிகளுக்கு ஏராளமான சீர்வரிசைகள் செய்து, ஜானகிக்கு எழுநூறு ரூபாயுள்ள கடியாரக்கொலுசையும், நானூறு ரூபாயுள்ள பொன் ஒட்டியாணத்தையும் கொடுத்தார். "திக்கற்ற ஜானகிக்குக் கல்யாணம் ஆய்விட்டதில் எங்களுக்கு எவ்வளவோ சந்தோஷம்" என்று தாசில்தார் கூறினார். அம்புஜமும் தன் தங்கையின் விவாகத்திற்கு வந்திருந்து கண்குளிரப் பார்த்தாள். அம்புஜமும் தனபாக்கியமும் மிக்க நேசமாய்க் குலாவினர்.

ஃ

இவற்றையெல்லாம் பார்த்த சேஷம்மாளுக்கு வயிறு பகீர் என்றது. "தாசில்தார் வீட்டினர் ஆத்திரப்பட்டு ஏங்கிச் சாவார்களென்றல்லவா இந்த விவாகத்தைச்செய்தேன்; அவர்கள் சந்தோஷமாயிருப்பதோடு, ஏராளமான சீர்வரிசைகளும் நகைகளுமாக வாரி இறைத்துக் கொண்டாட்டம் போட்டு நிற்கிறார்களே" என்று பார்வதியம்மாளிடம் போய் முட்டிக்கொண்டு வயிறு எரிந்தாள். பார்வதி உள்ளுக்குள் சந்தோஷத்தோடு வெளிக்குத் துக்க அபிநயம் செய்துகொண்டு, "இனி என்னசெய்வது? அவர்கள் இந்த விவாகத்தை ஆதிமுதற்கொண்டு எதிர்க்காமலிருந்ததே எனக்கு சந்தேகத்தை விளைத்தது. அப்போதே இந்த இரண்டாவது விவாகத்தை நிறுத்தி விடலாமா என்று பார்த்தேன் நீ கேவலமாகத் தாழ்த்திப் பேசிய ஏழைப் பெண்ணுக்கு உன் கையாலேயே விவாகம் நடப்பதைக் கெடுக்கக்கூடாதென்று இருந்துவிட்டேன் இனி அவர்களோடு ஒத்து சமரஸமாய்ப் போவது தான் நல்லது. உன் குமாரனும் அவர்களின் பக்கமாயிருப்பதுடன், தாசில்தாரின்கீழ் வேலையாகவுமிருப்பதால், இனி நீ உட்பட்டுப் போக வேண்டியவள்தான்" என்றாள். சேஷம்மாளுக்கு இந்த வார்த்தைகள் குத்துச்சொல்லாய் வெந்த புண்ணில் வேல் பாய்ந்ததுபோலிருந்தன. இனி என்ன செய்வதென்று கலங்கினாள். என் ஆணவத்தை எப்படியோ அடக்கிவிட்டார்களே; என் வீட்டிற்குக் கூடாதென்ற ஜானகியே எனக்கு மருமகளாகிவிட்டாளே; என் வீட்டில் இருக்கக்கூடாதென்று துரத்திய தனபாக்கியம் மறுபடியும் வந்து கூடிக்கொண்டாளே; அவர்களெல்லாம் ஒரு கூட்டமாகிவிடத் தான் ஒண்டிமரமாய நிற்கும்படி சேர்ந்ததே என்று வாய்விட்டுப் புலம்பலானாள்.

ஃ

சிலருக்கு எந்தப் புஸ்தகத்தைக் காண்பித்தாலும், வீட்டிற்குக் கொண்டுபோய்ப் படித்துவிட்டு நாளை (?) தருகிறேன் என்கிறார்கள். ஆதலின் எந்த நல்ல புஸ்தகத்தையும் அவர்களிடம் காண்பிப்பதற்கு வெகுவாய்க் கவலைப்பட்டு யோசிக்க நேருகிறது.

கொல்லைப்பக்கத்தில் தன் மாமியின் புலம்புதலைக் கேட்ட தனபாக்கியம் ஒரு தட்டில் புஷ்பங்களும் சந்தனக்கிண்ணியும் எடுத்துச் சென்று, மாமியின் கால்களுக்கு சந்தனம் பூசி, புஷ்பங்களால் அர்ச்சித்து நமஸ்கரித்தெழுந்து, "மாமி, நான் செய்த தப்பிதங்களை யெல்லாம் மன்னியுங்கள்; உங்கள் பிரியப்படி எல்லா வேலைகளும் செய்கிறேன்; உங்களுக்கு அடங்கி அடிமையைப்போல் நடக்கிறேன் ஜானகிக்கு விவாகமானது என் தங்கைக்கு நடந்த விவாகம்போல எனக்கு அதிக சந்தோஷம். நானும் ஜானகியும் உங்களுக்கு இரு கண்கள் போலிருந்து நடந்துகொள்கிறோம். நான் படித்த படிப்புக்கு உங்களை சந்தோஷப்படுத்துவதே என் முதல் கடமையாகு மென்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறேன்" என்று கூறி மறுபடியும் மாமியை நமஸ்கரித்தாள். சேஷம்மாள் பிரமித்து நின்று தன் மருமகளைத் தழுவி முத்தமிட்டுக் கொண்டாள். யாவரும் சமரஸமாயினர். திக்கற்ற இரு பெண்களுக்கும் தெய்வம் துணையிருந்து காத்துஅருள் புரிந்தது அற்புதமன்றோ!

வியாபாரத்திலுள்ள பிரதான சூட்சுமம்.

வியாபார ரகசியம் அதி மர்மமானது. இந்த அல்பத்திலே இவன் என்ன ஸம்பாதித்துவிடப் போகிறானென்று அலக்ஷியமாய் எண்ணும் வியாபாரத்திலேயே எத்தனையோ பேர்கள் ஜீவித்து வருகிறார்கள். ஒரு சிறிய வர்த்தகத்தைத் தொட்டுக்கொண்டு பெரிய வியாபார ஸ்தானத்தின் தலைவர்களானவர்களும் இருக்கிறார்கள். ஒரு சிறு சந்தில் ஒரு ரூபாய் வாடகையில் ஒரு கடையை அமர்த்திக்கொண்டவனை நோக்கி, கடை வீதியில் வைக்காமல் இந்த இடத்தில் வைத்திருக்கிறாயே என்று பழிக்கிறோம். ஒரு ஐந்து மாதத்திற்குப் பிறகு அந்தப் பக்கம் நாம் வந்தால், அந்தச் சிறு கடை அதைத் தொடங்கியவனுடைய சாமர்த்தியத்தால் எல்லா அவசியமான சாமான்களும் நிரம்பப் பெற்றதாகி, எதைக் கேட்பினும், கடைக்காரன் உள்ளிருந்து கொண்டு வந்து தரக்கூடியவனாய், அந்தக் கடை அச்சிறு சந்திலுள்ளோரின் தேவைகளையும், சில சமயங்களில் தனவந்தர்களுடைய தேவைகளையுங் கூடப் பூர்த்தி செய்யக் கூடியதாகி, அங்கு அவசியமாய் வேண்டத்தக்க ஒரு கடையாகவே எல்லோரும் விருப்பமாய் மதிக்கும்படி ஏற்பட்டுக் கடைக்காரனுக்கு நல்ல லாபமும் உண்டாயிருப்பதைப் பார்க்கிறோம். எந்த வியாபாரமும், எந்தத் தொழிலும் அற்பமன்று. அவற்றைச் செய்கிறவனுக்கு இருக்கிற சாமர்த்தியத்தைப் பொறுத்தே அவற்றின் விருத்தியும் வியாபகமும் லாபமும் இருக்கிறது.

ஃ

காய்கறிகள், பழங்கள், இலை முதலியவை விற்கும் பெண்களையும் காலைச்சிற்றுண்டிகளைச் சுட்டு விற்கும் மாதர்களின் சுறுசுறுப்பையும் உற்று நோக்குவோருக்கு, அதிகமுதல் இடாத சிறு தொழிலாக இருந்தபோதிலும், அதனைச் செம்மையாகவும் செட்டுசிக்கனமாகவும் செய்வதிலிருந்து லாபம் ஏற்பட்டு அவர்களுடைய ஜீவனத்துக்கும் சரிகட்டி, சிறிது மிச்சப்படுத்தி வைக்கக்கூடியவர்களாயும் இருப்பதும் தெரியவரும். வாழைமட்டைகளைக் காயவைத்து அதையே விறகாக உபயோகித்து, எரித்துக் காலைச் சிற்றுண்டிகளைத் தயாராக்கி விற்று விட்டவர்களும் உண்டு. அடுப்பு எரிப்பதில் அவ்வளவு செட்டுகாண்பித்து எப்படியோ வியாபாரத்தை நடத்தி விடுகிறார்கள். மனம்பிடித்துச் செய்யப்போனால் எதுவும் தொழில்தான். படிப்பை ஒரு அளவில் முடித்துக்கொண்டு ஜனங்களுடைய தேவைகளைக் கவனித்து, அதற்கு ஏற்றதான ஒரு வியாபாரத் துறையில் கவனத்தைத்

பல மணிக் கணக்கில் பேச உட்காரும் நீண்ட பேச்சுக்காரர்கள் பயங்கரமானவர்கள். அன்றைய வேலைகட்குப் பிடித்த எதிர்பாராத சனியன்கள்.

திருப்பப் பழகிக்கொண்டால், வாழ்நாள் முற்றும் சுகமாக ஜீவிப்பதற்கு வழி—சந்து உண்டாக்கிக்கொண்டு விடலாம்.

ஃ

உதாரணமாக, பன்றிகளின் வியாபாரத்தைக் குறித்து ஒரு மேதாவி தெரிவித்திருப்பதை இங்கு கூறுகிறோம். பன்றி எவ்வளவோ அசங்கித ஜந்து. ஆனால், வியாபாரம் என்று தொடங்கிவிட்டாலோ எந்த அசங்கியத்தையும் கவனிக்கக்கூடாது. இதுதான் வியாபாரத்திலுள்ள முக்கிய சூட்சுமம். எதையும் அற்பமென்று எண்ணலாகாது. இது மற்றொரு வியாபாரத் தத்துவம். பன்றிகளின் சங்கதியைக் கவனிப்போம். பன்றிக்கு 15, 20-வருஷங்கள் வரையில் ஆயுசு. 9, 10, 11-மாசப் பிராயத்தில் ஈன ஆரம்பிக்கும். ஒரு பன்றி மூலமாய், ஈத்துக்கு 6-வீதம் கணக்கிட்டாலும், 10-வருஷ காலத்துக்குள் 60-லக்ஷம் பன்றிகளுள்ள ஒரு சம்சாரம் ஏற்பட்டுவிடும். இது வெறும் வார்த்தையில்லை. ஒரே பன்றிக்கு 2-வருஷத்தில் 4616 குட்டிகளுள்ள சந்ததி உண்டாயிற்றென்று இந்த வியாபாரத்தில் செல்வந்தரான கனவான் கூறுகிறார். "பன்றிக்குப் பத்துக் குட்டி" யென்ற வார்த்தையை நாம் கேட்டதே. கோடீசுவராள் ஆக வேண்டுமென்று கோருகிறவர்களுக்குப் பன்றி வியாபாரமே மிகவும் நல்லதென்பது மேற்கூறிய கனவானின் கருத்து. ஆயிரம் ஏகரா நிலம் சம்பாதித்து 100-பன்றிகளைக் கொண்டு ஆரம்பித்தால் 5-வருஷத்திற்குள் 4,5-லக்ஷம் ரூபாய் சம்பாதிக்கலாமாம். இன்ஸ்பெக்டர், ஓவர்ஸியர், சூபரின்டெண்டெண்டு முதலிய உத்தியோகஸ்தர்கள் இவ்வியாபாரத்தில் மேல்பார்வை பார்ப்பதற்குக் கிரமமாய் 200, 300 பேர்கள் வரை வேண்டியதாயிருப்பார்கள். வேலைக்காரர்கள் 1000 பேர் வேண்டியதாக இருக்கும். இவர்கள் எல்லோருடைய சம்பளமும் கொடுத்தது போக 4, 5 லக்ஷம் ரூபாய் லாபமாக ஏற்படும்.

ஃ

ஆனால், லக்ஷக் கணக்காய்ப் பன்றிகளை விக்கிரயம் செய்வது அசாத்தியமாகையால், அவைகளுடைய கொழுப்பை எடுத்து ஏற்றுமதி செய்தும், கொழுப்பை வத்தி முதலியவைகளுக்கு உபயோகப்படுத்தியும் திரவியம் சம்பாதிக்க வேண்டுமாம். பன்றியின் தேகம் பாதி மாமிசமும், பாதி கொழுப்பும் நிறைந்த புஷ்டி யுடையதாகும். அவைகளின் தோல்களால்கூட அதிக திரவியம் கிடைக்கும். அதன் மாமிசம், ரத்தம் முதலியவைகளால் அதிகமான பலமுடையதாய்ப் பூமியானது அபரிமிதமாய் விளையும். புத்திமான்கள் இந்தப் பன்றி வியாபாரத்தைப் பரிகாசம் பண்ணாமல் செவ்வையாய்க் கணக்குப் போட்டுப் பார்க்கவேண்டுமென்றும், சந்தேகமிருக்கும் பக்ஷத்தில் ஒரு ஜோடிப் பன்றிகளைத் தமது தோட்டத்திலே வளர்த்துப் பார்க்கலாமென்றும் இந்த வியாபாரத்தைப் பற்றி எழுதிய கனவான் கூறுகிறார்.

ஃ

எந்த வியாபாரமாக இருந்தபோதிலும் பொறுமையுடனும் காத்தி

எந்தத் தினத்தில் உயிருக்குயிரானவர்களை இறக்கக் கொடுத்துக் கண்ணீர் விட்டார்களோ, அதேதினம் அடுத்த வருஷம் வருகையில் இறந்தவரது திதி என்று சொல்லிக்கொண்டு பாயசம் வடையுடன் சம்பிரமமாய் உண்கிறார்கள்.

ருந்து கஷ்டப்பட்டுச்செய்தால், அந்த உழைப்பு ஒருபோதும் வீணாகி விடாது. எதிலும் அல்ப ஆரம்பம் க்ஷேமகரம். சிறுகக் கட்டிப் பெருக வாழ் என்பது பழமொழி. உத்தியோகத்தை எதிர்பார்த்து வெறு மனே வீட்டில் காத்துக் கிடக்கும் சமயத்தை ஒரு வியாபாரத் துறையில் உபயோகித்துப் பழகிக் கொண்டால், உத்தியோகம் கிடைக் காவிடில், தாங்கள் தெரிந்துகொண்ட வியாபாரத்தில் பிரவேசித்துக் கொள்ளலாம். ஒரு சமயம் அதிர்ஷ்ட வச மாய் உத்தியோகம் கிடைத்துவிடில், வியாபாரத்தைத் தம் வீட்டார் பார்க்கவிட்டுத் தாம் உத்தியோகத்தை மேற்கொள்ளலாம். வீணே வீட்டி லிருந்தபடி காலம்போக்குவது நன்றன்று.

அது தர்ம நினைவு எனில் தவறுடையதாகாது.

சன்மார்க்க நெறிக்கு எவ்வித விரோதமுமின்றி நல்லதாயினும் கெட்டதாயினும் ஒரு தர்மம் நிறைவேறுவதற்காகத் துணிந்து செய்யும் ஒரு தவறுதலான செய்கையோ, சொல்லும் பொய்யோ குற்றமாகக் கொள்ளப்படாது. ஒரு தனவான் தன் குமாரனுக்கு, மிக்க ஏழையாகிவிட்டுத் தன்னிடமே இருக்கிற தன் புத்திரியின் குமார்த்தியை மணமுடிக்க நினைத்து ஜோதிடரை ஜாதகப் பொருத்தம் பார்க்கச் சொல்லுகிறார். ஜோதிடரோ பொருத்தங்கள் சரிவர அமையாவிடினும் அதை வெளியிட்டு விவாகம் நடவாதபடி செய்வது கூடாதென்று எண்ணுகிறார். பொருத்தம் சரியாயிருக்கிறதென்று பொய் கூறுவது பாவமெனினோ, அது அத்தனையாகப் பாவமாகாதென்று அவர் மனதுக்குத் தோற்றுகிறது. பெண்ணுக்கு இரண்டாயிரம் ரூபாய் நகைகள் போட ஏற்பாடாகி, விவாகச் செலவுக்கும் ஓரேநாட் கல்யாணமாக 400 ரூபாய் எடுத்து வைக்கப்பட்டுமிருக்கிறது. பெண்ணுக்கு இப்போது 10-வயது நடக்கிறது. 19-வயதில் மரணமென்று தெரிகிறது. அன்னிய இடத்தில் விவாகமானால் பெண் 19-வயதில் மரித்ததும் அந்த இரண்டாயிர ரூபாய் நகைகள் அன்னியர் வசமாகிவிடும். அதைவிட, தனவானின் குமாரனுக்கே விவாகம் செய்யின், விவாகச் செலவு 400-ரூபா மட்டுமே பெண்ணின் மரணத்தால் நஷ்டமாக ஏற்படும். மேலும், ஜீவனோடுள்ள தனவானின் ஏழைக் குமார்த்தியின் பெரிய ஆவலையும் திருப்திப் படுத்தியதாக ஆகுமென்று நல்ல நினைவே நினைத்து ஜாதகப் பொருத்தங்கள் சரியா யிருக்கிறதென்று கூறிவிடின் அது தப்பிதமாகுமா?

சென்றமாதம்

காலஞ் சென்ற ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி ஐயங்கார்:—

"போகமாட்டோமென்றாலும் மரணம் நம் பங்கே" என்றுர் வேத நாயகச் சீமான். "ஹிந்து," "சுதேசமித்திரன்" பத்திரிகைகளின் ஆசிரியராய் விளங்கி அரும்புகழ் படைத்த ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி ஐயங்காரவர்களும் கடைசியில் மரண தேவதையின் பக்கலில் 6–2–34-ல் சென்று விட்டனர். ஸ்ரீமான் ஐயங்காரின் ஜீவியம் மற்றவர்க்கு நல்வழி காட்டக் கூடியது. பிரபலமான இரு தின சரிகட்கும் ஆசிரியராய் விளங்கும் பேறு பெற்றுர். "சுதேசமித்திரன்" பத்திரிகையை ஆங்கில தினசரிக்குச் சமமாக உயர்த்தி மேன்மை கொள்ளச் செய்த பெரும் புகழ் அவருடையதே. அவர் "மித்திரன்" ஆசிரியராய் அமர்ந்த காலமுதற் கொண்டு தான் விசேஷித்த தேசியக் கிளர்ச்சிகள் தோன்ற ஆரம்பித்தன. ஒவ்வொரு தேசிய இயக்கத்திலும் அவர் பங்கு பெற்று, எல்லோரிடத்தும் நட்பு கொண்டு விளங்கிய பெருந் தன்மை போற்றற்பாலது. அரசாங்கமும், ஜனங்களும் மதிப்புடன் பாராட்டும் வகையில் அவர் நடந்து கொண்டமை அத்யந்தஸாகசமானது. கவியரசர் ஸ்ரீ சுப்பிரமண்ய பாரதியாரை விசேஷமாக ஆதரித்தவரும் அவரே. அவர் மிக்க அதிர்ஷ்ட சம்பன்னராதவின் எல்லா கௌரவ பூஜிதைகளும் அவரைத் தேடி வந்தடைந்தன. மிக்க பிரதாபம் பூண்ட இப்பெரியாரும் உத்யோக பதவியில் இலங்கிய தமது குமாரனை இழக்கக் கொடுத்து, மசான பூமியில் கதறும் படியான காலமும் ஒன்று முன்பு நேர்ந்தது. தம் வாழ்க்கையில் எத்துணையோ சோதனைகள் கண்டிடினும் சகித்துக்கொண்டு தேசப் பணி விடையில் முக்கியஸ்தராய்முதன்மை பெற்று நின்றுர். பத்திரிகா நிர்வாகத்தைத் திறமையுள்ளதாக்கி, முதலில் பத்திரிகைக்கு எவ்வித சோதனையும் நேராதவாறு காத்துக் கொண்டு, பின்னர் பத்திரிகையின் மூலம் ஜனங்களும் விசேஷப் பயனடையும்படி செய்ய வேண்டுமென்பது அவரது கோட்பாடாகும். இந்தத் திட்டத்தை அவர் பூரணமாக நிறைவேற்றி வைத்தார். அவரது பிரிவு தமிழ்நாட்டிற்கும், பொதுவாக இந்தியாவுக்குமே பெரிய நஷ்டமாகும். அவர் தமது சக்தியானுஸாரம் செய்யக்கூடிய கடமையை மனஸ்பூர்வமாகச் செய்து விட்டுச் சென்றுவிட்டார். அவரது வழியை நாம் பின்பற்றக் கடவோம். அவரது குடும்பத்தினருக்கும், "ஹிந்து", "மித்திரன்" காரியாலயங்கட்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேம். அவரது ஆத்மா சாந்தி யடைவதாக.

ஃ

உன்னை அவர்கள் சிலாகிப்பதும், உன் வீட்டிற்கு வந்து காண்பதும் அவர்களுடைய சுயநலமான சில காரியங்களுக்காக இருக்கலாம். அவ்வளவே தவிர, உனக்கு ஒரு லாபத்தையோ, நாலு காசையோ தேடிக் கொடுக்க வரவில்லை.

தபால் தந்திக் கட்டணங்களில் மாறுதல்:—

“பட்ட காலிலேயே படுவது போல” அறிவைப் பரவச் செய்யும் தொழிலுக்கு மேற்கொண்டும் ஒரு கஷ்டம் தொடர்ந்திருக்கிறது. அடுத்த எப்ரில்மாத முதற்கொண்டு புஸ்தக பாக்கெட்களுக்கு ஐந்து தோலா எடைக்குத் தபால் கட்டணம் முக்காலணுவாக உயர்த்தப்பட்டுள்ளது. இது புஸ்தக வியாபாரத்திற்குப் பெரும் சோதனையாகும். முன்பு பத்து தோலா எடைக்கு அரையணு தபால் கட்டணமாக இருந்ததைப் பிறகு ஐந்து தோலா எடைக்கு அரையணுவாக மாற்றினர். இதுவே மிக்க சிரமமாக இருந்திருக்கையில் இப்பொழுது இன்னும் முக்காலணுவுக்கு அதிகப்படுத்தி விட்டதானது எவரையும் கலங்க வைக்கும். புஸ்தக விலையில் மூன்றிலொரு பாகத்தைத் தபால் கட்டணத்திற்கே செலுத்தும்படி நேர்ந்துளது. பத்திரிகைகளுக்குக் காலணு தபால் விகிதம் ஏற்படுத்தியதுபோல, புஸ்தகங்களைத் தபாலில் அனுப்புதற்கும் சகாயமான கட்டணங்கள் ஏற்பட வேண்டியது அவசியம். இதுபோக, மற்ற மாறுதல்களில் சகாயம் செய்யப்பட்டுள்ளது. அரை தோலா எடையுள்ள கவருக்கு ஒரு அணு விகிதம் புதிதாய் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒரு அணு கவருடன் இப்போதுள்ள $2\frac{1}{4}$ தோலா எடை கொண்ட ஒன்றேகாலணு கவரும் இருந்து வரும். தபால் கவருக்குத் தனியாக ஒரு பைசா அதிகமாக இருந்தது இனி நிறுத்தப்பட்டு விடும். தந்திக் கட்டணம் 8-வார்த்தைகளுக்கு 9-அணுவாகக் குறைக்கப்பட்டுளது. கார்டின் விலை இப்போதுள்ளதுபோல் முக்காலணுதான். இன்னும் காலணு அதிகம் செலுத்தி விட்டால் ஒரு அணு கவரில் எழுதலாம் போலும்.

பண்டித ஜவஹரிலால்நேரு:—

“வருவது வழியில் நிற்காது” என்பதாக, சமீபத்தில்தான் சிறையினின்றும் வெளிப்போந்த இவர் மீண்டும் இருவருட சிக்ஷை பெற்றுச் சிறை சென்றுவிட்டார். மிகு பிணியால் வருந்தும் தமது அன்னையின் பக்கத்தில் இருப்பதற்காகவேனும் அவர் நிதானத்தன்மையில் ஜாக்கிரதையுடன் சென்றிருந்தால் நன்றாயிருக்கும். யாவும் விதியின் பிழை.

மகாத்மா காந்தி தத்துவம்

இது இந்து, மகமதிய, பார்ஸி, கிரிஸ்து மதங்களின் கோட்பாடுகளையும், தன் அனுஷ்டானத்தையும், அனுபவத்தையும் ஒன்று சேர்த்து மகாத்மா காந்தி இயற்றிய அரிய நூல். இம்முறைகளையே காந்திஜி தினம்மும் அனுட்டித்து வருகிறார். இது நீதிக்கு பொக்கிஷம். ஞானத்திற்கு சுரங்கம், எளிய நடையில் எழுதப்பட்டது. விலை 0—4—0. நாலரை அணு தபால் பில்லை அனுப்பினால் ஓர் புத்தகம் அனுப்பப்படும்.

அமிர்த குணபோதினி ஆபீஸ், 158-A, பிராட்வே, சென்னை.

மாயமாய்ப்போன மங்கை.

பால விவாகம்

சாரதாச் சட்டம்.

(562-ம் பக்கத் தொடர்ச்சி.)

மகாதேவையர்:—நில் அம்மா நீ இப்பொழுது இங்கேதானிருக்கணும்; கல்யாண மோல்லியோ?

நீலாம்பாள்:—ஸரஸம் மாத்திரம் கல்லியாணம் பண்ணிக்கல்லியே? அவள் பண்ணிண்டால் நானும் பண்ணிக்கொள்வேன்.

மஹா:—இதென்ன அம்மா, அவளுக்குப் பண்ணலாம்; அவம்மா அப்பா பண்ணுவார்கள்.

நீலா:—அவம்மா இதோ இருக்கா, கல்லியாணம் பண்ணச் சொல்லுங்களேன் இப்பவே.

மஹா:—பண்ணலாம்மா, மாப்பிள்ளை தேடவேண்டாமா? உனக்குத் தேடவதே இவ்வளவு கஷ்டமாயிருந்ததே?

நீலா:—ஆமாம் நம்பண்ணுவுக்குப் பண்ணிவிடறது; இது என்ன பிரமாதம் என்று அண்ணு அண்ணு என்று கூவிக்கொண்டு ஓடினுள். அச்சமயம் அங்குநின்றிருந்த ஸரஸத்தை மஹாதேவையரும் பாகீரதியும் மாறி மாறிப் பார்த்தனர். உடனே இருவர் முகத்திலும் புன்னகை தவழ்ந்தது. அவ்விருவரும் வாய்மொழியின்றியே விழிகளால் ஏற்றுக்கொண்டனர். அதற்குள் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றிருந்த தன் தமையன் பத்து வயதுள்ள நடராஜனைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து ஸரஸத்தின் பக்கத்தில் நிறுத்திக் கூத்தாடினுள் நீலா! ஒன்றுமறியாத நடராஜன் ஸரஸத்தைப் பார்த்து எப்போ வந்தெ ஸரஸம்? உனக்கு முத்துமாலை நன்னுருக்கே; நீலா போட்டாளா என்ன என்று அதைத் தொட்டுப் பார்த்து நின்றுன். உடனே மஹாதேவையர் தேகமும் பாகீரதியம்மாள் தேகமும் சிலிர்த்துப்பரவசமுற்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்து ஸ்தம்பித்து நின்றனர். இவை யாவும் விளையாட்டுப்போல் வெகு சீக்கிரத்தில் நடந்தது. உடனே மகாதேவையர் தம் மனைவியைப் பார்த்து இது தெய்வ ஸம்மதம்; இதை நாம் தடுக்-

கக்கூடாது. பணக்கார ஸம்பக்தம் நமக்கு வேண்டாம். நம்முடைய ஸொத்து ஏராளமானது. ஏழைவீட்டுப் பெண்ணு யிருந்தாலென்ன, களங்கமற்ற முகத்தைப் பார். நம் நீலாவைப் போலவே யிருக்கிருள். ஸரஸ்வதி யென்ருல் இவளுக்கே தகும் என்ருர்.

பாகீரதி:—நாம் எதிர்பாராமல் ஆண்டவன் ஆக்கினைபோல் விவாகமே ஆனது போலும். நாம் காணும் காக்ஷியை நாம் என்றும் தடுக்க முடியாது. குழந்தையின் ஏற்பாடு ஈசன் ஏற்பாடே தான்; என் அபிப்பிராயமும் கேட்க வேண்டுமோ? அதோ நம் செல்வள் மாங்கல்லியம் தரித்ததேபோல் முத்தாரத்தைப்பிடித் துக் கொண்டு நிற்கிருள். ஏழைகளேயே பணக்காரர் கொள்ள வேண்டும். இது விஷயம் ஜானகியையும் அவள் புருஷனையும் கேட்க வேண்டாமா?

மஹாதேவ:—அவரென்ன சொல்லப் போகிருர், என்று அப்பந்தரில் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டிருந்த ஒருவரை, கோபா லையரே! கோபாலையரே!! என்று கைகளைத் தட்டிக் கூப்பிட கோபாலையர் நாலு பக்கமும் திரும்பிப் பார்த்து, மஹாதேவை யர் கூப்பிடுவதைக் கண்டு இடுப்பு வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டு இதோ வந்தேனென்று ஓடி வந்து கைகட்டி நின்ருர்.

மஹா:—கோபாலையரே, நம்ம நடராஜனுக்குக் குழந்தை ஸரஸ்வதி யைக் கன்னிகாதானம் செய்து கொடுப்பீரா? இவ்வார்த்தை யைக் கேட்டவுடன் நடராஜன் வெட்கப்பட்டுக்கொண்டு ஓடி னுன்; ஜானகியம்மாள் திகைத்து ஆச்சரியமும் ஸந்தோஷமும் கொண்டு, தன் புருஷராகிய கோபாலையர் முகத்தைக் ஆவலாய்க் கவனித்தாள். கோபாலையரோ கனவோ அல்லது நினைவுதானே என்று திகைத்து நின்ருர். மஹாதேவையர் ஏனையா உமக் கிஷ்டமில்லையா? என்று கேட்டார்.

கோபா:—பிரபுவே! இதென்ன என்னைச் .சோதிக்கிறீர்களா? என் அந்தஸ்தெங்கே? தங்கள் அந்தஸ்தென்ன? இது நன்ருயிருக் குமா? என்று நமஸ்கரித்தார்.

மஹா:—அய்யா, அந்தஸ்தைப் பற்றி நான் உம்மைக்கேட்கவில்லை. உமது ஸம்மதத்தையே கேட்கிறேன். இதற்குத் தடை சொல்லமாட்டீர்களென்று நினைத்தேன். இது தெய்வ ஸம்

மதமான விவாகம்; திடீரென்று எங்களுக்கு அவாவை உண்டாக்கியது; யார் என்ன சொன்னாலும் எனக்கு லக்ஷியமில்லை. தாமதிக்க வேண்டாம். முகூர்த்தவேளை வந்துவிடும்; என்ன சொல்லுகிறீர்? என்றார். உடனே கோபாலையர் ஏதும் சொல்லத் தெரியாதவராய் தங்கள் சித்தம், அவ்வளவு பாக்கியம் என் குழந்தைக்குக் கிடைக்குமானால் நான் மகா பாக்கியவானன்றோ; தங்கள் ஸம்பந்தம் எனக்கு வாய்க்கக்கூடியதா என்றார்.

அங்கு கூடியிருந்த ஜனங்களுக்கெல்லாம் இது ஏதோ ஒரு பெரிய விசேஷமாகத் தோன்றியது. எல்லாரும் மிகுந்த ஆச்சர்யப்பட்டு மூக்கில் விரல் வைத்தார்கள். சிலர் மகாதேவையரின் பெருந்தன்மைக்கோ ரளவுண்டோ என்றார்கள். கோபாலையருக்கு வாய்த்த அதிருஷ்டமே அதிருஷ்டம் என்றனர் சிலர். அதற்குள் சில வைதிகப் பிராமணர்கள் நாழிகையாயிற்று, பரதேசக் கோலம் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்று பிள்ளை வீட்டிலிருந்து வந்து சொன்னார்கள். உடனே மகாதேவையர், பாகீரதி, குழந்தைகளுக்கு மங்களஸ்நானம் முதலியது செய்து பரதேச கோலத்துக்கு ஏற்பாடு செய் சீக்கிரம் என்று சொல்லிவிட்டு, இன்னொரு விவாகத்திற்கு வேண்டியவை ஏற்படுத்தத் தகுந்த மனிதரிடம் உத்தரவிட்டார். பிரபுவாகிய அவர் எத்தனை கல்லியாணம் வேணுமானாலும் நினைத்தமாத்திரத்தில் செய்ய எல்லாம் ஆயத்தமாயிருந்தார். அவர் எத்தனையோ தர்மக் கல்லியாணம் செய்து வைத்தவர். ஆகையால் அவர் வீட்டில் எது நினைத்தாலும் காமதேனுவைப்போல் கொடுத்துக் கொண்டிருந்தது ஆச்சர்யமல்ல.

எல்லாம் ஸரிவர ஸகல ஏற்பாடுகளுடன் நடந்து ஸகலவித வாத்தியங்களும் ஒலிக்க,

ஸௌ. நீலாம்பாளுக்கும் — சி. பத்மநாபனுக்கும்

ஸௌ. ஸரஸ்வதிக்கும் — சி. நடராஜனுக்கும்

வெகு விமரிசையாகக் கல்லியாணம் நடந்தேறியது. அக் கல்லியாண மேடைமேல் வீற்றிருந்த இரு கல்லியாணக் குழந்தைகளைக் கண்டவர் கண்களை வேறு விதத்தில் திருப்ப முடியாமலிருந்தது.

நீலா எழுந்து ஓடவில்லை. அவளிஷ்டப்படி ஸரஸத்துடன் பேசியும் சிரித்தும் ஆனந்தமாயிருந்தாள். குழந்தைகளானதால் வெட்கம் ஏற்படாமல் சகஜமாயிருந்தது எல்லாருக்கும் பார்க்க வேடிக்கையா

யிருந்தது. புது மாப்பிள்ளையாகிய பத்மநாபன் 12-வயதுப் பைய னும் புது மனிதர்களானதால் கொஞ்சம் சங்கோசமாகவே யிருந்தான். கோபாலையருக்கும் ஜானகிக்கும் அது தெய்வலோகம் போலவே தோன்றியது. மகாதேவையரும் பாகீரதியும் குழந்தை களைக்கண்டு களிப்புற்று இக் குழந்தைகள் எல்லாவித பாக்கியங் களுடனும் நல்லொழுக்கத்துடனும் ஸுக ஜீவிகளாய் வாழவேணு மென்று பகவானைத் துதித்தார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் யானையின் மணியும் ஜே ஜே என்ற முழக்கமும், ஒலிக்க பிருதுகளு டன் சிலர் பந்தரில் நுழைந்தனர். உடனே ஜனங்கள் அரசருடைய சன்மானம், அரசருடைய சன்மானம் என்று ஆரவாரித்தனர். மகா தேனவயர் எழுந்திருந்து அவர்களை வரவேற்று அவரவருக்குத் தகுந்த மரியாதையுடன் உபசார வார்த்தைகளும் சொல்ல அவர்கள் கொண்டு வந்த சீர்வரிசைகளைக் குழந்தைகளுக்கு ஆசீர்வதித்துக் கொடுத்தார். பிறகு சகல ஜனங்களுக்கும் சன்மானங்களும் தக்ஷிணை யும் அவரவர் மனங்குளிரக் கொடுக்கப்பட்டன. எல்லா ஜனங்களும் ஹிருதய பூர்வமாக தம்பதிகளையும் மஹாதேவையரையும் வாழியென வாழ்த்தி அறுவகையுண்டி சம்பிரமமாகச் சாப்பிட்டு ஆனந்தங் கொண்டார்கள். சம்பந்தி வீட்டாருக்கோவென்றால் எல்லாம் திருப் திதான்.

மற்றவர்களின் வாயை மூட முடிகிறதா? ஆனால், எல்லாம் தானதருமத்திலேயே இருக்கிறதேயொழிய கொஞ்சமாவது பட்ட ணவாஸ திட்டமாக இல்லையே. இந்தமாதிரி மலை மலையாகச் சாதம் குவித்துப் பஞ்சை பரதேசிகள் முதல் ஒரே சமமாகப் போடுகிறார் கள். ஒரு பாட்டுக் கச்சேரி சதுர்க்கச்சேரி இல்லாத கலியாணம் எதற்குப் பிரயோஜனம்? அது—என்ன கலியாணம்? சம்பந்திப் பிரா மணன் ஒரு பைத்தியக்காரன்போலிருக்கு; ஆஸ்தியிருந்தென்ன பாஸ்தியிருந்தென்ன? பிள்ளைக்குக் கல்லியாணம் பண்ணின கூத்து நன்றாயிருக்கிறது! ஏதோ ஒரு பெண் பொங்கசாதம் சாப்பிட்டு விட்டுப் பந்தகாலைப் பிடிச்சிண்டு நின்னதாம்; அத்தைப் பிடிச்சுக் கட்டிவைச்சிருக்கானும்! வெகு அழகு. ஏன்! நம்மாத்தில் வேண பெண்கள் இருக்கக் கண் தெரியவில்லையே. அவர்தான் அப்படியென் றாலோ சம்மந்தியம்மாளோ தலையாட்டிப் பொம்மைபோலத்தானிருக் கிறாள். கொஞ்சங்கூட சாமர்த்தியமேயில்லை. இந்தக் காலத்திலே கூட இப்படி பொம்மனாட்டி யிருப்பாளா? சீர் ஏது? சௌத்தியேது? பொண்ணைப் பெற்றவர் குடுத்துவைத்தவர் என்று பேசிக்கொண் டனர். (தொடரும்.)

எட்டாவது வால்யம் ஸம்பூர்ணம்.

" அமிர்த குணபோதினி "

ஸ்ரீமுகஹூ த்திய பங்குனி மாத பஞ்சாங்கம்.

மீன (சாப)ஸ்ரீ 4—10

யோகம்	இங்.	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
ஸி-அ	14	1	புத	சஷி-33-49, சத-39-49, ஷடசீதி குன்யதிதி.
ஸி	15	2	வியா	● 28-22, பூட்-36-10. அமாவாஸை.
ஸி-அ	16	3	வெ	பிர-23-44, உட்-33-47, யுகாதி.
பி-ஸி	17	4	சனி	துவி-20-40, ரே-32-32, திதி துவயம், உமாவிரதம்.
ஸி-பி	18	5	ஞா	திரி-18-59, அசு-32-51, உத்தம மன்வாதி.
ஸி-ம	19	6	திங்	சது-19-0, பர-34-54, கரிநாள். லக்ஷ்மி விரதம்.
ஸி-அ	20	7	செவ்	பஞ்-20-54, கிரு-38-40, கிருத்திகா விரதம்.
ஸி	21	8	புத	ஷஷ்-2-34, ரோ-44-7, மேஷாயனம் 16-45.
ம	22	9	வியா	ஸப்-29-38, மரு-50-45. ஸந்தான ஸப்தமி.
ஸி	23	10	வெ	அஷ்-35-41, ஆரு58-18, அசோகாஷ்டமி.
ஸி	24	11	சனி	நவ-42-7, புந-60-0, ஸ்ரீராமநவமி.
ஸி	25	12	ஞா	தச-48-25, புந-5-59, மயிலை ரிஷபவாஹனம்.
ஸி	26	13	திங்	ஏகா-53-55, பூச 13-13, திருநாராயணபுர வைர
ஸி	27	14	செவ்	துவா-58-6, ஆயி-19-29, மயிலை ரதம், [முடி.
ஸி-அ	28	15	புத	திர-60-0, மக-24-27, மயிலை அறுபத்துமூவர்.
ஸி-ம	29	16	வியா	திர-0-47, பூர-28-0, திருவான்மியூர் நடனம்,
ஸி-அ	30	17	வெ	சது-1-52, உத்-29-52, பங்குனி உத்திரம்.
ம	31	18	சனி	○ 1-25, உப58-12, ஹஸ்-30-23, நாமகல்தேர்.
ஸி	1	19	ஞா	துவி-56-37, சித்-29-42, கரிநாள்.
அ-ம	2	20	திங்	திரி-52-46, ஸ்வா 28-3, தின்னனூர் கருடசேர்வை
ம-ஸி	3	21	செவ்	சது-48-19, விசா-25-39.
அ-ஸி	4	22	புத	பஞ்-43-26, அநு-22-26.
பி-ஸி	5	23	வியா	ஷஷ்-38-20, கேட்-19-35.
அ-பி	6	24	வெ	ஸப்-33-9, மூல-16-16, திருவனந்தபுரம் தின்னனூர் ரதம்.]
ஸி	ஏப்ரல் 7	25	சனி	அஷ்-27-55, பூரா 12-53,
அ	8	26	ஞா	நவ-22-48, உரா-9-35, தின்னூர் தீர்த்தம்.
அ-ஸி	9	27	திங்	தச-17-46, ஸ்ரீவ-6-21, சஞ்சி பல்லோத்ஸவம்.
ஸி-ம	10	28	செவ்	ஏகா-12-58, அவி-3-20, ஸர்வைகாதசி.
ஸி அ-ஸி	11	29	புத	துவா-8-28, சத-0-36, உப-57-42, பிரதோஷம்,
ஸி	12	30	வியா	திர-4-15, உட்-56-37, சிவராத்திரி, சிவஸ்னனம். [விஷுவத் 8—ஸ்ரீ பவஹூ சித்திரைமூ
அ	13	1	வெ	சஷி 1-4, உப● 67-31, ரே-55-55, மேஷரவி 22-1,

ரவி குஜ			
புத சனி	15உ-க்கு ராசி		கேது
சுக் ராகு			
			குரு

Printed & Published by the Proprietor E. M. Gopalakrishna Kone,
At the Amirtha Gunabodhini Press, 158-A, Broadway, Madras.